வெளியீடு எண் 268.

இராமேசுவர யாத்திரை



பாம்பன் பாலம்.

1017

913

தருமபுர ஆதீனம்

தருமபுர ஆதீன ஸ்தாபகர்,

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

913

உ

குருபாதம்.

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

குருபூஜை விழா அணிமலர்

13—6—52.

வெளியீடு எண். 268

உ

குருபாதம்.

இராமேசுவர யாத்திரை.

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்

திருவுள்ளப்பாங்கின்வண்ணம்,

வெளியிடப்பெற்றது.

எழுதியவர் :

வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

1952.

பிரதிகள். 1000.

ஞானசம்பந்தம் பதிப்பகம்.
தருமபுரம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

முகவுரை.

மக்கள் அநுபவம் யாத்திரைகளால் வளர்ச்சியடைகிறது. உலக அநுபவமும் தெய்வ அநுபவமும் என அநுபவம் இருவகைத்து. பொதுவாக இரண்டுமே மக்களுக்குத் தேவையானாலும் தெய்வாநுபவத்தை விளைவிக்கக்கூடிய யாத்திரைகள் சிந்தைக்கு அமைதியை என்றும்அளிப்பதால் சிறந்தது. அதனை நமதுபழைய ஆசாரியப் பெருமக்களாகிய திருஞானசம்பந்தாதிகள் நடந்து காட்டினார்கள். அந்த வழியிலே பின்னர் எழுந்தருளிய சமயத் தலைவர்களும் நடந்துகாட்டுதல் இன்றியமையாதது என்பதனைத் தருமபுரஆதீன மகாசந்நிதானம் அவர்கள் உணர்த்திவருகிறார்கள். இவர்கள் யாத்திரை உபதேச யாத்திரையாக – உயர்ந்த தத்துவங்களை அறிவிக்கும் யாத்திரையாக அமைந்திருப்பதை இந்நூல் எடுத்துக்காட்டுகிறது.

இந்நூலில் யாத்திரை அநுபவங்களும், அநுபவங்களில் விளைந்த அறிவு அமுதங்களும் அங்கங்கே குறிக்கப்பெற்றுள்ளன. யாத்திரையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்அவர்களோடுசெல்லும் வாய்ப்புக் கிடைத்தமையால் அடியேன் அடைந்த தெய்வ அநுபவங்கள் பல. அவற்றையும் இந்நூல் ஒருவாறு தொகுத்து உணர்த்துகிறது. ஆதிகுருமூர்த்திகளின் குருபூஜை நினைவு மலராக அவர்கள் வழிவந்த 25–வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் யாத்திரைநூல் வெளிவருகிறது. அன்பர்கள் பெற்றுப் பயன் பெறுவார்களாக.

ஆக்கியோன்.

பொருளடக்கம்.

பிள்ளையார் பூசை ஏற்றுக்கொண்டார்		1
சொக்கலிங்கம் துணை	...	3
குருநாதர் ஆணை	...	5
அன்னையின் அன்பு	...	
யாத்திரை	...	7
மலைக்கோட்டை மௌனமடத்தில்		9
தமிழ்மன்னர் வரவேற்றார்	...	10
இராமேசுவரத்தில்	...	20
ஸ்ரீ காசிமடத்து உபசாரம்	...	26
இராமநாதர் வழிபாடு	...	28
அர்த்தஜாம வழிபாடு	...	42
தனுஷ்கோடி யாத்திரை	...	45
மறுநாள்	...	48
என்றும் மறக்காத நிகழ்ச்சி	...	57
கனவா ? நனவா ?	...	59
சிந்துபூந்துறை	...	60
கன்னியாகுமரி	...	63
சுசீந்திரம்	...	73
திருவனந்தபுரம்	...	74
திருநெல்வேலியில்	...	79

பொருளடக்கம்

திருச்செந்தூரில்	...	84
காசிமடத்தின் சார்பில் வரவேற்பு		88
மீண்டும் திருச்செந்தூர்	...	91
குலசேகரன்பட்டினம்	...	94
விக்கிரமசிங்கபுரம்	...	97
பாபநாசத்தில்	...	99
சிவசைலம்	...	104
திருக்குற்றாலத்தில்	...	106
மகாசந்நிதானமும் - ரஸிகமணியும்		108
சங்கரநயினார்கோயில்	...	123
இராஜபாளையத்தில்	...	124
ஸ்ரீ வில்லிபுத்தூரில்	...	128
மதுரையில்	...	133
தருமையில்	...	134
ஆதீனப்பணிகள்	...	135

உ

குருபாதம்

இராமேசுவர யாத்திரை

எப்போ நகத்தும் நினைவார்க் கிடரில்லை
கைப்போ நகத்தின் கழல்.

பிள்ளையார் பூசை ஏற்றுக்கொண்டார் :

கடவுள் கருணைமிகுதியால் மக்களைத் தாமாகவந்து ஆட்கொள்ளுவதும் உண்டு. மக்கள் தாமே கடவுளைச் சென்று பற்றுவதும் உண்டு. இதனை முறையே மர்க்கட நியாயம், மார்ச்சாரகநியாயம் என்பர் நூலோர். இந்த இரண்டாலும் எய்தப்படுவது இறைவன் கருணைதான். ஆனால் இறைவனே வலியவந்து ஆட்கொள்வதிலும் வழிபாட்டை ஏற்றுக்கொள்வதிலும் உண்டாகின்ற இன்பம் உயர்ந்ததே.

கரஆண்டு புரட்டாசித்திங்கள் மூன்றும்நாள் புதன் கிழமை மாலை ஐந்துமணியிருக்கும். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வழக்கம்போல் பசுமடத்தைப் பார்வையிட வெளியே எழுந்தருளினார்கள். ஸ்ரீ தரும புரீசுவரர் கோயில் வந்ததும் ஸ்தலவிநாயகர், சந்நிதானம் அவர்களின் திருவுள்ளத்தைக் கவர்ந்தார். குருக்களை

அழைத்து அபிஷேகம் செய்யுமாறு ஆணை தந்தார்கள். பின்னர் படிக்கட்டளை, அனைத்துமே கொண்டுவரப் பட்டன. மடத்தில் வெள்ளரிப்பிஞ்சு ஏராளமாக வந்திருந்தது. விநாயகருக்கு அதுஉகந்தபொருளாயிற்றே; நிவேதனத்திற்குக் கொண்டுவரலாமே என உத்திர விட்டார்கள். காஞ்சிபுரம் வேட்டி ஒன்று வாங்கிவரப் பட்டது. அபிஷேககாலத்தில் ருத்திரசமகங்கள் ஆதீனப் பாடசாலை சிவாசாரிய மாணவர்களால் ஓதப்பட்டன. ஒருபக்கம் தேவாரப் பாடசாலை மாணவர்கள் தேவாரம் ஓதினர். கல்லூரி மாணவர்கள் விநாயகர் அகவல், அநுபூதி இவற்றைப் பாராயணம் செய்தனர். பக்ஷணங் கள் வந்தன. மாணவர் பாராயணஞ்செய்த 'அப்பமொடு அவல்பொரி' என்ற சொற்றொடர், அவல் கடலை சர்க்கரை முதலியவற்றை ஏராளமாக வரவழைத்து விட்டது. எல்லாம்கூடி முறைப்படி செய்விக்கப்பெறு கின்ற மகாபிஷேகமும், மகாநைவேத்தியமும், மகாலங் காரமும் கூடிய பெரிய ஆராதனையாக ஆயிற்று.

இதனைக்கண்டு மகிழ்ந்த மகாசந்நிதானம் அவர்கள் நைவேத்திய விநியோகத்தின்பின் மாணவர்கள் அனை வருக்கும் காசு வழங்கினார்கள். எல்லாவகையிலும் பூசை முன் எண்ணமில்லாமலே திருவருள் வாய்ப்பாக முதல்தரமான பூசையாக ஆயிற்று. இவ்வாறு எண்ணாத முன்வந்துநிற்கும் எமையாளும் ஈசன் செயலை எண்ணிப் பார்க்க, அன்றைய பஞ்சாங்கத்தைத் தேடினோம். பார்த் ததில் சுக்கிலபக்ஷ சதுர்த்தியும் மகாபரணியும் கூடிய அமிர்தநாளாக இருந்தது. இதை விநாயகப்பெருமான்

சந்நிதியிலே தெரிவித்துக்கொண்டவுடன் மகாசந்நிதானம் அவர்கள் விநாயகப்பெருமான் திருவருள் இருந்தபடியை வியந்தார்கள். நமது யாத்திரை இனிது முடிய எதிர் பாராதவண்ணம் விளைந்த இறைவன் கருணைப்பெருக்கு இது என்று மகிழ்ந்தார்கள். அதனால் மீட்டும் ஒருமுறை விநாயகர் அகவல் பாராயணம் செய்யப்பட்டது. இவ்வாறு பிள்ளையார் பூசையேற்றுக்கொண்டார். கைப்போதகத்தின் கழல் எப்போதும் நினைவார்க்கு இடர் ஏது?

சொக்கலிங்கம் துணை :

மறுநாள் வியாழக்கிழமை. காலை எட்டுமணி. மகா சந்நிதானம் அவர்களுக்கு உபவாச மௌன தினம். சொக்கலிங்கப்பெருமானிடம் விடைபெற்றுக்கொள்ள விசேஷ அபிஷேக] அலங்காரங்களுக்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள். பால் நூறுசேர்; பன்னீரும் அப்படியே. ஆதீன ஓதுவாமூர்த்திகள் தேவாரபாராயணம் செய்ய, விதிப்படி சொக்கலிங்கப்பெருமானுக்கு அமைதியுடன் அபிஷேகம் செய்யப்பெற்றது. அருச்சனை நடைபெற்றது. சொக்கலிங்கப்பெருமானை விட்டுப் பிரிந்து சேதுயாத்திரைக்குச் செல்லவேண்டுமே என்ற சிந்தனை மகாசந்நிதானம் அவர்களைப் பற்றியது.

ஆதீன ஓதுவாமூர்த்திகள் 'முத்தினை மணிதன்னை' என்ற பதிகத்தைப் பாடினார். அப்பதிகத்தின் ஈற்றடியில் 'எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே' என்ற சொற்றொடர் 'எத்தனைநாள் பிரிந்திருப்பேன் என் அருமைச் சொக்கனையே' என்ற

எண்ணத்தை இடையறுது உண்டாக்கிற்று என்றும், அசரீரிபோலச் சரீரியாகிய ஓதுவார் திருவருள் வாய்ப் பாகப் பாடியது சிந்தையை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது என்றும் பின்னர் அருளினூர்கள்.

இவ்வண்ணம் சொக்கலிங்கப்பெருமானை விட்டுப் பிரியவும் முடியாமல், காசியாத்திரையை முடித்தவர்கள் கோடியில் நீராடி இராமநாதப்பெருமானைக் கங்கை யாட்டவேண்டிய கடமையைவிடவும் முடியாமல் சொக்க லிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் பெட்டகக் கோயிலைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போவதும் மீள்வதுமாக இருந்தார்கள். இந்நிலை அங்கிருந்த அடியார் பெருமக்களுக்கும் எங்கட்கும் அன்பின் சிகரமாகிய கண்ணப்பர் நினைவை உண்டாக் கிற்று. அடியேன் நாவில்,

"போதுவர் மீண்டுசெல்வர் புல்லுவர் மீளப்போவர்
காதலின் நோக்கிநிற்பர் கன்றகல் புனிற்றுப்போல்வர்"

என்ற சேக்கிழார் திருவாக்கு மெல்லெனத் தவழ்ந்தது. பிறர்செவியிற்சென்று கேட்கும் அளவிற்ருகிய வைகரி வாக்காக இருந்தமையால் இதனைச் செவியேற்ற மகாசந்நி தானம் அவர்கள் 'சோர்தரு கண்ணீர்வாரப் போய்வரத் துணிந்தேன்' என்று மலர்க்கையால் தொழுது போந் தார்கள். அப்போது தருமபுரீசுவரர்கோயில் மணியும் ஒலித்தது. இறைவன் ஆணைதந்தார் என்ற மகிழ்ச்சி அனைவர் முகத்திலும் தாண்டவமாடிற்று. சொக்கலிங்கப் பெருமான் இவ்வாறு ஆணைதந்தார்.

குருநாதர் ஆணை :

எல்லாம் குருவருள்; குருவே சிவம்; சிவமே குரு, ஆதலால் குருநாதனாகிய ஞானபுரீசுவரருக்கும் விதிப்படி வழிபாடாற்றி விடைபெறவேண்டும் என்று எண்ணி அன்றுமாலை ஏழுமணி அளவில் மஹந்நியாச ருத்திரங்களோடு மகாபிஷேகம் செய்வித்தார்கள். பெருமானுக்கு ஐந்து திருமுகங்களாதலின் ஐந்து திருமுகங்களுக்கும் தனித்தனி அர்ச்சனை செய்வித்தல் மரபு. ஆகவே ஐந்து பேர் ஸகஸ்ரநாமத்தை வாசிக்க, ஐந்து குருக்கள் பெருமானைச் சுற்றிலும்நின்றுகொண்டு வில்வம், மாவிலிங்கை, விளா, கிளுவை, நொச்சி ஆகிய பஞ்ச வில்வங்களைக் கொண்டு அருச்சித்தார்கள். ஐந்துவகையான நிவேதனங்கள் நைவேத்தியம் செய்யப்பட்டன. அலங்கார தீபங்களும், உபசாரவகைகளு \கற்பூராரத்தியும் அப்படியே தனித்தனியாக ஐந்து முகங்களுக்கும் செய்யப்பட்டன.

ஞானாம்பிகைக்குச் சந்தனக்காப்பு அலங்காரம் செய்விக்கப் பெற்றது. ஞானாம்பிகை பாண்டிப்பிராட்டியாகிய அங்கயற்கண்ணியாக மணிமகுடம் தரித்துக் சாட்சி அளித்தாள். ஒன்பது சிவாசாரியர்கள் சூழ்ந்து நின்று ஒன்பது சக்திகளையும் ஆவாஹித்து, ஒன்பதுபேர் ஸகஸ்ரநாமம் வாசிக்க அருச்சனைசெய்தார்கள். ஒன்பது வகையான மணந்தரும் பூக்களும், மஞ்சள் குங்குமம் இவைகளும் பயன்படுத்தப்பட்டன. ஒன்பதுவகையான நைவேத்தியங்களும், பக்ஷணங்களும், பழவர்க்கங்களும் நிவேதிக்கப்பட்டபின் ஒன்பது தீபாராதனைகளும் நடை

பெற்றன. 'தொடுக்கும்கடவுள்' என்ற பிள்ளைத்தமிழ்ப் பாட்டு எல்லார் செவியிலும் இழுமென ஒலித்தது. 'துறைத்தீந் தமிழின் ஒழுகு நறும் சுவையே!' 'புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே!' என்ற சொற்றொடர்கள் சிந்தைக்கு மருந்தாய் உயிருக்குத் தித்திக்கும் செழுந்தேனாய்ப் பெருமகிழ்ச்சி அளித்தது. அம்மையின் அருளுருவம் அறிவுருவமாகச் செவிவழிபுகுந்து சிந்தையில் நிறைந்தது.

அன்னையின் அன்பு.

மனிதன் உறுதியால் உயர்கிறான். உள்ளத்தின் நிலைத்த தன்மையே உறுதி. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்பது பொய்யாமொழி. அந்த உறுதி கடவுளிடம் செலுத்தப் படும்போது எல்லாக் காரியத்தையும் நிறைவேற்றும். அதுவும் அன்னையிடம் அன்புள்ளங் கொள்ளும்போது ஆகாதது என்ன? 'நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை' என்ற உறுதிதான் வேண்டப்படுவது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அபிராமி யன்னையிடம் அத்தகைய உறுதியுள்ளம் படைத்தவர்கள். ஆதலால் அம்மையிடமும் ஆணைபெற்றுப்போக மறு நாள் வெள்ளிக்கிழமை மாலை ஆறுமணிக்குத் திருக் கடவூர் சென்றார்கள். அபிராமியன்னை விழிக்கே அரு ளுண்டு வேதஞ்சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சுண்டு

என்ற எளிமையுடன் எழுந்தருளியிருப்பவள். அவ்வன்னைக்குச் சிறப்பான முறையில் பூசனை செய்வித்து, சந்தனக்காப்பு அலங்காரமும் நவசக்தி அர்ச்சனையும் நிறைவேற்றினார்கள். அர்ச்சனைக்கு வாசிக்கப்பெறும் மந்திரம் லளிதா சகஸ்ரநாமமாகும். அம்மை தென்மொழி வடமொழி இரண்டையும் ஒருசேரச் சுவைப்பவளாதலின் சகஸ்ர நாமத்தோடு அபிராமியந்தாதி நூறு பாடல்களும் இசையுடன் ஓதப்பெற்றன. இரண்டும் ஒருசேரமுடிந்தது. பின்னர் பிள்ளைத்தமிழிலிருந்து சில பாடல்களை ஓத மகாசந்நிதானம் அவர்கள் ஆனந்தக் கண்ணீர் வார மெய்மயிர் சிலிர்ப்பத் தன்வசமற்றுச் சந்நிதியில் நெடுநேரம் நின்றருளினார்கள். அம்மையிடம் தம்முடைய யாத்திரைக்குறிப்பை விண்ணப்பித்து விடைபெற்றுக்கொண்டார்கள்.

காலகால மூர்த்தியாய் அழியா வரம்அருளும் அருட்பெருந் தகையையும், அவருக்கு இடதுபக்கத்தில் எழுந்தருளியிருக்கும் இளைய நங்கையையும், அமுதகடேசப் பெருமானையும் வழிபட்டார்கள்.

யாத்திரை :

மறுநாள் ஸ்திரவாரம். இரவு மணி ஒன்பது. தக்ஷிண யாத்திரைக்குப் புறப்படவேண்டும்; உரிய நாழிகை வந்துவிட்டது. தருமை நகரெங்கும் ஒரே பரபரப்பு. ஊர்தியும் தயாராகிவிட்டதென்று காவலன் தெரிவிக்கிறான். அவசர அவசரமாக ஒப்பம் ஆகவேண்டிய கடிதங்கள் ஒவ்வொருவர் கையிலும் காத்துக்

கொண்டிருக்கின்றன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் கருத்தும் கண்ணும் காரியாலய நிர்வாகத்தி லில்லை. ஒன்பது ஐம்பதுக்குப் புறப்படவேண்டும்; குருநாதனிடத்தும் உயிர்நாதனிடத்தும் மீட்டும் ஒரு முறை உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே உடனே திருமஞ்சன முடித்துக் குருஞானசம்பந்தர் கோயிலுக்கு எழுந்தருளியானுர்கள். வழிபாடுமுடிந்தது.

ஆதீனப் பூசைமடத்தை அடைந்தார்கள். சொக்க லிங்க வழிபாடு நடந்தது. பிரியவேண்டுமே! குறைந்தது பதினைந்து நாளாவது ஆருயிர்த் தலைவனுடைய சகள நிஷ்கள த் திருமேனியை விட்டுப் பிரிந்திருக்கவேண்டுமே! என்ற ஆழ்ந்த சிந்தனையோடு அவசமாய் நின்றுகொண் டிருக்கும்போது, தென்றற்காற்றில் 'ஞாலநின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம்ஆதியே' என்ற பாடல் தவழ்ந்து வந்து எல்லார் செவியிலும் புகுந்து சிந்தையிலிருந்து புத்துணர்ச்சியைத் தந்தது. சற்றேறக் குறைய பதினைந்து நிமிஷங்கள் உச்சிமேற் கைகூப்பி நின்றிருந்த மகாசந்நிதானம் அவர்கள் 'உத்திரவு எப்படி! ஞாலம் முழுவதும் ஆலவாயண்ணல் புகழ் வியாபித்திருக் கிறதாம்; நம்முடைய யாத்திரை அந்தப் புகழ் வியாப கத்துள் அடங்கிய சிறு இடத்தில்தானே? திகைப்பு ஏன்? சென்று வரலாம்; நன்றுண்டாகும்' என்று சொல்வது போலல்லவா இருக்கிறது; திகைத்த மக்களுக்குத் தேறுத லளிப்பது தேவாரமன்றி வேறு எது? 'பேயடையா பிரிவெய்தும்' என்ற பாட்டுத்தானே அச்சுத களப் பாளருக்கு ஆறுதலளித்தது. அதுபோலல்லவா இந்த

நிகழ்ச்சி இருக்கிறதென்று அருமையைப் பாராட்டிக் கொண்டே பூசைமடத்தை விட்டு வெளிப்போந்தார்கள். யாத்திராதானம் செய்தார்கள். அனைவர்க்கும் வெண் பொற் காசுகளை அள்ளி வழங்கினார்கள்.

ஆதீன அலுவலாளர்க்கும், ஆதீனக் கல்விநிலைய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், அடியார்களுக்கும் ஞானத்தந்தையைச் சிலநாள் பிரிந்திருக்க வேண்டுமே என்ற பெருங்கவலை ஓர்புறம்; தென்றமிழ்நாடு இவர்கள் திருவுலாச்செல்ல—உபதேச மொழிகளால் உய்தியடையப் போகின்றதே என்ற மகிழ்ச்சி ஓர்புறம். இவ்வாறு இவர்கள் நிலைமையிருந்தது. மணி ஒன்பது ஐம்பது ஆயிற்று. மங்களவாத்தியம் முழங்கின. சின்னம் ஒலித்தது. அடியார்குழாங்கள் சிரமேற் கைகூப்பி நிற்ப மகாசந்நிதானம் அவர்கள் காரில் எழுந்தருளினார்கள். உந்தூர்தியும் விரைந்து புறப்பட்டது.

மலைக்கோட்டை மௌனமடத்தில் :

மகாசந்நிதானம் அவர்கள் வரப்போகிறார்களென்று பெருமக்கள் பலர் குழுமியிருந்தார்கள். கொலுமண்டபம் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. தாயான செல்வர் அருள் திருநீறு எதிர்நோக்கி யிருந்தது. இரவு மணி 11—50 மலைக்கோட்டை வாசலில் விநாயகப்பெருமான் சந்நிதியில் டிரஸ்டி திரு. கலியப்பிள்ளை அவர்கள் கோயில் மரியாதை யுடன் வரவேற்றார். விடலைக்காயுடன் விநாயகர் வழிபாடு இனிது நிறைவுற்றது. மவுன மடத்திற்கு எழுந்தருளி னார்கள். கொலுக்காட்சியருளினார்கள். ஆதீனஅடியவரும்

மௌனமடத்தின் கட்டளை விசாரணையும் ஆகிய வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் கொலுவழிபாடு செய்து திருநீறுபெற்று உய்ந்தார்கள். ஏனைய பிரமுகர்களும் புலவர்களும் வணங்கித் திருநீறு பெற்றூர்கள். புலவர்களில் திரு. R. பஞ்சநதம் பிள்ளை, திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார், திரு. கோ. இரத்தினம் பிள்ளை முதலியோர்கள் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்து அளித்து வழிபட்டார்கள்.

தமிழ் மன்னர் வரவேற்றூர் :

சேரசோழ பாண்டியர்களுடைய ஆதரவு தமிழுக்கு இல்லாதகாலத்தில் தமிழைப் பாதுகாத்து வந்தவர்கள் சேதுபதிகளே யாவர். நான்காம் சங்கமாக மதுரையிலே சங்கத்தை நிறுவித் தமிழை வளர்த்த பாஸ்கர சேதுபதியை அறியாதார் யார்? இம்மன்னர்கள் சோழன் மறவராகத் தோன்றுதொட்டே சேதுகாவலைப் பூண்டவர்கள். ஸ்ரீராமனே சேதுகாவலை இம்மரபினரிடம் வழங்கியதாக வரலாறு. அதனுலும் சோழர் மரபினரால் தாபிக்கப்பட்டமையாலும் சூரியகுலத்தினராகப் பாராட்டப்படுகிறூர்கள். இவர்களுக்குக் கொடி செங்கொடி; அதாவது செங்காவிக் கொடி, ஒருதுறைக்கோவை கருடக்கொடியும் அனுமக்கொடியும் இவர்களுக்கு உரியன என்று கூறுகிறது.

சேதுநாடு என்பது இன்றைய இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மூன்றும் சேர்ந்த பகுதி. கி. பி. 1673 – 1708-ல் கிழவன் சேதுபதி காலத்தில் புதுக்கோட்டை தனி ராஜ்யமாகப் பிரிந்தது. கி. பி.

1724—1728-ல் பவானி சங்கர சேதுபதி காலத்தில் சிவ கங்கை பிரிந்தது. இராமேஸ்வரம் தேவாலய நிர்வாகம் இவர்கள் நேர் கண்காணிப்பிலேயே இருந்தது. வட நாட்டிலிருந்து ஆரியர்களைக் கொண்டுவந்து சேது கைங்கர்யத்துக்காக நியமித்திருந்தார்கள். இவர்களுக் குள்ள சமயப்பற்றிற்கு 'இராமநாதசுவாமி சகாயம்' என்று கையெழுத்திடுவதே போதிய சான்றாகும். சேது மன்னர் பரம்பரைக்கு 'ஆரியர் மானங்காத்தான்' என்ற தொரு விருதுப்பெயரும் உண்டு. இம்மன்னர்கள் பரம் பரையில் பலர் பலவேறு இடங்களைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்திருக்கிறார்கள். சேது நாட்டிலுள்ள சிவாலய விஷ்ணுவாலயங்களினுடைய திருப்பணிகள் பெரும்பாலும் இம்மன்னர்களுடையதாகவே யிருக்கும். பாஸ்கர சேதுபதி அவர்கள் திருவுத்தரகோசமங்கை நடராஜப் பெருமானுக்கு அநேக ஆயிரம் விலை மதிப் புள்ள திருவாபரணங்களை அணிந்து மகிழ்ந்தார் என்று வரலாறு கூறப்படுகிறது. அநேக அன்ன சத்திரங்களை வைத்து அந்தணர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்து வருகிறார்கள். ராமேஸ்வரத்தில் ராமநாதப்பெரு மான் பள்ளியறைக்கு எழுந்தருளுகின்றகாலத்து நாள் தோறும் சேதுமன்னர்கள் வாளேந்திக் குதிரைமீது ஏறிப் புறங்காட்டாது முன்செல்வது வழக்கமாம். இப்போது குதிரைமேல் ஆரோஹணித்த சேதுமன்னரைப்போல விக்கிரகம் செய்துவைக்கப்பட்டிருக்கிறது.

பொன்னுங்கால்அமிர்தகவிராயர், சர்க்கரைப்புலவர், தண்டபாணி சுவாமிகள், பிச்சுவையர், சவ்வாதுப்

புலவர், கந்தசாமிப் புலவர், சாமிநாதப் புலவர், சீனிப் புலவர், அழகியசிற்றம்பலக் கவிராயர், கயாகரர், சுப்பிர தீபக் கவிராயர், வெண்பாப்புலிக் கவிராயர், மதுரகவி, தலைமலைகண்டதேவர், சிற்றம்பலஐயா, முத்துக்குட்டிப் புலவர், முத்தழகர், இராமாநுஜகவிராயர், சுப்பிரமணிய கவிராயர், கிருஷ்ண ஐயங்கார், முத்துசாமி ஐயங்கார், ரா. இராகவ ஐயங்கார் முதலிய புலவர் பெருமக்களைப் பாதுகாத்து, அவர்களுக்குப் பல கிராமங்களையும் பொன்னையும் மணியையும் வாரிவழங்கித் தமிழைப் பேணி வந்த மரபு இம்மரபு.

இப்போது சமஸ்தான வித்துவானாக விளங்கி வருபவர்கள் மகாவித்வான் பிர்மஸ்ரீ மு. இராகவையங்கார் ஸ்வாமிகள் அவர்கள்,

சேதுபதிகளுக்குள்ள சைவாபிமானம் தமிழ்நாட்டுச் சைவமடங்களுக்கு மிகுதியாகக்கிராமங்கள் வழங்கியதால் அறியப்படும். இப்படிப்பட்ட மரபில்வந்த ஸ்ரீ சண்முக ராஜேஸ்வர சேதுபதி அவர்கள் சைவ ஆதீனத்துக் குருமகாசந்நிதானம் எழுந்தருளுவதைச் செவியேற்றுச் சும்மா இருப்பார்களா? தாம் சென்னையிலிருந்து வந்து கலந்துகொள்ள முடியாமையால் தம் தம்பி விஜயநாத துரை அவர்களைக்கொண்டு வரவேற்க, சிறப்பான முறைகளைச் செய்திருந்தார்கள். ஸ்ரீமாந் வானமாமலைப்பிள்ளை அவர்கள் நல்ல சட்டஅறிஞர். சமஸ்தான நிர்வாகங்களில் பொறுப்பேற்று நன்கு நடத்தி ஓய்வுபெற்றவர். நல்ல பக்திமான். ஸ்ரீமாந் பாலசுப்பிரமணியபிள்ளை அவர்களும் அப்படியே. சமஸ்தானதேவஸ்தானசூப்பரின்

டெண்டாக இருப்பவர்கள் இராமநாதபிள்ளை. துரை அவர்களுடைய தலைமையில் இவர்களும் ஏனைய பிரமுகர்களும் வரவேற்புக் கைங்கர்யத்தில் கலந்துகொண்டார்கள் என்றால் வரவேற்பு சாமான்யமாகவா இருக்க முடியும்? வடக்குக் கொத்தளவாசலிலேயே விருதுகளுடன் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் சுமார் காலை 12-மணிக்கு எழுந்தருளினார்கள். வரவேற்புக்கள் நிகழ்ந்தன.

ராமநாதபுரம் சமஸ்தானத்தின் தெய்வீக உயிர்நாடி தாயுமான ஸ்வாமிகளின் சமாதி எனலாம். அதனைத் தரிசிப்பது பெரும் புண்யம். தாயுமான அடிகள் வகுத்த வேதாந்த சித்தாந்த சமரச சன்மார்க்கம் நாட்டிற்குப் புதிய உணர்ச்சியை யூட்டிய பெருநெறி. ஆதலால் அவர்கள் அநுபூதி பெற்றுச் சிவசமாதி எய்திய அதனை மகாசந்நிதானம் அவர்கள் பார்வையிட்டார்கள்.

அரண்மனையில் ராமலிங்கவிலாசம் என்பது ஒரு சிறந்த இடம். அங்கேயுள்ள மண்டப ஆகாயவெளியில் பல தமிழ்ப்புலவர்களுடைய சமற்காரப் பேச்சுக்களும் கவிதைகளும் செறிந்திருக்கும். சங்கீத வித்துவான்களுடைய நயமான நாதம் அடைந்திருக்கும். அங்கே மகாசந்நிதானம் அவர்களுக்குப் பொதுவரவேற்பளிக்க ஆயத்தங்கள் செய்யப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வழிவந்த களைப்பு மக்களுடைய குதூகலத்தால் மறைந்தது. ஆர்வத்துக்குமுன் அலைச்சலால் விளைந்த அல்லல் நிற்குமா? விஜயநாததுரை அவர்கள்

பாதகாணிக்கை செலுத்தி வழிபட்டு வரவேற்றுப் பேசினுர்கள். வரவேற்புக்குப் பதில்கூறுமுகத்தான் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்,

அன்பர்களே! அறிஞர்களே!

இன்று நாம் இராமனுதரை வழிபடப்போகும் வழியில்—காசியாத்திரை பூர்த்திக்காகச் சேதுஆடச் செல்லும்வழியில், உங்கள் அனைவருடைய அன்பு வெள்ளத்திலே ஆட நினைந்தமைக்குப் பெரிதும் மகிழ் கிறேம். ஆண்டவன் அன்பு வடிவன். அன்பென்னும் வலையில் அகப்படுபவன். அன்பே சிவம். சிவாநுபவத் தின்நிலை அநுபூதிமான்களால் எப்படி அநுபவிக்கப் படுகின்றது என்பதனைத் திருமூலர் அருளிச்செய்கிறர் பாருங்கள், அன்பு வேறு சிவம் வேறு அன்று. வேருக எண்ணுபவர்கள் அறிவிலாதார்; அன்பே சிவமாம் என்பதை அறிந்து உணர்ந்து இருப்பவர்களே அநுபூதி மான்கள். அவர்களுக்குக் காண்பாரும் காணப்படும் பொருளும் காட்சியும் ஒன்ருன அநந்யபாவம் சித்திக் கும். அதனுல் அன்பே சிவமாய் அவர்கள் அமர்ந்திருப் பார்கள். அந்தத்திருமூலர் பாடலும் உங்கள்நினைவுக்கு வந்திருக்குமே.

எங்கே யாரிடத்து நாம் அன்பு செலுத்தவேண்டும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். நமக்கு இனிய வர் யாரோ அவரிடம் விருப்பம் உண்டாகும். விருப்பம் உண்டான இடத்திலே அன்புண்டாகும். அன்பாவது தன்னுல் விரும்பப்பட்டவிடத்தே உளதாகும் மன நெகிழ்ச்சி. ஆகவே நமக்கு இனியவர் யார் என்று

நிச்சயிப்பதிலேதான் சிரமம் இருக்கிறது. நம்முடைய தம்பி தமையனை இனியன் என்று எண்ணுவோம். பாகத்தில் கொஞ்சம் ஏறிக்குறையுமானால் அவர்கள் நமக்கு எவ்வளவு பெரிய துன்பத்தையும் செய்யத் தயங்கமாட்டார்கள். அதனாலேயே 'அண்ணன் என்றாலும் பங்காளி' என்ற பழமொழியும் நமது நாட்டில் வழங்கிவருகின்றது, ஆதலால் அவர்கள் இனியரல்லர். மனைவியை எண்ணலாமோ? அதுவும் கூடாது, சிற்சில சமயங்களிற் பொருத்தமில்லாமை அநுபவத்தில் அறிவீர்கள். மக்களை இனியன் என்னலாமே எனின் நாமே உழைத்துச் சேர்த்த பொருளாயிருந்தாலும் அதிகமாகச் செலவழித்தாலும் அல்லது கடன் முதலியன வாங்கநேர்ந்தாலும் மக்கள் படுத்தும் பாடு பெரிதாகிவிடுகிறது. அவர்கள் நமது உயிருக்கும் உலைவைக்கப் பின்வாங்கார்கள், ஆதலால் இவர்கள் உறவெல்லாம் வீடுமட்டிலும், காடு மட்டிலுந்தானே!

நமக்கு நாமே இனியம் என்று பார்ப்பின் நம்முடைய அறிவே ஆணவத்தால் மறைக்கப்பட்டு நமக்கு இம்மைக்கும் மறுமைக்கும் ஆகாத செயல்களை ஆற்றுகின்றது. அதனாலே இன்ப துன்பங்களை அறிந்து நடக்க நம்மால் முடியவில்லை. ஆதலால் நமக்குநாமே இனியம் என்பதும் பொருந்தா. இப்படி எண்ணிப்பார்க்கும்பொழுது நமக்காக இந்த உலகையும் படைத்து, உடம்பையும் கொடுத்து, இன்ப துன்பங்களை அநுபவிக்கச்செய்து வினைகளை வாட்டி மலம்நீக்கி இருவினை ஒப்பு மலபரி பாகம் வருவித்து, சிவத்துவ விளக்கம் தருகின்ற சிவனையன்றி வேறு யார் இருக்கமுடியும்? இதனையே அப்பரடிகள்,

"என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே"

என்று அருளிச் செய்திருக்கின்றார்கள். அத்தகைய இனிய இடத்திலேயே நாம் அன்பு செய்திருத்தல் வேண்டும். அன்பு ஒரு புஸ்தகத்தைப்போல் கொடுக்க ஏற்றுப் பார்க்கும் வடிவுடையபொருளன்று. அன்பை அறியக்கூடிய வழியாக வள்ளுவர் கூறுவது,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்பது, ஞானசம்பந்தப்பெருமான் உண்ணுமுலை யம்மையினுடைய திருத்தனபாரத்திலே சுரந்த பாலைக் கறந்துகொடுக்க உண்டார்; ஞானம்பெற்றார் எனச் சொன்னவுடனே பாண்டிமாதேவி மங்கை யர்க்கரசியாருக்குப் பால் சுரந்ததாம். இது அல்லவா தாயன்பு.

"சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு"

இவ்அன்பு தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூவகைப்படும். முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் பெயர்த்தும் அவன்றனக்கே பிச்சியானாள் என்பதல்லவா தலையன்பு. தலையன்பு கொண்டவர்

இராமேசுவரம்:

இராமநாதராலய முகப்பு மண்டபத்தில்.

களுக்குத் தன்வசமழியும். எவர்க்கும் மெய் புளகம் கொள்ளும். கண்ணிலிருந்துஆனந்த பாஷ்பம் பொழியும், உரை தடுமாறும், நா தழுதழுக்கும். இத்தகைய மாருத அன்பு ஒன்றே ஆண்டவனை அகப்படுத்தும் வலையா யிற்று என்பது முன்னமே சொல்லப்பட்டது. அன்பை அநுபவிக்கின்ற அடியார் பெருமக்கள் இறைவனை அன்பினில் விளைந்த ஆரமுதாக அநுபவிக்கின்றார்கள். அமுது என்பது உணவுப்பொருள், அது வாய்க்கு மட்டும் ருசி தருவது. இறைவனாகிய அமுதமோ எல்லா இந்திரியங்களுக்கும் இந்திரிய ஞானத்தைக் கடந்த உயிருக்கும் இன்பம் ஊட்டுவது. அந்த இறைவனைத் தேனாக அனுபவிக்கின்ற நம் மாணிக்கவாசகர் சிந்தனை நம்மால் சுவைத்தற்குரியது.

"தினைத்தனை உள்ளதோர்
பூவினில் தேனுண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக
ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ."

தேனினும் ஓர் சிறப்புக் காணுகின்றார் மாணிக்க வாசகர். தேன் உண்டபின் புளிக்கும். இந்தத் தேன் எப்போதும் இனிக்கும், இந்தத் தேனைக் கண்ணப்பர் முழுவதும் வாரி உண்டார், வேடர்க்கு இயல்பு தேனை உண்ணுவதுதானே; வேடர் உண்டதுபோல நாம் உண்ண முடியவில்லையே என்று வருந்திக் கூறுகிறார் மாணிக்கவாசகர், அதையும் பாருங்கள்.

“கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில்
என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை
வா என்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ ”

‘என்ஒப்பில்’ என்றபோது இருவினையொப்பு வந்தகாலத்தில் ஆன்மாவை ஆண்டவன் ஆட்கொள்ளு கின்ற அருமைப்பாடு விளக்கப்படுகிறது; இதனாலேயே சேக்கிழார் பெருமான்,

“அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா
றறிநீயென் றருள்செய்வார்”

என்று பாராட்டிப் பேசியிருக்கிறார். அன்பு பிழம்பாய கண்ணப்பரின் வாய்நீரும், செருப்படியும், “அன்பெனும் வெள்ளக்கால் பெருகிற்று” எனவும் “இளம் பருவச் சேயடியிற் சிறப்புடைத்து” எனவும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டன,

இத்தகைய அன்புநெறி அனைவர்க்கும் மிகச் சுலப மானது. இக்காலத்திற்கு மிகவும் ஏற்றது. இதனைக்

இராமேசுவரத்தில்:



பாம்பன் பாலம்.

இராமேசுவரம் அக்கினிதீர்த்தத்தில்:

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்,

கொண்டு நாம் மிக எளிதில் இறையருளைப் பெறலாம். சின்னதைக் கொடுத்துப் பெரியதை வாங்கிக் கொள்வது தானே பெரிய வியாபாரியின் தந்திரம், சின்னது அன்பு; பெரியது அருள். அன்பு தொடர்பு உடைய ஓரிடத்தில் செலுத்தப் பெறுவது. அது சுருங்கியது. அருள் பரந்தது. ஆதலால் அன்பைக்கொண்டு அருளைப் பெறுவது வியாபாரந்தானே !

இப்படிப்பட்ட பக்திமார்க்கத்திற்குப் பரமவிரோதி வெறுப்புணர்ச்சி. வெறுப்புணர்ச்சி விரோதத்தை விளை விக்கும்; ஆயுளைக் குறைக்கும்; அறிவை ஒடுக்கும். வெறுப்புக்கொண்ட மனிதன் விஷம் குடித்தவனைப் போல. வெறுப்புணர்ச்சி விளைவது சுயநலத்தாலேயே. ஒருமனிதனுடைய அறிவு ஆற்றல் இவற்றின் குறைவும் வெறுப்புக்குக் காரணமாகலாம். இந்த வெறுப்பு மனித னில் தொடங்கி அவன் பேசும் மொழிவரையில் வந்து விடுகின்றது. மொழி வெறுப்பே வெறுப்புக்கெல்லாம் முதன்மை ஸ்தானம், மனிதனுக்கு அறிவு தேவை. அறிவைத் தாங்கி நிற்பன மொழிகள், பெருந்தாகமுள்ள மனிதன் மலைநீர் வேண்டாம், மடுநீர் வேண்டாம் என்று ஒதுக்கமாட்டான். நல்ல நீராகவுள்ள எவற் றையும் குடித்துத் தாகம்தீர்வான். அதுபோல அறிவுப் பசி உள்ளவன் எந்தமொழியில் இருந்தாலும் அறிவு அமுதத்தைப் பசிதீர உண்ணத் தவறமாட்டான், ஆதலால் மொழிவெறுப்புக் கூடாது.

நமது நாட்டில் பல ஆயிரம் ஆண்டுகளாகவே தமிழும் சமஸ்கிருதமும் கலந்து வருகின்றன. 'வடமொழி யைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கு இணையாத்

தொடர்புடைய தமிழ்மொழியைக் குறுமுனிக்கு வகுத்தமைத்தார் கொல்லேற்றுப் பாகர்' என்பது வரலாறு. இந்த இரண்டு மொழிகளும் ஒரே தந்தைக்குப்பிறந்தவை, அவைகளுக்குள் எந்த நாளிலும் சண்டை சச்சரவுகள் இருந்ததில்லை, அவற்றைப் பேசுகின்ற நாமும் சகோதரர்களல்லவா? நமக்குள்ளும் பாஷையை அடிப்படையாகக்கொண்ட வேற்றுமை கூடாது, ஒற்றுமையிலேயே உயர்வுண்டு. செந்தமிழ்ச் சைவ மன்னர் ஆளுகின்ற இந்த ராஜ்யத்தில் இருக்கின்ற நீங்கள் எமக்கு அளித்த வரவேற்புக்கு மகிழ்கின்றோம், சொக்கலிங்கப்பெருமான் திருவருள் உங்களுக்கு நல்லன எல்லாம் நல்குமாக.

என்று ஆசியுரை வழங்கினார்கள். பிறகு மகாவித்வான் பிர்மஸ்ரீ ராகவையங்கார் அவர்கள் மகாசந்நிதானம் அவர்களைக்கண்டு அளவளாவி மகிழ்ந்தார்கள். அவர்களுக்கு மகாசந்நிதானம் அவர்கள் பட்டாடை போர்த்திப் பாராட்டினார்கள். இரவு மணி ஏழாயிற்று. திருமஞ்சனம் ஏற்றுக்கொண்டு சந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டார்கள். இரவு ஒன்பது மணிக்குமேல் இரயில் மார்க்கமாக இராமேசுவரத்திற்கு எழுந்தருளியானார்கள்.

இராமேசுவரத்தில்:

ராமேசுவரம் வங்காளக்குடாக்கடலில் உள்ள தீவு, நடுவில் பாம்பன் இத்தீவைப் பிரித்துவைக்கின்றது, பாம்பன்கால்வாய்க்குப் பெரிய பாலம் உண்டு. கப்பல்கள் போகவேண்டுமானால் அப்பாலத்தினுடைய இடைப்பகுதியை மேலே தூக்கிவிடுவார்கள். அதற்கேற்றமின்சார

விசையும் உண்டு. இங்குள்ள சிவபெருமான் திருப்பெயர் இராமநாதர். சிவலிங்கத்திருமேனி. உலகிலுள்ள *பன்னிரண்டு ஜோதிலிங்கங்களுள் இதுவும்ஒன்று என்று சொல்லப் பெறுவது, வடஇந்தியமக்கள் இந்தமூர்த்தியை மிகவும் பாராட்டுகிறார்கள்.

ஸ்ரீ ராமபிரான் இலங்கைக்குச் சென்று இராவண கும்பகர்ணர்களைக் கொன்று திரும்பினார். அப்போது பிரமகத்திதோஷம் இராமரைப் பற்றியது. அதைப் போக்கிக்கொள்வதற்காகப் பரமேசுவரனைப் பூசிக்கத்தக்க இடம் யாதென்று ஆராய்ந்தார். முனிவர்கள் இத்தீவை விடச் சிறந்ததொன்றில்லை எனத் தெரிவித்துக்கொண்டார்கள், அங்ஙனமே இங்குப் பூசிக்கவிரும்பி நருமதையிலிருந்து சிவலிங்கம் கொண்டுவருமாறு அனுமாருக்குக் கட்டளையிட்டார், அனுமார் காசிப்பட்டணம் சென்றார். அங்கே காலபைரவர்க்கும் இவர்க்கும் போர் நிகழ்ந்தது. அதனால் அவர் வரத் தாமதமாயிற்று. பிரதிஷ்டைக்கு உரிய முகூர்த்தம் நெருங்கியது. சீதாபிராட்டி மணலால் சிவலிங்கத்தை அமைத்துக்கொடுக்க இராமர் அதைப் பிரதிட்டைசெய்து பூசித்தார். இடைவேளையில் அநுமாரும் இலிங்கத்துடன் வந்துசேர்ந்தார். தாம்கொண்டு வந்த சிவலிங்கம் ஸ்தாபிக்கப் பெறவில்லையே என்று அநுமாருக்குக் கோபம். இதைக் குறிப்பாய் அறிந்த இராமர் பக்கத்தில் அதனையும் பிரதிட்டைசெய்வதாகச்

*பன்னிரண்டு ஜோதிலிங்கங்களாவன:— 1 ஓங்காரேசர் 2. சோமநாதர். 3. திரியம்பகநாதர். 4. மல்லிகார்ச்சுனர். 5. நாகநாதர் 6. வைத்தியநாதர், 7. காசிவிசுவநாதர், 8. பீமேசர், 9. கேதாரேசர், 10. மகாகாளேஸ்வரர், 11. குஸ்ருணேசர், 12. இராமநாதர்.

சொல்லிப்பார்த்தார். கோபம் தணிந்தபாடில்லை. இராமர் இம்மணலிலிங்கத்தை அப்புறப்படுத்திவிட்டால் பிறகு நீ கொண்டுவந்ததை இங்கே தாபித்துவிடலாம் என்றார். அநுமாருக்கு ஆறுதல். ஆறுதல் ஆற்றலை அளித்தது, வாலினால் கட்டி இழுத்தார். ஆண்டவன் அசல மூர்த்தியானார். வாலறுபட்டதுதான் மிச்சம். அநுமார் மயங்கி விழுந்ததாகச் சொல்லப்படுமிடத்தில் இன்றும் அநுமாருக்குக் கோயில் இருக்கிறது. அதன்பக்கத்தி லுள்ள மணல் இன்றும் செந்நிறமாயிருப்பதைக் காண லாம். அதைக்கண்டு வருந்திய இராமர் அநுமாரையும் எழுப்பிவிட்டு, அநுமார்கொண்டுவந்த சிவலிங்கத்தையும் வடபுறம் தாபித்தார். இராமநாதப் பெருமானுடைய திருமேனியில் அநுமார் கட்டியிழுத்த நினைவாக மூன்று ரேகைகள் இன்றும் பதிந்துள்ளதைக் காணலாம்.

ராமேசுவர எல்லைக்குள் சுக்கிரீவ தீர்த்தம், அங்கத தீர்த்தம், சாம்பவதீர்த்தம், கந்தமாதனதீர்த்தம், பஞ்ச பாண்டவர் பெயர்களாலும் தனித்தனி தீர்த்தங்கள், அநுமதீர்த்தம், அக்கினிதீர்த்தம், அகத்திய தீர்த்தம், நாகதீர்த்தம், சிவதீர்த்தம், சக்தியாமிர்த தீர்த்தம், சர்வ தீர்த்தம், கோடி தீர்த்தம் ஆகிய பல தீர்த்தங்கள் உள்ளன.

அக்னி தீர்த்தம்: சமுத்திரக்கரையினருகில் இத் தீர்த்தம் விளங்குகிறது. இத்தீர்த்தத்தில் மூழ்கினோர் புண்ணிய தேகம் பெறுவர் என்று சேதுபுராணம் சொல்லுகிறது. மகட்பேறளிக்கும் மகிமையும் இந்தத்

தீர்த்தத்திற்கு உண்டு. பேய் பிசாசு முதலியவற்ருல் பீடிக்கப்பட்டோர்க்கும் இத்தீர்த்தம் விலக்களிக்கிறது.

ஸ்ரீராமபிரான் இலங்கையினின்று சீதாபிராட்டி யாரை மீட்டு அவளது பரிசுத்தத்தன்மையை உலகினர்க் குணர்த்த அக்கினிதேவனை வரவழைத்து அவ்வக்கினி யிலே பிராட்டியாரை மூழ்கச்செய்தார். பிராட்டியாரும் அக்கினியில் மூழ்கிஎழுந்து வந்தனள். இராமபிரானும் மனமகிழ்ச்சியோடு பிராட்டியாரை அழைத்துக்கொண் டார். அக்கினிதேவன் சீதாபிராட்டியைச் சோதித்த பாவந்தீரும்படியாகச் சமுத்திரத்திலே ஸ்நானம் செய்து இராமபிரானை வணங்க, இராமனும் அக்னிதேவனைப் பார்த்து நீ சமுத்திரத்தில் மூழ்கினமையால் அவ்விடம் அக்னிதீர்த்தம் என்று பெயர்வழங்குவதோடு மட்டுமன்றி நீராடினோர் அனைவர்க்கும் பாவங்கழுவிப் பதமளிக்க வல்லதொரு தீர்த்தமாக விளங்குக என்று அருள் செய்த னர். அதுமுதல் இத்தீர்த்தத்திற்கு அக்னிதீர்த்தமென்று பெயர் வழங்குவதாயிற்று.

இலட்சுமண தீர்த்தம்: இது இலக்குமணனுல் நிர்மாணிக்கப்பட்டது, பலராமர் இதில்மூழ்கி பிரமஹத்தி நீங்கப்பெற்ருர்.

ராமதீர்த்தம்: இலட்சுண தீர்த்தத்தின் கீழ்பால் விளங்குகிறது. இதன் மேல்கரையில் இராமருக்குக் கோயில் இருக்கிறது.

இத்தலத்திலுள்ள சிறந்த மண்டபம் வடக்குப் பிராகாரம். சற்றேறக்குறைய நாலாயிரம் அடி நீளம்

உடையது, அதன் அகலம் 21 அடிவரை. உயரம் பூமி மட்டத்திலிருந்து முப்பது அடி. திருமாளப்பத்திமேடை ஐந்து அடி உயரம் உடையது, அதன் மேல் பன்னிரண்டு அடி உயரமுள்ள தூண்கள் வரிசையாக நிற்கின்றன. தூண்களின்மேல் சுண்ணும்பு அப்பிச் சித்திரவேலைப்பாடு கள் செய்யப்பட்டுள்ளன, அவை இப்பொழுது மறைந் துள்ளன. மண்டபத்தின் இருபுறங்களிலிருந்தும் வெளிச்சம் ஊடுருவிவருமாறு அமைந்திருப்பது ஒரு தனியழகு.

சேதுமன்னர்கள் பரம்பரையாகப் பல்வேறுவகை யில் பூமியும் பொருளுமாக இராமநாதப்பெருமானுக்கு அளித்துள்ளார்கள். சேதுபதிகளின் திருவுருவங்கள் மண்டபத் தூண்களிலும் முற்றவெளித் தூண்களிலும் அழகு செய்கின்றன. தளவாய்சேதுபதி அவர்கள் பதின் மூன்று கிராமங்களைப் பெருமானுக்கு முற்றூட்டாக அளித்திருக்கிறார்.

இத்தகைய சிறப்புடையதான ராமேசுவரத்திற்குத் தருமை மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளப்போகிறார் கள் என்பதைத் தேவஸ்தான பொருளாளர் ஸ்ரீமான் கோதண்டராமய்யர் அவர்களுக்கு அரண்மனை உத்தரவு அறிவித்திருந்தது. ஸ்ரீமான் கோதண்டராமய்யர் ஒரு **B. A.** பட்டதாரி, சமஸ்கிருதத்தில் வியாகரணம், அலங் காரம், காவ்யம், நாடகம் முதலியவற்றை முறையாகப் பாடங்கேட்டுப் பண்பட்ட நல்ல அறிவாளி, வேதாத்ய யனங்கூட முறையாகச் செய்தவர். அவரைப் பார்த்த போது இவ்வளவு வைதீக சாஸ்திர அப்பியாசத்துடன்

ஒரு பட்டதாரி இருக்கிறாரே; இப்படிப்பட்ட இவர்தான் கோயில்நிர்வாகத்துக்குப் பொருத்தமென்றுதோன்றியது. அப்படியே பேஷ்கார் சங்கு ஐயரும். மகாசந்நிதானம் அவர்கள் வருகிறார்கள் என்று கோயில் விருந்தினர் விடுதியைச் செம்மைப்படுத்தி வைத்திருந்தார். குடை கொடி ஆலவட்டங்கள் சிவிகை முதலான விசேஷ மரியாதைகளோடு வரவேற்புக்கும் ஏற்பாடு செய்திருந் தார். ஸ்ரீ காசிமடம் கார்பார் பொன்னுசாமி முதலியார், சங்கரய்யர் முதலானவர்களும் உள்ளூர்ப் பிரமுகர்களும் எதிர்கொண்டழைக்கப் புகைவண்டி நிலையத்திற்கு வந் திருந்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வந்ததும் ரயிலிலேயே மாலை சூட்டி விபூதிப் பிரசாதம் பார்த்து வரவேற்றார்கள். அங்கே வந்திருந்த மேள தாளம் முதலியவைகளைக் கண்டு, எப்பொழுதுமே ஆடம்பரத்தை வேண்டாத ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எல்லாவற்றையும் போகச் சொல்லிவிட்டு நடந்தே சென்றுவிடலாமென்று புறப்பட்டார்கள்.

"என்ன ஐயா! ஞானசம்பந்த சுவாமி காலத்தில் யாத்திரா மார்க்கங்கள் இவ்வளவு சவுகரியமாக இருந் திருக்குமா? நடந்துதானே சென்றிருப்பார்கள்."

"ஆமாம்! வழிகூட இப்படியா இருந்திருக்கும்? காடும் மேடும் முள்ளும் கல்லுமாகத்தான். அதிலுங் கூடச் சிவனடியார்கள் நடந்தேதான் சென்றார்களாம்!"

"பிள்ளையாருக்கு என்ன கவலை, அம்மையப்பர் அளித்த முத்துச் சிவிகை முத்துப்பந்தர் இருக்கும்

பொழுது. ஆனாலும் அடியார்கள் திருவடிநோகத்தானே சென்றிருப்பார்கள்!''

''அடியார்கள் சித்தத்தைச் சிவமாக்கியவர்க ளல்லவா? சிவம் இன்பவடிவுதானே, அடியார்களின் உயிர்க்கு உயிராய் இறைவன் இருக்கும்போது அவர் களுக்குத் துன்பம் ஏது? 'இன்பமே எந்நாளும் துன்ப மில்லை' என்பதல்லவா அவர்கள்கண்ட முடிவு.''

'மக்களும் உழைத்தாலல்லது ஊதியத்தை எதிர் பார்க்க முடியாது. உடலுழைப்பு உள்ள ஒருமைப்பாடு, ஆதலால் எல்லாரும் கஷ்டப்பட்டால்தான் இன்பம் உண்டு' என்று பலவாருக இராமேசுவரத்தலவிசேடங் களைப் பற்றியும் ஞானசம்பந்தப் பெருமான் யாத்திரை பற்றியும் உடன் வந்தவர்களோடு உரையாடிக்கொண்டே சென்றார்கள். புகைவண்டி நிலையத்திற்கும், எழுந்தருளு வதற்காக ஏற்பாடு செய்திருந்த இடத்திற்கும் சுமார் இரண்டு மைல் தூரமிருக்கும். அழைக்கப் போகும்போது வண்டியில் ஏறிச்சென்ற அன்பர்களுங்கூட, இந்த இரண்டு மைலையும் இவர்களுடைய அருளுபதேசங்கள் சுருக்கி விட்டதை உணர்ந்து மகிழ்ந்தார்கள். இரவு ஒன்றரைமணி யிருக்கும், ஜாகையை அடைந்ததும் இராமநாதராலயங்களிலிருந்தும் பல தேவஸ்தானங்களி லிருந்தும் விபூதிப் பிரசாதங்கள் பார்க்கப் பெற்றன.

ஸ்ரீ காசிமடத்து உபசாரம்:

மாகேசுர பூஜாகாலங்களில் ''ஹிமசேது பர்யந்தம் எல்லா அறங்களும் இனிதாக நடைபெறத் திருவுள

மடைக்க'' என்று சொல்வது சம்பிரதாயம். உள்ளபடி இமயமுதல் சேதுவரையில் அறநிலையங்களை ஏற்படுத்தி இடைவிடாமல் அன்னதானம் செய்துவரும் பெரும் புண்ணியம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கே உரியது என்பதனை இன்றும் காட்டி நிற்பன ஸ்ரீ காசிமடத்துத் தருமங்கள். அதனை இப்போது பரிபாலித்து வருபவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ராமேசுரத்துக்கு எழுந்தருளுவதைக் கேட்டவுடனேயே மடத்துக் காரியஸ்தர்களில் பொறுப்புவாய்ந்தவர்களை அனுப்பி மாகேஸ்வர பூசைக்குரிய சகல வசதிகளையும் செய்வித்திருந்தார்கள். திருப்பனந்தாளிலிருந்தே பணி விடையாள் முதலிய சகல ஏற்பாடுகளும் அனுப்பியிருந்தார்கள். வந்திருந்த காரியஸ்தர்கள் காலம் தவறுதபடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கூடவேயிருந்து சகலவசதிகளையும் கவனித்து வந்தார்கள், ஒவ்வொரு அம்சத்திலும் அவர்களுடைய கவனிப்பு மிக மிக உயர்ந்த நிலையில் இருந்தது, மடத்துச் சம்பிரதாயப்படியே பூஜைக்கும் மாசேசுவரபூஜைக்கும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன.

மறுநாள் 24-9-51 திங்கட்கிழமை விடியற்காலை 4-மணிக்கெல்லாம் ராமநாதராலயத்தின் எதிரிலுள்ள அக்னி தீர்த்தத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நீராட எழுந்தருளினார்கள். விதிப்படி சங்கல்பம் முதலியன முடித்துக்கொண்டார்கள். நீராடும்போது குரு பரம்பரைஸ்தோத்திரம் முழுதும் படிக்கப் பெற்றது. ஒவ்வொரு குருநாதனுடைய திருநாமத்தையும் சொல்லி,

காசியில் கங்கையில் ஸ்நானம்செய்ததுபோலவே கங்கை யாத்திரையின் பூர்த்தியை ஒவ்வொரு மகாசந்நிதானங்களுக்கும் அர்ப்பணம் செய்து நீராடினார்கள். கங்கை யாத்திரைப் பூர்த்திக்காக அனைவருக்கும் பொன்னும் காசும் வழங்கப்பட்டன. அங்கிருந்தும் இராமநாதர் ஆலயத்துக்கு எழுந்தருளிப் பிரதான தீர்த்தங்கள் ஒவ்வொன்றிலும் நீராடினார்கள்.

இராமநாதர் வழிபாடு :

வழிபட்டுத் திருவருள் வாய்ப்புக்கிட்டிய திருஞான சம்பந்தப்பெருமான் ராமநாதப்பெருமானை வழிபட்டால் மேல்வினை கெடும்; ஞானமும் நன்பொருளும் ஆகும்; பிணிபெயரும் ; துயர்நீங்கும்; இறைவனின் திருவருள் நிறைய உண்டாகும்; பலசொல்லி என்ன? ஒரு துன்பமுமே உண்டாகாது என்று கூறினார், இத்தகைய பெருமானை இமயக்கங்கை நீர்கொண்டு திருமஞ்சனம் ஆட்டினால் சித்தியாதது என்னே!

மகாசந்நிதானம் அவர்கள் காசிக்கு எழுந்தருளிய காலத்துக் கொண்டுவந்த கங்கைநீரை மஹாபிஷேகத் திரவியங்களுடன் விருதுகள் புடைசூழ மேளவாத்தியத்துடன் திருக்கோயிலுக்கு எடுப்பித்துச் சென்றார்கள். ருத்திர சமகங்களுடன்—வேதாத்தியயனத்துடன் மகாபிஷேகம் நன்கு நடைபெற்றது. ஸ்னபன அபிஷேகத்திற்குப் பிறகு கங்காபிஷேகம் நடந்தேறியது. முடியும் வரையிலும் மகாசந்நிதானம் அவர்கள் ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும்

இராமநாதராலயத்தில்:

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் தரிசனத்திற்கு எழுந்தருளல்.

இராமேசுவரத்தில்:



மண்டபக் காட்சி - உலகிலேயே பெரியபிரகாரம்.

சிந்தையேயாக ஸ்ரீ இராமநாதப் பெருமானுடைய திரு வுருவையே நோக்கிக்கொண்டு நின்றார்கள். ஆதீன ஓதுவா மூர்த்திகள் இராமேசுவரப் பதிகம் முழுமையும் பாராயணம் செய்தார். அதில்,

மானனநோக்கி வைதேகிதன்னை யொருமாயையால்
கானதில் வவ்விய காரரக்கன் னுயிர் செற்றவன்
ஈனமிலாப்புகழ் அண்ணல்செய்த இராமேச்சுரம்
ஞானமும் நன்பொருளாகி நின்றதொரு நன்மையே.

உரையுணராதவன் காமமென்னும்முறு வேட்கையால்
வரைபொரு தோளிறச் செற்றவில்லி மகிழ்ந்தேத்திய
விரைமருவுங் கடலோதமல்கும் இராமேச்சுரத்
தரையர வாடநின் றுடல்பேணும் அம்மான் அல்லனே.

என்ற பாடல்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர் களையும் ஏனைய அடியார்களையும் இறைவன் கருணை வெள்ளத்தில் மிக ஈடுபடுத்திவிட்டது. இறைவனுடைய ஐந்து திருமுகங்களுக்கும் பஞ்சமுகார்ச்சனையும், ஐந்து வகையான நைவேத்தியங்களும், தீபாராதனைகளும் செய்விக்கப்பட்டன. பொன்னுடையும் சாத்தப்பெற்றது,

இமையாசலத்து மயிலாயிருக்கும் பார்வதவர்த்தினி யம்மையின் நிலையழகே தனியழகு. அரசி எல்லாருடைய மனமாகிற மதயானைகளை அடக்கியாளுகின்ற கருணைக் கண்ணாகிய அங்குசத்தைக்கொண்டு நிற்கின்றாள். தமது பிறந்தகத்து மக்கள் நாள்தோறும் பல்லாயிரக் கணக்கில் இமயத்துச்சியிலிருந்து கொண்டுவருகின்ற பனியிற் கங்கையில்தானே பெருமானுக்குப் பெருவிருப்பம் என்ற

ஒரு பெருமிதம்போலும்; அம்மை எடுப்பான நோக்கத்தோடு — கருணை வழிகின்ற கண்களோடு — அபயவரதங்களோடு விளங்குகின்ருள். அவளுக்கும் அபிஷேகங்கள் செய்விக்கப்பெற்றன. பட்டாடை சாத்தப்பெற்றது. களப கஸ்தூரிகள் அணிவிக்கப்பெற்றன. குங்குமங் கொண்டு லளிதா சகஸ்ரநாமத்துடன் — அபிராமியந்தாதி பாராயணத்துடன் அருச்சனை செய்விக்கப்பெற்றது. ஏனைய பரிவாரங்களுக்கும் அவ்வாறே அபிஷேக அலங்கார ஆராதனைகள் முடித்துக்கொண்டு திருமடத்திற்கு எழுந்தருளுகின்றபோது, கோயில் வாசலில் ஆயிரக் கணக்கான ஏழைகள் மகாசந்நிதானம் அவர்களைத் தரிசிக்கக் காத்திருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் உணவு அளிக்கப்பட்டது.

வந்திருந்த அடியார்களுக்கும் பிரமுகர்களுக்கும் ஏழைகளுக்குமாக ஸ்ரீ காசிமடத்தில் உண்டி நாலு விதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலாத் திருவமுது அளிக்கப்பட்டது.

பிற்பகல் மூன்று மணிக்குக் கோதண்டராமய்யர் அவர்களும் பேஷ்காரும் வந்து இராமநாதப் பெருமான் பொற்பண்டாரத்தையும் திருக்கண் சாத்தியருளவேண்டும் என வேண்டிக்கொண்டார்கள். இராமநாதப்பெருமான் சாமாணியமானவரல்ல, லட்சுமிநாயகனுகிய ராமனுல் பூசிக்கப்பெற்றவர். சேரசோழ பாண்டியமன்னர்கட்கு அருள் கொடுத்துப் பொருள் வாங்கியவர். சேதுமன்னர்களுடைய சிந்தையைக்கவர்ந்து அவர்களுடைய உடல்பொருள் ஆவி மூன்றையும் பெற்றவர். பரோடா,

கேகுவார், இந்தூர். ராஜகோட், பலிப்பூர் முதலான இந்து ராஜாக்களுடைய காணிக்கைகளெல்லாம் பெற்றுக் களிப்பவர், தமது தோழனாகிய குபேரனைப்போலவே தாமும் ஆகிவிடவேண்டும் என்ற ஆசை இவருக்கு. காளையில்மட்டும் ஏறுவது வழக்கமில்லை என்பதைக் காட்டிக்கொள்ள, தங்கவாகனங்களில் ஏறிப் பவனிவருகிறார். தங்கத்தகடு அமைக்கப்பட்ட பல்லக்கிலும் சில நாள் ஏறிக்கொள்கிறார். அவர் உல்லாசத்தைப் பற்றி நான் என்ன சொல்ல!

ஒருநாள் இராமநாதர் தானும் தன் தையலுமாக உச்சி முதல் உள்ளங்கால்வரை ஓரே வயிர அணிகளைப் பூட்டிக்கொண்டு பவனி வருகிறார். ஒரு நாள் முத்தணி அணிந்து காட்சி வழங்குகிறார். ஒரு நாள் மாணிக்க அணி; ஒரு நாள் பச்சையணி. இப்படியாக அணிந்துகொள்ளும்போது சில அணிகள் இவரையே ஏமாற்றிவிடுகின்றன. ஒரு நாள் மரகத அணி அணிந்து புறப்படும்போது பர்வதவர்த்தனியைப் பார்த்துப் பெருமான் 'ஏனம்மா! ஒன்றும் அணிந்து கொள்ளாமல் இப்படி வருகிறாய்; இது உனக்கு அழகா?' என்று கேட்கிறார். அதுகேட்ட அம்மையார் தன்னுடைய பச்சை நிறத்தைப் பார்த்துப் பெருமான் பரிகசிப்பதாக எண்ணி நாணி நிற்கிறாள். மற்றொருநாள் மாணிக்க அணி அணிந்து புறப்படும்போது மகேசுவரி மகேசுவரனைப் பார்த்துச் சிரிக்கிறாள். பெருமான் தமது செம்மேனியில் மாணிக்க ஒளி மறைந்து விடுவதை யறிந்து இது என்ன பழிக்குப் பழியா என்று எண்ணுகின்றார். இத்தகைய நிலைகள்

ஆண்டவன் அணி அணிந்து புறப்படுகின்றபோது தரிசிக்கும் நமக்கு உண்டாகாமல் இராது.

இத்தகைய அணிகளையெல்லாம் ஒருமுறை பார்த்தருள வேண்டும் என வேண்டிக் கொண்டார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் தேக சிரமத்தையுங்கூடப் பாராது உடனே புறப்பட்டார்கள். இராமேசுவரம் தீவாக இருப்பதால் பொற்பண்டாரத்திற்கு எப்போதும் போலீஸ் பாதுகாப்பு உண்டு. பொற் பண்டாரத்தின் சாவிகளில் ஒன்று ஸ்தானீக ரிடமும் இருக்கும். ஸ்தானிகர், டிரஷரர், பேஷ்கார் எல்லாருமாகக் கூடித் தான் போலீஸ் பந்தோபஸ்துடன் பொற்பண்டாரத்தைத் திறக்கவேண்டும். அவ்வாறே அது திறக்கப் பெற்றது, எல்லாத் திருவாபரணங்களையும் எடுத்துக் காட்டினார்கள். ஒவ்வொன்றும் தன்னைவிட உயர்ந்தது வேறு இல்லாமையைக் காட்டி மதிப்புப் போட்டியிட்டன. இவற்றையெல்லாம் அவசர அவசரமாகப் பார்வையிடச் சுமார் ஒன்றரை மணிநேரம் ஆயிற்று. அவற்றை வைத்திருக்கும்முறை அழகானது. பட்டு மெத்தை யமைந்த பெட்டிகளில் தனித்தனியே ஒன்றோடொன்று இணைந்து மெருகு குறையாதவண்ணம் பாதுகாக்கப்பெறுகின்றன.

பெருமானது தங்கப்பல்லக்கும் காட்டப்பட்டது, அதன் வேலைப்பாடு மிக அருமையானது. மேற்பூச்சு வேலையல்ல; உண்மை. உண்மைக்கு உறுதியும் ஒளியும் இயற்கையாகவே உண்டல்லவா? அந்த இயற்கைத் தோற்றம் பல்லக்கின் ஒவ்வொரு பகுதியிலும் விளங்கிற்று. இதைப் பார்த்து முடிந்ததும் 'சேதுமன்னருடைய

குமரியில் :



உதய சூரியன்.

இராமேசுவரத்தில்:



இராமபிரான் வழிபாடுசெய்தல். (சித்திரம்)

சிந்தனையின் பரப்பைக் காட்டும் படம் ஒன்று இங்கு உள்ளது அதனையும் பார்க்கவேண்டாமா' என்று ஐயர் கேட்டுக்கொண்டார். 'அதென்னபடம்? சென்று பார்ப் போமே' என்று புறப்பட்டார்கள் மகாசந்நிதானம் அவர்கள், மேற்குப்பிராகாரத்திற்கு அழைத்துச்சென்று இதுதான் அந்தப்படம் என்றார் ஐயர். 'என்னையா; மண்டபத்தைக் காட்டிப் படம் என்கிறீர்கள்' என்று நாங்கள் கேட்டோம். இந்தத்தூண்கள் ஒரே மாதிரியான அமைப்புடன் சற்றேறக்குறைய ஒரு பர்லாங் தூரம் விளங்குவதைப் பாருங்கள். இதைச் செய்வித்த சேது மன்னர் சிந்தனை எவ்வளவு பரப்புள்ளது, இவ்வளவு பெரிய பிராகாரத்தைச் சிருஷ்டித்த சேதுமன்னர் சிந்தை யிலே- மனப்படத்திலே பெருமான் திருவோலக்கக் காட்சியும், அதற்கு முன்னே பல கோடிக்கணக்கான அடியார்கள் கும்பிட்டு நிற்கும் காட்சியும், இடம் போதாமல் இன்னும் பலர் அவதிப்படும் காட்சியும் அல்லவா தோன்றியிருக்கவேண்டும். இல்லையானால் இவ்வளவு பெரிய மண்டபத்தை எடுத்திருப்பாரா என்று சொல்லி அழைத்துக்கொண்டே, 'இங்கே சென்றால் ராமன் ராமநாதனைப் பிரதிஷ்டை செய்வதைப் பார்க்கலாம்' என்றார். அப்படியே குத்தகைதாரனுக்கு ஒன்றரை ரூபாய் கட்டணம் செலுத்திவிட்டு உள்ளே நுழைந்தோம்.

அநுமார் தன் உள்ளங்கையில் இராமநாதனைக் கொண்டுவந்து கொடுக்கிறார், பிராட்டி பூஜைக்கு வேண் டும் கைங்கர்யங்களைச் செய்துகொண்டு பக்கத்திலிருக் கிறார், இராமன் ஸகிதலிங்கத்தைத் தாபித்துப் பூசிக்கிறார்.

இளையபெருமாள் அச்சமும் அன்பும் கலந்த முகத்தோடு அண்ணன் பக்கத்தில் நிற்கிறார். இந்தக்காட்சி எல்லாருக்கும் பெரிய வியப்பை ஊட்டியது. சில நிமிஷங்கள் கழிந்தன. தேவஸ்தான நிர்வாகி 'போகலாமே' என்றார். எல்லாரும் வைத்தகண் வாங்காது நின்றோம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 'என்ன! சிந்தை லயித்ததா' என்றார்கள். 'மரத்தை மறைத்தது மாமதயானை, மரத்தில் மறைந்தது மாமதயானை, பரத்தை மறைத்தது பார் முதல் பூதம், பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்' என்றேன்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உடனே 'சுண்ணும்பும் கல்லும் பலநிறச் சாயங்களும் தோன்றாமல் இராமனும் ஸீதையும் அநுமனும். இளவலுமாக எண்ணியிருந்த இந்த நிலையே அநந்யபாவமாக ஆண்டவனைத் தியானிக்கும் நிலை; இந்நிலையடையவே தல யாத்திரைகளும் தீர்த்த ஸ்நானங்களும், இதனையடைந்த இந்நாளே நன்னாள்; நீங்கள் சுண்ணும்பு முதலியவைகளை அவையவையாகப் பார்க்கும்போது இந்த ஆனந்த நிலை உண்டாயிருக்குமா? அவற்றின் கூட்டுறவால் விளைந்த இவ்வுருவத்தின் பொருளைத் தியானித்தகாலத்திலல்லவா உயர்ந்த நிலை உண்டாயிற்று. இதுதான் அநுபவம் என்று சுட்டிச் சொல்லவேண்டியதைச் சொல்லியும் காட்டினார்கள். ஏனைய சிற்பச் சித்திரங்களையும் திருக்கோயிலமைப்பையும் பார்த்துக் கொண்டே சுமார் ஐந்து மணிக்கு வெளியே வந்தோம். ஸ்ரீ காசிமடத்துக் காரியஸ்தர்கள் திருவருட் பேருண்டிகொண்டு வந்த

எங்களுக்குச் சிற்றுண்டிக்கேற்ற காலம் சென்று விட்டதைச் சிந்தனைக்குக் கொண்டு வந்தார்கள், உண்டோம்.

பிறகு மகாசந்நிதானம் அவர்கள் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளினார்கள். அதனை முடித்து வந்ததும் கோயில் அதிகாரிகளும் பொதுஜனங்களும் 'ஒரு பொது வரவேற்புக்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் அதில் சிலவார்த்தைகளேனும் திருவாய்மலர்ந்தருள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்கள். பொதுமக்களுடைய அன்புரையை மறுக்கமுடியாமையால் 'இரவு இரண்டாங் கால தரிசனத்திற்கும் அர்த்தயாம தரிசனத்திற்கும் வருகின்றோம். அப்பொழுது அந்நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளுங்கள்' என்று ஆணை தந்தார்கள்,

இரவு எட்டுமணி யிருக்கும். சகல மரியாதைகளுடனும் விருதுகளுடனும் மேளவாத்தியங்களுடனும் ஜனங்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை அழைத்துச் செல்ல வந்தார்கள். அம்மன்கோயிலில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, ஆதீன ஓதுவாமூர்த்திகளும் ஆலய ஓதுவாமூர்த்திகளும் தேவாரப்பண் இசைத்தார்கள். ஆடவரும் பெண்டிருமாக ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள், பொதுமக்கள் சார்பாக வரவேற்புப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பெற்றன, பின்னர் அடியேன்,

'சேது தமிழ்நாட்டின் தென் எல்லை; சிவாலயங்களுக்கும் தென் எல்லை; அதுபோல இன்று மக்களுடைய அன்பிற்கும் எல்லையாக விளங்குவதைக்கண்டு அன்புச்

சமயிகள் யார்தான் மகிழாமல் இருக்கமுடியும்? இங்கே வருகிறமக்கள் அனைவரும் கங்கையாடி விசுவேசர் வழி பாடு முடித்த புண்ணியவான்கள். இந்தஸ்தலத்தி லேயே நிரந்தர வாசம்பண்ணுகிற நீங்களோ தினந் தோறும் கங்கையை இருந்த இடத்தில் வரவழைத்து ஸ்பரிசித்தபுண்ணியவான்கள். எங்கள் அருட்குருமூர்த்தி யாகிய பரமாசாரிய மூர்த்திகளின் திருமுன்னிலையில் புண்ணிய சீலர்களாகிய உங்களுக்குச் சொல்லக்கூடியது என்ன இருக்கிறது, இருந்தாலும் ஒருசிலவற்றைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஔவை, 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றாள். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்பது நம் முதுமொழி. நாம் பரம்பரையாகச் செய்துவந்த புண்ணிய விசேடத் தால் நமது நாட்டில் கோயில்களுக்குக் குறைவேயில்லை, நம்முடைய முன்னோர்கள் கோயிலை அனவரதமும் வணங்கி வந்தார்கள், ஆலயம் வேறு ஆண்டவன் வேறு என்ற எண்ணம் அவர்கட்கு இல்லை. இரண்டையும் ஒன்றாகவே எண்ணினார்கள். அவர்களுடைய வாழ்க் கையின் வீழ்நாட்கள் திருக்கோயிலை வழிபடாத நாட் களும் சிவபெருமானைத் தரிசிக்காத நாட்களுமேயாம். ஆதலால் அனைவரும் ஒருமுறையேனும் கோயிலுக்குச் சென்றே வழிபட்டுவந்தார்கள்; குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே யாதலின் ஆண்டவனுடைய அருள் விளக்கமும் அவர்களுக்குக் கிடைத்து வந்தது. இன்றைக்கோ நாம் எத்தனையோ வீண்வேலைகளில் ஈடுபடுகிறோம். அவனை மறந்து நம்மையே நினைக்கிறோம். நம்மை நாமே காப்பாற்றிக் கொள்பவர்களாக ஆகி விட்டோம். மழைக்குப் பனிக்கட்டிதூவிச் செயற்கை மழை உண்டாக்க நமது சிந்தனை எழுகிறது. நம்மை

மறந்து அவனையே நாம் நினைப்போமானால் நம்மைக் காப்பாற்றும் பொறுப்பு அவனதாகின்றது. நமக்குக் கவலையில்லை. அதற்கு உரியவழி நாடோறும் கோயிலுக்குச்சென்று அவனை வணங்குதலே, நாடோறும் போகமுடியாவிட்டால் வாரத்திற்கு ஒருமுறையேனும் செல்லவேண்டும். அதனையே மகாசந்நிதானம் அவர்கள் யாத்திரையாகப் போகுமிடங்களிலெல்லாம் வற்புறுத்தி வருகின்றார்கள். ஆகவே வாரவழிபாடு ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது.'

என்று பேசிமுடித்தேன். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்,

"நமது பரம்பொருளாகிய நாதனை அடைவதற்கு நான்கு உபாயங்கள் வகுக்கப்பெற்றுள்ளன. அவை சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. இவற்றைத் தாசமார்க்கம், 'சத்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பார்கள். தாசமார்க்கமாய சரியையாவது திருக்கோயிலை அலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூமாலை கட்டுதல், திருவிளக்கிடுதல், திருநந்தனவனம் வைத்தல், அடியார்களை உபசரித்தல் முதலியனவாம், இவற்றைச் செய்தோர் சாலோகமுத்தியடைவார்கள். இவற்றையே அப்பர் சுவாமிகள்.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
 நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
 பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
 சங்கரா சயபோற்றி போற்றி என்றும்

அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.''

என்று சொல்லுகின்ருர் பாருங்கள். சத்புத்திரமார்க்க மாகிய கிரியையாவது விடியற்காலையிலெழுந்து, பூக் கொய்து, நீராடி, தோய்த்துலர்ந்த ஆடைதரித்து, தூபம் தீபம் திருமஞ்சனம் திருவமுது இவற்றைக்கொண்டு ஐவகைச் சுத்திகளையும் செய்து, ஆசனம் மூர்த்தி மூர்த்தி மான்களால் இறைவனைப் பாவித்து, ஆவாஹனம் செய்து, அருச்சித்து, தோத்திரித்து, அக்கினிகாரியம் செய்தல். இதனை முறைப்படிசெய்தவர்கள் சாமீப முத்தியை அடைவார்கள்.

சகமார்க்கமாகிய யோகநெறியாவது ஐம்பொறிகளை யும் தத்தம் புலன்களிற் செல்லவிடாது தடுத்து, இடை பிங்கலைவழியாகச் செல்லும் பிராணனை இடைவிடாது ஆயாமஞ்செய்து, மூலாதாரம் முதலான ஆருதாரங் களிலும் தியானித்து மதிமண்டலம் வரையில் சென்று அமுதபிந்து உடல்முழுதும் வியாபிப்பதாகப் பாவித்து, சோதி சுவரூபமான ஆண்டவனை இடைவிடாது தியா னித்திருத்தலாம். இதற்கு இயமம் நியமம் முதலான எட்டுறுப்புக்கள் கூறப்பெற்றுள்ளன. இந்த நிலையில் சித்தியடைந்தவர்கள் சாமீபமுத்தியடைவார்கள், இதனை அப்பரடிகள்.

''உயிராவணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிராவணஞ் செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி

அயிராவணம் ஏருது ஆனேறேறி
அமரர் நாடாளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமே என் அம்மானே நின்
அருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.

என்ற திருத்தாண்டகத்தால் தெரிவிக்கிருர். சன்மார்க்க மாகிய ஞானமாவது வேத சிவாகமங்களை முறையே உணர்ந்து முப்பொருளிலக்கணத்தையும் அறிந்து சிவ ஞானம் பெற்றுச் சிவனோடு ஒன்றும் நிலையையெய்துவது. இந்நெறியில்நின்ரோர் அவனே தானேயாகிய அந்நெறியில் ஏகனுகிநிற்பர். இது பரமுத்தி. இந்த நால்வகை நெறி களுமே இறைவனை அடைதற்காக நமக்கு வகுத்துக் கொடுக்கப்பெற்றன. இவற்றில் முறையே நின்று அநுபவம் முதிர்ந்த சீவன்முத்தர்கட்கும் ஆலயவழிபாடு மிக இன்றியமையாதது.

நாம் ஆலயத்துக்குச் சென்ருல் உள்ளேயிருக்கும் திருமேனியைச் சிவமெனவேகண்டு வழிபடவேண்டும். பசுவின் உடல்முழுதும் பால் வியாபித்திருந்தாலும் காம்பின்வழியாகவே வெளிப்படுவதுபோல் இறைவன் எங்கும் வியாபித்திருந்தாலும் சிவலிங்கத்தினிடமாகவே நின்று அடியார்களுக்கு அருள் வழங்குவன். ஆதலால் திருக்கோயில்வழிபாடு சோபானக் கிரமத்திலுள்ள அடியார்களும் அநுபூதிமான்களும் இன்றியமையாது செய்யவேண்டியது ஒன்று.

ஆலயம் என்பது மக்கள் மனம் ஒன்றுபடுதற்குரிய இடம் என்பதுபொருள். உலகவாழ்வில் அலைந்துதிரிந்த மனத்திற்கு அமைதி இன்றியமையாதது. அமைதியை, அமைதியற்ற இடங்களாகிய உலகியலில் அடைய

முடியாது, சாந்தம் பரமசாந்தம் என்றுசொல்லக்கூடிய ஆண்டவனிடத்தில்தான் அதை அடையமுடியும். அந்த ஆண்டவன் விசேஷமாக விளங்கும் இடம் ஆலயங்களே. நம்முடைய ஆலயங்கள் சிவாலயவிதிப்படி நிர்மாணிக்கப் பட்டன. ஆலயங்களில் நடைபெறும் பூசைமுறைகளும் வெறும் கிரியைகள் அன்று. உண்மை ஞானத்திற்கு வாயிலானவை. ஆதலால் நாம் வழிபடச் செல்லுகின்ற போது உண்மை ஞானம் தோன்றுகிறது, ஆணவச் சேட்டை ஆன்மாவினிடம் காணுதவாறு தடுக்கிறது. இந்த உயர்ந்த நிலையை அடைவதற்கு ஒவ்வொருவரும் தினந்தோறும் கோயிலுக்குச் செல்ல வேண்டியது மிக அவசியம்.

சமயிகளுக்கு அன்பு இன்றியமையாதது. அன்பில் மந்தம், மந்ததரம். தீவிரம், தீவிரதரம் எனப் பல்வேறு நிலயுண்டு. அரக்கு வெய்யிலில் நெடுநேரம் இருந்த பிறகு இளகுவதுபோல, இறைவனின் அருட்சந்நிதியில் நெடுநேரம் திளைத்தபிறகு ஈடுபடுவது மந்ததரமாம். வெயிலைக்கண்டவுடன் இளகும்மெழுகுபோல இறைவன் சந்நிதியை எதிர்ப்பட்டவுடனேயே ஈடுபடுவது மந்தம். நெருப்பினைக் கண்ட நெய்போல மனம் இளகுவது தீவிரம். தைலதாரையைப்போல இடைவிடாது சிவ னிடத்து இணைந்து நிற்பது தீவிரதரம்.

இத்தகைய அன்புநிலை எளிதில் கிட்டுவது அன்று. நெடுநாள் பழகுவதாலும் பூர்வபுண்ணிய வசத்தாலும் விளைவதாம். நெடுநாட்பழகத் தினம்தோறும் கோயி லுக்குப் போதல் வேண்டும், இக்காலச் சூழலிலோ நாள்தோறும் கோயிலுக்குப் போகமுடியாதவாறு பல இடையூறுகள் இருக்கின்றன. இடையூறுகளை நீக்கி

இறைவனைக் காண்பதிலேயே இன்பம் இருக்கின்றது. ஆதலால் நாள்தோறும் சிவதரிசனம் செய்தல்வேண்டும். முடியாதவர்கள் வாரவழிபாடாவது செய்தல்வேண்டும். அதன் திட்டத்தையும், அவசியத்தையும் பற்றி நமது ஆதீனவித்துவான் நன்ருகப்பேசியிருக்கிருர். சோமவாரம் சிவபிரானுக்கு உகந்த நாள். அன்று மாலை அனைவரும் ஒன்றுசேர்ந்து பாராயணத்துடன் வீதிவலம்வந்து திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுங்கள். உங்களுக்கு இறைவன் அருள் தானேவந்து கிட்டும்.

நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். அசோகவனத்திலிருந்த சீதை அநுமானை இராமதூதனுக அறிந்துகொள்ள ஏதுவாயிருந்தது எது? 'எம்பிரான் நாமம் சொல்லி உருக்கினன் சிந்தையெல்லாம்' என்கிருர் கவி. அந்தச் சீதையின் சிந்தையை உருக்கும் தன்மைவாய்ந்தநாமத்தையுடைய இராமபிரானுல் ஸ்தாபிக்கப்பட்ட பெருமான் விளங்கும் இத்தலத்தில் வசிக்கிறீர்கள். அதிலும் அந்த இராமன் தன் பழியைப்போக்குதற்குப் பூசித்த தலத்தில் இருக்கிறீர்கள். 'அணையலை சூழ்கடல் அன்றடைத்து வழி செய்தவன், பணையிலங்கும்முடி பத்து இறுத்த பழிபோக்கிய இணையிலி' என்று இராமநாதப் பெருமானை ஞானசம்பந்தர் போற்றுகிருர் பாருங்கள். அந்தப்பெருமானை நாடோறும் வணங்கும் பாக்கியத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்.

காசியாத்திரையின் பூர்த்திக்காக இராமநாதரை வழிபாடுசெய்ய வந்த எமக்கு நீங்கள் வரவேற்பு அளித்தமைக்கு மிகமகிழ்ச்சி. உங்கட்கு எல்லா நலனும் உண்டாக இராமநாதப்பெருமான் அருள்செய்வாராக''

என்று ஆசியுரை அருளினார்கள். 'வாழ்க அந்தணர்' 'ஆறிருதடந்தோள் வாழ்க' என்ற வாழ்த்துப்பாடல்கள் பாடக் கூட்டம் முடிந்தது. மகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளியானார்கள்.

அர்த்தஜாம வழிபாடு

கூட்டம் முடிந்து போக அர்த்தஜாமகால சமய மாயிற்று. பெருமான் லயாங்க பூஜையை ஏற்றுக் கொள்ளுங்காலம். உலகமே வடிவாகிய இறைவன் பள்ளி கொள்ளுகிறார் என்றால் உயிர்கள் ஓய்வடைய சங்கார கிருத்தியத்தை மேற்கொள்ளுகின்றார் என்பதுதானே கருத்து. அதுபோலத் திருவனந்தல் கொள்ளுகின்றார் என்றால் சிருஷ்டியைத் தொடங்குகிறார் என்பதுதானே பொருள். அங்ஙனமே ஏனைய எல்லாக் காலங்களுக்கும். இராமநாதப்பெருமான் சத்தியையும் தன்னுள் அடக்கி ஒடுக்குங்காலமாகிய அர்த்தஜாம பூஜை இத்தலத்தில் மிக அழகாக நடைபெறுகிறது. பெருமானுக்கு ஒற்றை மணியடித்து ஒரு தீபாராதனை செய்து அர்த்தசாம பூஜை முடிவெய்துகிறது. அர்த்த ஜாம அழகராகச் சிலதலங்களில் திருவடிமட்டும் புறப்படுவது உண்டு. சிலதலங்களில் கல்யாணசுந்தரர்மட்டும் புறப்படுவார். இங்கே சுகாஸனத்தில் இருந்த திருக்கோலத்தோடு அலங்கரிக்கப்பெற்ற வெள்ளிச்சிவிகையில் எழுந்தருளு கிறார். பெருமானின்திருமேனி தங்கத்திருமேனி. இவர் எழுந்தருளிப் பலிபீடத்தின் அருகாமையில் வந்ததும் பலிபூஜையும் தீபாராதனையும் நடைபெறுகின்றன. தீப ஜோதி பெருமான் திருமேனியில்பட்டு ஒரே பெருஞ்

ஜோதியாகக் காட்சி யளிக்கின்றது. 'பொன்வண்ணம் எவ்வண்ணம், அவ்வண்ணம் மேனி' என்றது பொன் போன்ற திருமேனி என்பதைமட்டும் குறிப்பிக்கும். இங்கு இறைவன்மேனி சொக்கப்பொன்னுல் இயன்ற தாதலின் பொன்னேயான திருமேனியாக விளங்கிற்று. அங்கங்கும் பல அரசபெருமக்களுடைய – ஜமீந்தார் களுடைய – சிற்றரசர்களுடைய் கட்டளையறை வாசல் களில் பூர்ணகும்பங்கள் வைத்துத் தீபாலங்காரம் செய்யப்பட்டிருந்தன. அங்கங்கும் சந்தனம், புஷ்பம், காளாஞ்சி, நைவேத்திய வகைகள் எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பெருமான் அங்கங்கே வந்ததும் மாலைசாத்திச் சந்தனம் கொடுத்து வரவேற்று, நைவேத்திய தூபதீபாராதனைகள் செய்யப்பட்டன. இதைப்பார்க்கும் அன்பர்கள் உள்ளம் எப்படி இருக்கும்?

அரசர்பெருமான் பவனிபுறப்படுகிருர். அங்கங்கும் பூர்ணகும்பத்துடனும் தீபாலங்காரத்துடனும்குடிகளின் வரவேற்பு. அரசன் குடிகள் மனம்கோணுமல் நடப் பவன். அரசன்முதல் ஏழைவரை சமமாக இருக்கின்ற அன்பின் நிலையைநோக்கி, அங்கங்கும் சென்று அவரவர் களுடைய நலம் தீங்குகளைஉசாவி, அவரவர்களும் தத்தம் ஆற்றல்களுக்கு ஏற்ப அளிக்கப்படும் காணிக்கைகளைக் கொண்டுசெல்வான் அல்லவா? அதுபோலவே இராம நாதப்பெருமானும் ஒவ்வொரு அறைவாசலிலும் சென்று பூசைஏற்றுத் திருக்கண்சாத்திப் போகின்ற பெருமை அன்பர் உள்ளத்திற்குப் பெருவிருந்தாகும், இப்படி இராமநாதர் பவனிவந்து பார்வதவர்த்தனியின் கோயில்

கொடிமரத்தின் சமீபமாக எழுந்தருளுகிருர். அங்கே பஞ்சாலாத்திகளுடன் ஒரு வரவேற்பு நிகழ்ந்தது. அதனை ஏற்றுக்கொண்டு பல்லக்கினின்றிழிந்து கைத் தலச் சேவையாகப் பள்ளியறையை யடைகின்ருர்.

பள்ளியறை அழகான தங்க மஞ்சத்தில் ஊஞ்ச லோடு கூடியது, அதன்மேல் பட்டு மெத்தை பரப்பப் பட்டு, குட்டைகளும் திண்டுகளும் அழகு செய்கின்றன, அதில் பெருமாட்டியின் வலப்பாகத்தில் பெருமான் எழுந்தருளுகின்ருர். களப சந்தனமும், கஸ்தூரியும், புனுகும் பெருமானுக்குப் பூசப்படுகின்றன. குழம்புப் பால் நிவேதிக்கப்படுகிறது. பின்னர் முறையே கட்டியங் கூறுபவர் 'மகாராஜராஜ ராஜபூஜித இராமநாதப் பெரு மானுக்குப் பராக்' என்று சொல்லி, சேதுகுலகாவல சேது பதி சண்முக ராஜேஸ்வர சேதுபதி அவர்களுக்கு அஷ்ட ஐசுவரியங்களும் சிந்திதமனோரதசித்தியும் மேன்மேலும் உண்டாவதாகுக என்று ஆசீர்வாத ஸங்கல்ப பூர்வகமாக அர்த்தசாம ஆராதனை நடைபெறுகிறது. அது முடிந் ததும் இடப இலச்சினையோடு கூடிய வெள்ளித்தடி யேந்திக் கட்டியஞ் சொல்லுபவர், இன்ன திதி வார நக்ஷத்திரம் கூடிய இன்ன தினத்திலே அர்த்தசாமபூஜை முடிவில் ரிக்வேதப் பிரியராகிய இராமநாதருக்கு ரிக்வேதத்தைப் பாராயணம் செய்க சாமவேத பாரா யணம் செய்க என்று கூறியவுடன் அந்தந்த வேதங்களும் பாராயணஞ் செய்யப்படுகின்றன, பின்னர் சைவ சமயா சாரியர்களாகிய ஞானசம்பந்தாதிகளுடைய திராவிட வேதத்தைப் பாராயணம் செய்க என்றவுடன் திராவிட வேதம் பாராயணம் செய்யப்படுகின்றது. தேவார

இராமநாதபுரம்:



அரண்மனை முகப்பு.

மண்டபம் ரயிலடியில் :

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்.

பாராயணத்தில் தனித்த மதிப்பு காட்டப்படுகின்றது. இது சேதுமன்னரிடத்துள்ள தமிழபிமானத்தையும் சைவப்பற்றையும் தெரிவிப்பதாகும். இதுவரையில் குருக்கள், பெருமானும் பெருமாட்டியும் திருவோலக்கம் கொள்ளும் ஊஞ்சலை மெதுவாக அசைக்கிறார். பின்னும் பக்கத்திலும் உள்ள கண்ணாடிகளில் அம்மையப்பர் ஸேவை எல்லாருடைய மனத்தையும் உருக்குகிறது. அதன் பிறகு குருக்கள் இன்றைய பூஜையிலுள்ள குறை நிறைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறார். டிரஷரர் அன்றைய வரவு செலவு கணக்குகளை முடித்துப் பட்டோலை வாசிக்கிறார். பூஜை இனிது முடிந்து திருக்காப்பிடப்படுகிறது. இந்த வழிபாட்டு முறையில் மகாசந்நிதானம் அவர்கள் பரவசப்பட்டுத் தரிசனம் செய்தார்கள், சுமார் பதினொருமணியளவில் ஜாகைக்கு எழுந்தருளியானார்கள்.

தனுஷ்கோடி யாத்திரை:

இரவு மணி இரண்டு. மூன்றுமணிக்கு ஒருவண்டி மண்டபத்தில் புறப்படுகிறது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முதல்நாள்போலவே நடந்து புகைவண்டி நிலையத்தை அடைந்தார்கள். மணி 4½க்கு அந்தவண்டி மண்டபம் வந்து சேர்ந்தது. அங்கிருந்து தனுஷ்கோடிக்கு ஒரு தண்ணீர்வண்டி செல்கிறது. அதில் சில மூன்றும் வகுப்பு வண்டிகள் மட்டும் இணைக்கப்பட்டிருக்கும். காலை 5½மணிக்கு அந்தவண்டி மண்டபத்தைவிட்டுத் தனுஷ் கோடிக்குப் புறப்படுகிறது. அதைவிட்டால் 9-மணிக்குத் தான் வண்டி. கோடிக்கரையில் வெய்யில் தாங்காது.

இந்தவண்டியில் யாத்திரைசெய்வதுதான் நல்லது என்று ஏற்பாடுகளைக்கவனிக்கவந்த ஸ்ரீமான் கோதண்டராமய்யர் முதலியோர் தெரிவித்தனர். அங்ஙனமே ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் 3-ம் வகுப்பு வண்டியில் பிரயாணத்தைத் துவக்கினர்கள். 25—9—51 காலை ஏழுமணி சுமாருக்குத் தனுஷ்கோடி ஸ்டேஷனை அடைந்தோம்.

ஸ்டேஷனிலிருந்து நான்குபர்லாங் தொலைவிலுள்ள ராஜாசத்திரத்தில், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தங்க ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அங்கே கொண்டு போய் சாமான்களை இறக்கியதும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் கோடிதீர்த்தக்கரையை நோக்கி எழுந்தருளினர்கள். சத்திரத்துக்கும் தீர்த்தக்கரைக்கும் சுமார் ஒருமைல் இருக்கும். நல்ல புதைமணல். கடுகிநடந்தால் காலோய்ந்து போகும்; வெயிலோ வெதுப்புகிறது. அடியும் சுடுகிறது; முடியும் சுடுகிறது. ஆனலும் இறைவன் துணையில்லாமலில்லை. மப்பு கூட்டம் கூட்டமாக வந்து வெயிலை மறைக்கிறது. தண்மை தவழ்கிறது. எங்களுக்கெல்லாம் 'ஈசன் எந்தை இணையடி நிழல்' ஞாபகம் வருகிறது. இடைக்கிடையே கடலோதம் பெருகிவடிந்த கால்கள் ஓடுகின்றன. சில இடங்களிலே ஒரு பர்லாங்தூரம் கால்பரட்டினளவாக நீர் தேங்கி நிற்கின்றது. அந்த இடங்களைக் கடந்து செல்கின்றபோது நாங்கள் எல்லோருமே வடிம்பலம்பநின்ற பாண்டியமன்னர்களாக ஆகிவிட்டோம்.

கோடிக்கரையை அடைந்ததும் மகாசந்நிதானம் அவர்கள் தானசங்கல்பம்செய்துகொண்டு சுவர்ணதானம்

செய்தார்கள். குருமூர்த்திகளைத் தியானித்துக்கொண்டு 24 ஸ்நானங்களை விதி முறைப்படி செய்து முடித்தார்கள். ஏழைகட்கும் பிராமணர்களுக்கும் யதிகளுக்கும் வஸ்திரதானம் செய்தார்கள். அங்கிருந்தும் ஜாகைக்கு எழுந்தருளி, பூஜைபாராயணாதிகளை முடித்துக்கொண்டு மாகேசுரபூஜையை ஏற்றுக்கொண்டார்கள். நண்பகல் $1\frac{1}{2}$ மணிக்குப் போட்மெயில் தனுஷ்கோடி கடற்கரையை விட்டுப் புறப்படுகிறது. அதில் ஏறி மாலை நான்குமணியளவில் ராமநாதபுரத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கே தேவஸ்தான சூபரிண்டெண்ட் அவர்கள் புகைவண்டி நிலையத்திற்குவந்து வரவேற்றார்கள். ஆதீனமோட்டாரில் ஆரோகணித்துக்கொண்டு மகாசந்நிதானம் அவர்கள் சமஸ்தான அரண்மனை ஸ்ரீ சண்முக விலாசத்திற்கு எழுந்தருளியானார்கள்,

அரண்மனை ஏஜண்டு அவர்களால் அங்குவேண்டிய எல்லா வசதிகளும் தயாராகச் செய்துவைக்கப்பட்டு இருந்தன, ராமநாதபுரத்திலுள்ள பல பிரமுகர்கள் வந்து தரிசித்துத் திருநீறு பெற்று மகிழ்ந்தார்கள், நெடுநேரம் யாத்திரை வசதிகளைப்பற்றியும் அதனால் உண்டாகும் மன ஒருமைப்பாட்டைப்பற்றியும் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். மணி எட்டு ஆனதும் அரண்மனைத் தெய்வமாகிய இராஜராஜேஸ்வரியைத் தரிசிக்கவேண்டுமென்று திருமஞ்சனம் முடித்துக்கொண்டு புறப்பட்டார்கள். இராஜராஜேஸ்வரிக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்யப்பட்டிருந்தன. அரண்மனை வழக்கப்படி அநேக பிராமணர்கள் வேதபாராயணம் செய்தார்கள்.

மகாசந்நிதானம் எழுந்தருளியானதும் விசேஷ சங்கற்பத்துடன் அர்ச்சனை தொடங்கியது. அம்மைக்குச் சாதரா சாத்தி அருச்சனை தீபாராதனை நடைபெற்றது. வழிபாடு முடிந்ததும் மகாசந்நிதானம் ஓய்வுகொண்டார்கள்.

மறுநாள் :

26—9—51 புதன்கிழமை காலை நான்கு மணிக்கு எழுந்திருந்து திருமஞ்சனம் முதலியவைகளை முடித்துக் கொண்டு மகாசந்நிதானம் அவர்கள் திருமுறைப் பாராயணம் செய்துகொண்டிருந்தார்கள். மணி ஆறு. பாராயணம் முடிந்ததும் வக்கீல் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்களும், உள் துறை மணியம் ஐயரவர்களும் மகாசந்நிதானமவர்களைத் தரிசித்து உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

சேது அரண்மனை என்றுலே தமிழும் இசையும் கலையும் வளர்ந்த இடம் என்றுதானேயா பொருள். தமிழ்ப்பாட்டு ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பொன் தேங்காயாக மதிப்பிட்டுப் பொன்னுங்காலை வழங்கியதும் இந்த சமஸ்தானந்தானே. 'பங்கா இழுப்பது எங்கள் முன்னோர் செய்திட்ட பாக்கியமே' என்று சிலேடைப் புலியைப் பங்கா இழுக்கச் செய்ததும் இச்சமஸ்தானந் தானே. நான்காம் தமிழ்ச்சங்கத்தை இன்றைய மதுரையில் இச்சமஸ்தானம் ஏற்படுத்தாவிட்டால் தமிழ் ஏது? நடமாடும் புத்தகசாலையாகிய சேற்றூர்ச் சுப்பிரமணிய கவிராயர் அவர்களின் அருமைதெரிந்து போற்றியதும்

இந்தச் சமஸ்தான சபையல்லவா? பாஷா கவிசேகர மகாவித்துவான் ரா. ராகவையங்கார் அவர்களின் தமிழ் மணம் வீசிக்கொண்டிருப்பதும், மு. ராகவையங்கார் அவர்கள் சிறந்த தமிழ் ஆராய்ச்சியுரைகளை நல்கி வருவதும் சேது அன்னத்தினால்தானே; மகாமகோபாத்யாய சாமிநாதையரவர்கள் சங்க இலக்கிய வெளியீட்டுப் பணியை விரும்பி மேன்மேலும் செய்வதற்காக மாதந்தோறும் உதவி செய்துவந்ததை அறியாதார் யார்? என்று படிப்படியாக மகாசந்நிதானமவர்கள் அடுக்கிக் கொண்டு வந்ததும், ஐயருக்கு ஓரே ஆச்சரியமாகி விட்டது, அப்படித் தமிழ் மணக்கும் சேதுமன்னர் அரண்மனையின் ஆஸ்தான மண்டபம் அலுவலகங்கள் ஆகியவைகளையும் பார்வையிட வேண்டாமா என்று கேட்டுக்கொண்டார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் அப்படியே புறப்பட்டார்கள். சுற்றிப் பார்த்துக்கொண்டுவரும்பொழுது அலுவலகச் சுவர் ஒன்றில் ஒரு படம் மாட்டியிருந்தது. சேதுபதிகள் படத்தைத்தவிர வேறொன்றும் மாட்டியிராத இந்த இடத்தில் இப்படம் யாருடையது? என்று கேட்டோம். 'ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்' என்றார். ஏனைய படங்களெல்லாம் அங்கிதரித்து அரச உடையிலே இருக்கின்றன; இந்தப்படம்மட்டும் விபூதிருத்திராக்ஷத்தோடு விளங்குகின்றதே என்று கேட்டோம். 'பரமபக்தர் ஸ்ரீ பாஸ்கரமன்னர் அவர்களுடைய படம் இது' என்று மிகப் பரபரப்போடு ஐயர் சொன்னார். அப்போது அரசர் என்ற அதிகாரத்திற்கு உண்டாகும் அச்சச் சுவையைக் காட்டிலும், பரம பக்தர் என்றபோது

உண்டான பக்திச்சுவை எங்களுக்கு மிக இனிப்பாக இருந்தது.

மகாசந்நிதானம் அவர்கள் இந்தப் படத்தைப் பார்த்ததும் பழைய பாண்டிய மன்னர் ஒருவருடைய ஞாபகந்தான் நமக்கு வருகிறது என்றார்கள். பழைய பாண்டியமன்னர் யார் என்ற சிந்தனை எங்களை நெடுந் தூரம் இழுத்துக்கொண்டு போயிற்று. எங்கள் மனக் கண்ணில் நின்றசீர்நெடுமாறன் நின்றான்; மாறவர்மன் சுந்தர பாண்டியன், வரகுணபாண்டியன், வரதுங்க ராம பாண்டியன் முதலிய எல்லோரும் முறைப்படி வந்தார்கள். ஒவ்வொருவர் பெயராகச் சொன்னோம், மகாசந்நிதானம் அவர்களுக்குத் திருப்தி எற்படவில்லை.,

வையம் முறை செய்குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடேகமுமாக செழுங் கலன்கள்
ஐயன் அடையாளமுமாக அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமாமுடியே முடியாவதென்றார்.

என்ற பாடலைச் சொன்னதும், அதே மூர்த்தியைத் தான், இந்த மூர்த்தி நினைவுக்குக் கொண்டுவருகிறது என்றார்கள். அப்போதுதான் நாங்கள் மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளத்தில் சேக்கிழார் வீற்றிருப்பதை வியந்தோம். குதிரைலாயம், பாராச்சேவகன் இருப்பு முதலியவைகளையும் பார்த்துக்கொண்டே வரும்போது, எத்தனையோ எண்ணங்கள் தோன்றித்தோன்றி மறைந் தன. ஆய் ஆண்டிரனுடைய அரண்மனை ஞாபகந்தான் எங்களுக்கு வந்தது.

மணி ஒன்பது இருக்கும், சேதுமன்னர்தம்பி செல்வ ஸ்ரீமான் காசிநாததுரை அவர்கள் மகாசந்நிதானம் அவர்களைத் தரிசிக்க வந்தார்கள். உள்ளூர்ப் பிரமுகர்கள் பலரும் உடன்வந்தார்கள். மகாசந்நிதானம் அவர்கள் இராமநாதப் பெருமானிடம் சேதுபதிகளுக்கு இருந்து வருகிற அளவில்லாத பக்தியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, ஒவ்வொருநாளும் அர்த்தசாம காலத்திலும் திருவனந்தல் காலத்திலும் சேதுகாவலர் மரபு நீடூழி வாழ்க என்று ராமநாதப்பெருமான் முன்பு சங்கற்பிக்கின்ற புண்ணியம் ஒன்றே உங்கள் குலத்திற்குப் போதுமானது; இந்த அருமை வேறுயாருக்குக்கிட்டும் என்றெல்லாம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள் அப்போது ஆசிரியப்பயிற்சிப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியரும் வந்திருந்தார். அவர்நாட்டுப் பற்றுடையவர், தங்கள் பள்ளியையும் பார்வையிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆதீனத்தின் சார்பில் வந்திருந்த அனைவருக்கும் உயர்ந்த விருந்தளிக்கப்பெற்றது.

இதற்கு இடையிலே உத்தரகோச மங்கையைத் தரிசிக்க வேண்டுமென்ற பெருவிருப்பம் மகாசந்நிதானம் அவர்களுக்கு இருந்தது. ஆயினும் தாம் எழுந்தருள முடியாமையால் யாரையாவது அனுப்பி ஆராதனை செய்விக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அங்குப்போகும் அதிர்ஷ்டம் அடியேனுக்குக் கிட்டியது. போகின்ற வழியோ மண்சாலை. இடையில் இரண்டு, மூன்று கால்வாய்கள் உண்டு. அதில் தண்ணீர் ஓடி ஐந்து, ஆறு வருஷங்களிருக்குமாம். ஆயினும் 25-ந்தேதி

இரவு மழைபெய்தது, அதனால் வாய்க்காலைத் தாண்டிக் கார்கள் போகமுடியாது. ஜீப் ஒன்றுதான் செல்லும். சரியாகப் பதினொரு மணிக்கு உத்தரகோச மங்கையை அடைந்தேன். கோயில் மிகப்பழமையானது. அழகானது. மூர்த்திகள் மிகக் கவர்ச்சியாக இருக்கின்றன. அங்குள்ள நடராஜப்பெருமான் மரகதத் திருவுரு என்கிறார்கள். அந்த இடம் என்போன்றவர்களுக்கே மனச்சாந்தியை அளித்ததென்றால் மாணிக்கவாசகர்போன்ற ஞானானுபூதிச்செல்வர்களுக்கு மனம் எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள். மாணிக்க வாசகருடைய நீத்தல் விண்ணப்பம் பிறந்தது இந்தத் தலத்திலேதான்,

நடராஜப்பெருமான் திருவோலக்கக்காட்சி கொண்டருளும்போதெல்லாம் சேதுமன்னர் ஒருவர், பக்திப் பரவசத்தால் நடராஜர் ரத்னகாரத்தைக் கேட்கிறார்; நவமணி மாலையைக் கேட்கிறார்; நமது ராணி அணிந்திருக்கும் முத்துமாலையைக் கேட்கிறார் என்று எண்ணிக் கழற்றிக் கழற்றிக் கொடுத்துவிடுவாராம். இவ்வண்ணம் நடராஜப்பெருமானுடைய குனித்த புருவமும் குமிண் சிரிப்பும் அவர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டிருந்தன. இதற்கு முறையாக வழிபாடாற்றச் சென்றோம். உத்தர கோசமங்கைக்கரசுக்கு அருச்சனையும் நடைபெற்றது. நீத்தல் விண்ணப்பம் பாராயணம் செய்யப்பட்டது. பிரஸாதங்களை எடுத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தோம். மகாசந்நிதானம் அவர்கள் சண்முக விலாசத்தில் விற்றிருந்தார்கள். பிரசாதம் பார்க்கப்பட்டது.

ஆசிரியப்பயிற்சிப் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்களையும் மாணவர்களையும் அழைத்துக்கொண்டு வந்தார்கள். மாணவர்கள் அனைவரும் டெமான்ஸ்டேஷன் செய்து காட்டினார்கள். பிறகு அவர்கள் அனைவரும் ஒழுங்காக அமர்ந்து மகாசந்நிதானம் அவர்கள் உபதேச மொழியைக் கேட்கவேண்டும் என்று விரும்பினார்கள். மகாசந்நிதானம் அவர்கள் அடியேனைப் பார்த்து 'அறவுரைகள் சில வழங்குக' என ஆணை தந்தார்கள். அடியேன்,

"அருமை நண்பர்களே! மிகப் பெரிய நாட்டின் பொறுப்பு நம்மிடையே இருக்கிறது. நம்மிடத்தில் வெண்பளிங்குபோன்ற உள்ளத்தை ஒப்பிக்கிறார்கள். குழைவாக அரைக்கப்பட்ட சுதைகளைத் தருகிறார்கள். அவற்றை வைத்துக்கொண்டு நாட்டுக்கு அவசியமான பணியாளர்களைச் சிருட்டிக்கப் போகிறோம். நாம் சிருஷ்டிக்கும் பணியாளர் கூனும், குருடும், நொண்டியும், முடமுமாக இருந்தால் நாட்டிற்கு என்ன பிரயோஜனம்? படைத்த நமக்குத்தான் என்ன புகழ்? நாம் படைக்கின்ற பொருள்கள் வெறும் உருவங்களல்ல, அறிவுருவங்கள். பிரமன் சிருஷ்டிப்பதுகூட உருவங்களைத்தான்; நாம் சிருஷ்டிப்பதோ அறிவை. அதனாலேயே தருமை ஆதீனத்துக் குமரகுருபரசுவாமிகள்கூட,

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்தமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மாற்றிவர் செய்யும் உடம்பு"

என்று அழியாப் புகழுடம்பை ஆக்கும் பொறுப்பை நமக்கு அளித்திருக்கிறுர். பொறுப்பைப் பொறுப்புடன் நிறைவேற்றுபவனே புத்திமான். நம்வாழ்க்கைத்திறனும் உலகியல் திறனும் ஒருவாறு குறைந்துதான் இருக்கிறது. இன்று பாராளும் மந்திரிகள்முதல் அரசியல் அலுவலகத்தார் அனைவரும் நம்மிடம் படித்தவர்கள் என்ற பெருமை நம்மிடம்விட்டுப் போகாது. அதனை மனத்தில் எண்ணி, ஊதியம் குறைவாயினும், உழைப்பை மிகச் சிறப்பாகச் செய்துவிடல் வேண்டும்."

என்று பேசினேன். அடுத்து மகாசந்நிதானமவர்கள்,

"ஆசிரியர்களே! சிறுவர் உள்ளத்தைச் செம்மைப் படுத்தும் பொறுப்பு உங்களுடையது. வருங்கால நாட்டு மக்களை உருவாக்குவது உங்கள் பொறுப்பு. உலகம் நாட்டு வாழ்வு—ஆத்மிக வாழ்வு என்ற இரண்டையும் காலாகக்கொண்டு நடக்கிறது. இரண்டு காலில் ஒன்று இல்லையானாலும் நொண்டிதான். ஒருகால் ஒடிந்தமையினுலே இன்றைய உலகம் ஊன்றுகோலை நோக்கி ஓடுகிறது. ஆத்மிக வாழ்வு என்பது மெஞ்ஞானவாழ்வு. அது இல்லாமையினுலேதான் அது இருந்த இடத்தில் விஞ்ஞான வாழ்வாகிய மரக்காலை நம்பி வாழ்கிறோம். உண்மைக்கால் உதவுவதுபோல மரக்கால் நமக்கு வளைந்து கொடுக்குமா? அதனுலேயே இன்றைய கஷ்டங்களெல்லாம் உருவாகியிருக்கின்றன. இதனைக் கருதியே நமது ஆதீன வித்துவான் பக்குவப் படுத்தப் பட்ட சுதையைக் கொடுத்திருக்கிறதென்றும், வெண் பளிங்கைக் கொடுத்திருக்கிறது என்றும் சொன்னுர். உங்கள் மனம் செம்மையாயிருந்தால் அவர்கள் மனமும் செம்மையாக இருக்கும். உங்கள் மனம் கருப்பாக

இருந்தால் அவர்கள் மனமும் கருப்புத்தான். செம்மை என்பது சிவ சொரூபம். கருப்பு என்பது ஆணவவடிவம்; அறியாமையின் வடிவம். அறியாமையை அகற்றி அறிவை விரியச்செய்வதே ஆசிரியர் தொழில். அறிவே ஆண்டவன் வடிவம். ஆண்டவன் ஞாபகம் எப்போதும் வேண்டும். "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்ற வாக்கியம் படிப்பதற்காக மட்டும் ஏற்பட்டதன்று; அநுபவத்திற்குங்கூட. சொல்லிக்கொடுக்கிறபடி நீங்கள் நடந்தும் காட்டவேண்டும். நீங்கள் நடக்கிறபடி மாணவர்கள் நடப்பார்கள்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்பன தமிழ்மறை தந்த வள்ளுவர் வாக்கல்லவா? வள்ளுவர் சகாப்தத்தில் வாழ்கின்ற நீங்கள் வள்ளுவர் சொல்லியபடி நடக்கவேண்டியது கடமையல்லவா? உங்களைக் கண்டதற்குப் பெருமகிழ்ச்சி. உங்களுக்கு எல்லா நன்மையும் சர்வேஸ்வரன் கொடுப்பாராக."

என்று அறிவுரை வழங்கினார்கள். மணி மூன்று ஆயிற்று. அங்கிருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட ஆயத்தங்கள் நிகழ்ந்தன, மூன்றரை மணிக்குப் புறப்பட்டோம், கமுதி, அருப்புக்கோட்டை, விருதுநகர் வழியாகத் திருநெல்வேலி செல்வது என்ற உத்தேசம். அருப்புக்கோட்டை போகிற போது இரவு மணி ஒன்பது இருக்கும். நல்ல மழை, சுமார் இரண்டு மணிநேரம் கார் அசையவே முடிய

வில்லை, போக்குவரத்துக்குரிய நேர்வழியிலும் சுமார் இடுப்பளவு நீர் ஓடிக்கொண்டிருந்தது. அதுதான் அருப்புக்கோட்டையின் கடைவீதியுங்கூட. காரைச் சற்று மேடான பகுதியில் நிறுத்திவைத்திருந்தோம். அப்படியிருந்தும் சக்கரம் முழுகியிருந்தது. ஒருமணி நேரம் கழித்துச் சிறிது குறைந்தது. மேடான சந்தின் வழியாகக் கார் விருதுநகர்த் தெருவைப் பிடிக்கலாம் என்று ஒரு கடைக்காரர் சொன்னார். சந்து வழியாகக் காரில் சென்றோம்.

அத்தெருவோ மிக நெருக்கமானது. திருப்ப வேண்டிய இடங்களோ மிகச் சிக்கலானவை. ஊர்ந்து போகும் நிலை ஏற்பட்டுவிட்டது. மக்கள் மழையைக் கண்டதும் ஆனந்தக்கூத்தாடுகிறார்கள். கடந்த எட்டு ஆண்டுகளாக இதுபோல மழைபெய்ததே இல்லையாம், ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் குடி தண்ணீருக்காகப் பாத்திரங்களும் பானைகளுமாகக் குவிந்தன. மழைநீர் முழுவதையும் வரவேற்றன.

சிறந்த ஆசாரியன் உபதேசிக்கும் சிறந்த கருத்துக்களைக் கொஞ்சமும் சிதறாதபடி அப்படியே ஏற்றுக் கொள்கின்ற மாணாக்கர்களைப் பாத்திரங்கள் நினைவூட்டின. கொட்டுகின்ற மழையில் குடையுமின்றி மக்கள் உலாவி மழையை வரவேற்கின்றார்கள். இந்நிலையில் கார் ஒதுங்கி ஒதுங்கி நேர்வழியை அடைந்தது. ஒரு மணிக்கு விருதுநகரைத்தாண்டித் துலுக்கப்பட்டியை வந்தடைந்தோம்.

என்றும் மறக்காத நிகழ்ச்சி :

துலுக்கப்பட்டி விருதுநகரிலிருந்து ஐந்து ஆறு மைல்கள் இருக்கும். அங்கே ஒரு வடிமதகு உண்டு. காடாரம்பங்களில் மழை பெய்தால் வெள்ளம் வழியைத் தாண்டி வழிந்தோடும். இந்த வடிமதகுக்கு எட்டு ஆண்டுகளாக வேலையேயில்லை. அன்று திடீரென்று ரோட்டுக்கு மேல் ஆறு அடி தண்ணீர் ஓடியது. மப்பும் மந்தாரத்தோடு கூடிய கும்மிருட்டு. வானவெளியில் இங்கும் அங்கும் தோன்றுகிற ஏதோ சில நக்ஷத்திரங்கள். இவற்றின் ஒளியைக்கொண்டு நீர்ப்பரப்பை ஒருவாறு காணமுடிகிறது. ரோட்டின் இருமருங்கும் கடல்போன்ற நீர்ப்பரப்பு. இருகரைமருங்கும் மலைமலையாக வெண்ணுரைகள். இந்தநிலையில் விருதுநகர்நோக்கி வந்து கொண்டிருந்த இரண்டு மூன்று லாரிகள் காஸ்வேயின் இடையில் அகப்பட்டுக்கொண்டன. மூட்டைகனமிருந்ததால் நீர்வேகம் புரட்டித் தள்ளவில்லை. இந்தநிலையில் எங்கள் கார் அங்கேவந்து நின்றது. சிறுதூற்றலும் துளியும்; தாங்கமுடியாத குளிர்காற்று. எங்கும் திறந்த வெளி. மணியோ இரவு ஒன்றரை. இந்த நிலையில் எங்கட்குத் தூக்கம் ஒருபுறம்; நெடுந்தூரம்வந்த அயர்ச்சி மற்றொருபுறம். இந்த இடத்தில் வந்து அகப்பட்டுக் கொண்டோமே வேறு வழியில்லையே என்ற அச்சம் ஒருபக்கம்.

இவ்வளவுக்கும் மாற்றுமருந்து கொடுத்து அயர்ச்சியை நீக்கி முயற்சிகொடுக்கிறது சில் என்ற ஊதைக்

காற்று. கீழே இறங்கி ஜலத்தின் வேகம் எப்படியிருக்கிறதென்று காலைவைத்துப் பார்த்தோம். காலைவைக்கத் தொடங்கிய இடத்திலிருந்து இரண்டடி அப்புறந்தான் வைக்கமுடிந்தது. நீரோட்டத்தை எதிர்த்துக் கால் வைக்கமுடியவில்லை. ஒரு பத்து நிமிடத்துக்கெல்லாம் எங்கட்குப் பின்னால் மாலைபோல இருபது முப்பது கார்கள் வந்துநின்றன. அதிலிருந்தவர்களும் இறங்கி வந்து வெள்ளத்தைக்கண்டு ஆனந்தவெள்ளம் பெருக்கினர். அரைமணியில் வடிந்துவிடும் எல்லோரும் போய் விடலாம் என்றார்கள். எங்களுக்கும் அது ஆறுதல். திருநெல்வேலி சிந்துபூந்துறை மடத்திற்குப் பத்தரைமணி அளவில் போய்விடலாம்; வரவேற்பளிக்க இருக்கும் நகர மக்களுடைய விருப்பத்திற்கு இடையூறு இல்லாமல் எப்படியும் சென்றுவிடலாம் என எண்ணினோம். மணி இரண்டரை ஆயிற்று. பெருக்கேயொழிய வடிவில்லை.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் விருதுநகர் முசாபரி பங்களாவுக்குபோய்த் தங்கிக் காலை எட்டுமணிக்குமேல் புறப்படுவதே நல்லது என்று ஆணை தந்தார்கள். அதற்கு மேல் அவர்களை முசாபரி பங்களாவில் எழுந்தருளச் செய்துவிட்டு ரயில்வேஸ்டேஷனுக்குச்சென்று திருநெல்வேலிக்குத் தந்திகொடுத்தோம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழக்கம்போல் விடியல் எழுந்து திருமஞ்சனம் பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு திருமுறைப் பாராயணம் செய்துகொண்டிருந்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அன்று வியாழக்கிழமை உபவாசம் மௌனதினம். விருதுநகர் பங்களா மிகச்

சிறிய கட்டிடந்தான். இரு விருந்தினர்கள்தான் தங்கி இருக்கலாம். இப்போது மேலும் நான்குபேர் தங்க பக்கத்தில் சிறிய கட்டிடங்கள் கட்டப்பெற்றுள்ளன. தண்ணீர் வசதிக்காக ஒரு குழாய்க்கிணறு உண்டு. அதில் தண்ணீரெடுத்துதான் நீராடினோம், அதைவிட்டு ஏழு மணியளவில் புறப்பட்டோம்.

கனவா ? நனவா ?

இரவு எங்கும் நீர்ப்பரப்பாக இருந்த பகுதி நிலப் பரப்பாகவே காணப்பட்டது. அதிலும் மண் பறக்கிறது. ஆறு அடி தண்ணீர் ஓடிய காஸ்வேயில் கீழண்டைப் பக்கம் தண்ணீர் வேகமாக ஓடிவிழுந்ததால் ஏற்பட்ட பெரும் பள்ளங்கள் காணப்பட்டன. அதில் ஓராள் மட்டம் தண்ணீர் தேங்கியிருந்தது. செல்வம் வருதற்கும் போதற்கும் வள்ளுவர் நாடகசாலையை ஒப்பிடுவார் 'கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அதுவிளிந்தற்று' என்று. எங்கட்குத் துலுக்கப் பட்டி ஆற்றை ஒப்பிட்டால் நலமாயிருக்குமென்று தோன்றியது. ஒருவன் வருமான காலத்திலே வரவு செலவு தெரியாமல் செலவழிக்கிறான். அவன் வாழ்ந் தவன் என்பதைப் பின்னர் தேங்கியிருந்த செல்வந்தானே தெரிவிக்கிறது என்ற எண்ணங்கள் எங்களுக்குப் படிப் படியாய் உண்டாயின. இரவு நீரோடியதும் காலை வரண் டிருப்பதும் எங்கட்குக் கனவுபோலத் தோன்றின. இரவு வந்து சிக்கிக்கொண்ட ஒரு லாரியின் இயந்திரப்பகுதியில் நீரோடினதால் அது தாமியங்கியாயில்லை. இயக்கியாகவே யிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு ஒரு

பர்லாங்தூரம் சென்றிருப்போம். அந்த வெள்ளத்தில் விழுந்து வந்த பெரியமரம் ஒன்று சாலையோரமாகக் கிடந்தது. மரம் நிலையாயிருந்தால் எவ்வளவு கம்பீரமாக இருக்கும். அது கிடந்த தோற்றம் பெருமகனொருவன் நிலைபெயர்ந்து அலைவுற்றுக் கிடக்கின்றதை எங்களுக்கு நினைவூட்டியது.

அது நிலையாக வாழ்ந்த காலத்தில் எத்தனையோ பறவைகளுக்கும் பல்லிகளுக்கும் ஒதுங்க இடம் தந்து உணவு கொடுத்திருக்கும், இன்றைக்கு நிலைபெயர்ந்தும் தன் கடமையைச் செய்யத் தவறவில்லை. வெள்ளத்தால் வருந்திய பாம்புகளும், பல்லிகளும், தேள்களும் ஆயிரக் கணக்காக அதில் ஒட்டியிருந்தன. பெருத்திளைத்தவன் இளைத்த காலத்தும் எல்லார்க்கும் உதவுவான்; தான் இறந்தாலும் பிறர்க்கு நன்மையே செய்துவிட்டுப் போவான். பிறவிக்குணம்போகாது என்ற எண்ணங்களை உண்டாக்கின. குறித்தபடி பதினொரு மணி அளவிலே சிந்துபூந்துறைமடம் சேர்ந்தோம்.

சிந்துபூந்துறை :

சைவப் பெருமக்கள் அனைவரும் மடத்தில் பெருந் திரளாகக் கூடியிருந்தார்கள். மடத்தின் முன்மண்டபம் பூக்களால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. கொலுவீற்றிருக்கக் கொலுமண்டபம் மிகச் சிரியமுறையில் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. மகாசந்நிதானம் அவர்கள் கொலுவிற்றிருந்தார்கள். இவர்களைத் தரிசிக்க திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை, ராமசாமிக் கோனர்,

சிந்துபூந்துறைமடத்தில்:

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

திருவனந்தபுரம்:

ஸ்ரீ மல்லையபஞ்செட்டியார் பங்களாவில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்.

ச. கணபதிமுதலியார், வித்வான் அருணசலக் கவுண்டர், மரகத சுப்பிரமணியப்பிள்ளை, அம்பாசமுத்திரம் சிவஞானம் பிள்ளை, பாளையங்கோட்டை சுப்பிர மணியபிள்ளை, S. S. பிள்ளை, வெங்கட்டராமையர், ஜானகிராமையர், T. K. கயிலாச சுந்தரமுதலியார் முதலியோர்கள் குழுமியிருந்தார்கள். வரவேற்பளிக்கப் பட்டது, அன்று மௌனதினமாகையால் தக்ஷிணமூர்த்தி அவசரமாகவே அருள் திருநீறு வழங்குகின்ற அளவில் மகாசந்நிதானம் ஆசியருளினார்கள்.

அன்றிரவு நெல்லையப்பர் வழிபாடு. நெல்லையப்பர் பெருஞ்செல்வர். அவரைச் 'செருந்தி பொன்சொரியும் திருநெல்வேலியுறை செல்வர்' என்று சம்பந்த சுவாமிகள் பாராட்டுகின்றார்கள்.

அத்தகைய நெல்லையப்பரை வழிபட எழுந்தருளிய போது தேவஸ்தான நிர்வாகிகள் வந்து அருளிப்பாடு பார்த்து வரவேற்றார்கள். திருக்கோபுரவாயில் மரக் கொட்டகையே ஒரு மனதைக்கவரும் பகுதி. அதைக் கடந்து உள்ளே சென்றாலோ மகாநந்தி இருக்கிறார். அவருக்கு இருபுறமுள்ள தூண்கள் அழகுப் புதையல் களாக இருக்கின்றன, ஒவ்வொன்றும் சிற்பியின் சிந்தனையையும் செய்கைத் திறத்தையும் தெரிவிக்கும் சான்றுகள். அதைத் தாண்டி இன்னும் சற்று உள்ளே சென்றதும் தூண்கள் ஸ்வரம்பாடின. வார்த்தெடுத்த தந்தியிலும் அமைக்கமுடியாத சுரபேதங்களைக் கல்லில் அமைத்த சிருஷ்ட்டிகருத்தாவின் செயல்தான் என்னே!

உள்ளே சென்றதும், மகாகணபதி மனத்தைக் கவர்கிறார். அடுத்து நெல்லையப்பர்,

நெல்லையப்பருக்கு ஆராதனைகளை முடித்துக்கொண்டு வலமாக ஆதி நெல்லையப்பரை வழிபட்டார்கள். ஆதி நெல்லையப்பர் ஆழத்தில் இருக்கிறார். வெளிவந்ததும் ஆனந்தக் கூத்தப்பிரான் வழிபாடு, கூத்தப்பிரான் ஆறு அடி உயரம். அழகான பார்வை. விரித்தசடை; குனித்த புருவம், குமிண்சிரிப்பு எல்லாம்தான். இவரையும் வழிபட்டு உள்பிராகாரத்திற்கு வந்தபோது அங்குள்ள தூண்கள்தோறும் நாயக்க மன்னர்கள் காட்சி வழங்கினார்கள். சிவப்பணி செய்ததன் வாயிலாகப் பூதவுடல் அழியினும் புகழுடலைத் தாங்கியிருக்கின்ற கல்லுருவங்கள் காட்சியளித்தன. நிருதிமூலையில் ஆறுமுக நயினார் சந்நிதி. அழகான தனி ஆலயம். பெருமானுடைய ஆறு திருமுகங்களையும் சுற்றிவந்து தரிசிக்குமுறையில் பலகணிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் வணங்கிக்கொண்டு காந்திமதியம்மன் கோயிலை யடைந்தார்கள். சத்திப்பிராதான்ய க்ஷேத்திரங்களில் இதுவும் ஒன்று. அங்கு விசேஷ வழிபாட்டுடனும்—அந்தாதி பாராயணத்துடனும் ஆராதனை நடைபெற்றது, இரவு பத்துமணிக்குத் திருமடத்திற்கு எழுந்தருளியானார்கள். அங்கே திருவாவடுதுறை ஆதீனத்து முனிபுங்கவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பாக வரவேற்றார்கள். தக்ஷிணம் காரியஸ்தர்

களும் சம்பிரதாயப்படி வந்து வரவேற்ருர்கள். முத்துக் குமாரத் தம்பிரான் சுவாமிகள் மிகச் சுருசுருப்பான வர்கள். நிர்வாகத்திறமை படைத்தவர்கள், எல்லாக் காரியங்களையும் தாமே நேரில் கவனித்துக் கொஞ்சமும் பிசகாதவாறு காத்துக் கொள்பவர்கள், அவர்களும் தக்ஷிண யாத்திரை முழுவதிலும் கூடவேயிருந்தது மிகப் பாராட்டுதற்குரியது. 28—9—51 வெள்ளிக்கிழமை காலை பாரணை யாதலின் விசேஷ மாகேஸ்வர பூஜைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பதினொரு மணிக்குச் சைவப் பிரமுகர்களோடு மாகேஸ்வரபூஜை நடை பெற்றது, சிந்துபூந்துறை மடத்துக் காரியஸ்தர்கட்கும், வித்துவான்கட்கும் புத்தாடையும் பொன்னும் வழங்கப் பெற்றன. சைவ மங்கையர்கள் பலர் கூட்டம் கூட்டமாக வந்து பாதகாணிக்கை வைத்துக் குருவழிபாடாற்றிச் சென்றனர். மாலை மூன்றுமணிக்குக் கன்னியாகுமரிக்கு எழுந்தருளினுர்கள்.

கன்னியாகுமரி:

கன்னியாகுமரி காட்சித்தலம்; கண்ணுக்குமட்டும் அல்ல; கருத்திற்கும். நாங்கள் போனது மாலை 5½-மணி. அந்நேரத்தில் சூரியாஸ்தமனம்; பார்க்கத்தகுந்தகாட்சி. எங்கள் கருத்து முழுவதும் அதிலேயே லயித்திருந்தது. ஆனாலும் மழைதூவிக்கொண்டிருந்தமையால் வானொளி தோன்றவில்லை. புறத்தே வானமண்டலத்தை மேகம் மூடியிருந்தது. புறத்தொளியைக் காணப்பெருமையால் அகத்தொளியாகிய அம்மையைக் காணவேண்டும் என்ற அவா அனைவர்க்கும் விஞ்சியிருந்தது.

மகாசந்நிதானம் தங்குதற்காகத் தாணுநாதையர் பங்களா ஏற்பாடாகியிருந்தது. அங்கே சாமான்களை இறக்கி வைத்ததும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளியானார்கள். ஸ்நானம், சந்தியாவந்தனம், பாராயணம் இவைகளை முடித்துக் கொண்டு கோயிலுக்குப் புறப்பட்டார்கள்.

தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழல் கமல மன்ன தாள்கண்டார் தாளேகண்டார் என்று நிலையில் கன்னியம்மை தரிசிப்பார் உள்ளத்தை ஆட்படுத்தி நிற்பவர், மஞ்சட்காப்பு அணிந்து நெற்றியில் கஸ்தூரி திலகம் இட்டு, மூக்கில் மூக்கணி மின்னஇருக்கும் நிலை எல்லார் கருத்துக்கும் பெரு விருந்தாகும். ஒருகையில் அட்சமாலை தொங்க ஒருகையை ஊருஹஸ்தமாகக் கொண்டு தவத்திருக்கோலத்தில் கிழக்குமுகம் நோக்கி நிற்கின்றார். திருவடியின்கீழ் அலர்ந்ததாமரை அழகு செய்கிறது. இதேகாட்சி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர் களுடைய திருவுள்ளத்தும் எம்மனோர் சிந்தையினும் இலங்குவதாயிற்று, அப்போது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவாயிலிருந்து,

" அருணும் புயத்தும் என் சித்தாம்புயத்தும்
அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல் நல்லாள்
தகைசேர் நயனக்
கருணம் புயமும் வதனம் புயமும்
கராம்புயமும்
சரணம் புயமும் அல்லால் கண்டிலேன்
ஒருதஞ்சமுமே "

என்ற பாடல் வெளிவந்தது. அம்மை புறக்கோலத்தில் அளிக்கும் காட்சியை அகக்கோலத்திலும் கொண்டு அமர்ந்திருக்கும் தன்மை அறிவுக்குத் தெளிவளிப்பது. இத்தகைய அம்மை எழுந்தருளியிருக்குமிடம் குமரிமுனை யாகும். இதுவே தென்னிந்தியாவின் தென்கோடி. குமரக்கடவுள் இத்தலப்பெருமையை எண்ணி இலிங்கப் பிரதிட்டைசெய்து அருச்சித்தார். அப்பெருமானுக்குக் குகனுண்டேசுவரர் என்பது திருநாமம். இந்திரன் அகலிகையை வஞ்சித்த காரணத்தால் கௌதமரால் பெற்ற சாபத்தை இத்தலத்தில் வழிபட்டுப் போக்கிக் கொண்டான். அகத்தியர் குமரிக்கோயிலுக்கு மேல் புறத்திலே கூப்பிடுதூரத்தில் ஒரு சிவலிங்கப் பிரதிட்டை செய்தார் என்றும், அவர் அகத்தீசுவரர் என அழைக்கப் பெறுவர் என்றும் கூறப்பெறுகின்றது. கன்னியாகுமரி யம்மை சுசீந்திரத்திலுள்ள தாணுமாலயனை மணக்கத் தவஞ்செய்கின்றாளென்பது கர்ணபரம்பரை வரலாறு.

இங்கே மூன்றுகடல்களும் ஒன்று கூடுகின்றன. மேல்கடலில் அலை வெகுவேகமாக ஒருபனை உயரம் எழும்பிவிழும். கீழ்கடலில் மிக அமைதியாக இருக்கும். குமரிமுனையாக இருப்பதால் தென்கடல் இருகடலிலும் கலந்துவிடுகிறது. சந்திப்பில் பெரிய இரண்டுபாறைகள் இரண்டு கடல்களின் மோதுதலையும் தடுத்து நிற்கிறது. இந்தநிலையில் வெண்டலைப் புணரியாகிய கீழ்கடலும் நீல நிறக்கடலாகிய மேல்கடலும் முறையே பிரம விட்டுணுக் களை ஒத்து இருந்தன. அவர்கள் இருவரும் நாம் பெரியர் நாம்பெரியர் என மோதிக்கொள்கின்றகாலத்து

அண்ணுமலையாய் ஆண்டவன் எழுந்தருளிய காட்சியைப் பார்க்கின்றவர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டாக்கும். மெலியோர்கள் ஒருங்கு திரண்டு வந்து மோதினுலும் வலிமையுடையார்கள்முன் சிதைந்து பிதிர்ந்துபோவார்கள் என்பதை, மலைபோலக் கிளம்பிப் பாறையை மோதிநிற்கும் அலைகள் நமக்கறிவிக்கும். இப்படி இரு கடல்களும் மோதிக்கொள்வதால் உண்டான நுரையைக் காற்றுப் பிரித்து வானத்தில் பறக்கவிடும். அந்நுரைகள் கூட்டங்கூட்டமாகப் பிரிந்து கரையிற்சென்று படிவது, கடலில் மேய்ந்து கரையை வந்தடையும் நாரைக் கூட்டத்தை ஒத்திருக்கும். ஸ்நாநகட்டமாகிய குமரி முனைக்கு மேல்பக்கத்தில் கடற்சிற்பி, மணலைப் புளியங் கொட்டை பருமன் முதல் கடுகுவரை தனித்தனியே கொழித்துப் பிரித்திருக்கின்ருன். ஒருசார் சிறுமணல் மெருகிட்டுத் தீட்டப்பட்ட பச்சைச்சிறுமணி அரிசியைப் போல் இருக்கும். ஒருசார் சிறுமணல் செக்கச் செவேல் என்று விரிந்துகிடக்கும். அது மிளகாய்த்தூள்போல் இருக்கும். இந்த இயற்கைக் காட்சியைக் கொண்டு தாணுமாலயப்பெருமான் குமரியை மணந்துகொள்ளப் பூதகணங்கள் புடைசூழ எழுந்தருளினுர் என்றும், இடையே சுசீந்திரத்திலேயே தங்கிவிட்டமையால் மலை போலச் சேகரித்துவைத்திருந்த அரிசி, மிளகாய், கடுகு இவைகளைக் கடலில்கொட்டினுர் என்றும், அவையே அங்ஙனம் குவிக்கப்பெற்றிருப்பதாயும் கடற்செல்வர்களாகிய பரதவர்கள் கூறுகிருர்கள். அந்தச்சூழலிலுள்ள இயற்கைத் தோற்றம் அவர்களையும் கவிஞர்களாக்கிக் கற்பனுசக்தியை வழங்கியிருக்கிறது.

அந்த மணற்குவியலைத் தாண்டிச் சற்று மேற்கே சென்ருல் கடலுழத்தி கொழித்தெடுத்த சிப்பிவகைகள் நம்மை மயக்கி நிற்கும். இறைவன் சிருஷ்டியிலுள்ள அற்புதங்களை அறிவித்து நிற்கும். எத்தனை நிறங்கள்? எத்தனை உருவ வேறுபாடுகள்? எத்தனை தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளும் சக்திகள்? இவற்றை எல்லாம் படைத்ததோடன்றி அதனைக் கண்டு கண்டு ரஸிக்க நமக்கு அறிவையும் தந்து தம்முடைய அளவிலாற்றலை விளக்கிநிற்கும் ஆண்டவனை எவ்வாறு புகழ்வது? அதற்கும் சற்று மேற்கே போனல் ஒன் றரைப் பனையுயரம் மணல் மேடு குவிந்துகிடக்கிறது. அதனைக் குவித்தவன் கடற்பரப்பில் நீர்மேல் நடந்து வரும் காற்றுத்தேவன்; அவனும் சிலமாதங்களிலே — சில நாட்களிலே அவ்வளவையும் பெயர்த்து வேருருபக்கத் தில் அமைத்துவிடுவானும். இந்தச் சூழ்நிலையில் நீரோர மாகச் சென்ருலோ — பாறையோரமாகச் சென்ருலோ பலஆண்டுகளாக வளர்ந்து கிடக்கும்பாசிக்கொழுந்துகள் அதனை இடமாகக் கொண்டு வளர்ந்து கிடக்கும் சில செடி வகைகள் எல்லாம் கடலின் ஆழத்தை நாம் காணுதவாறு நம்மைத் தடுத்து நிற்கும் பெருந்தடை களாக இருக்கின்றன. சில செல்வர்கள் வீட்டுமுன்னிலை யில் பஞ்சப் பாட்டு பாடிக்கொண்டு ஏற்கவருவாரை வெருட்டிநிற்கும் வஞ்சகர்கள் போல்வன அவைகள்.

இரவு மணி ஏழு ஆனதும் கடல்நீர்த் திவலைகள் மேலெழும்பும்போது ஒவ்வொரு திவலைகளிலும் வான மண்டலத்திலுள்ள விண்மீனெளி அதில் பிரதிபலிக்கும்.

இந்தக் காட்சியை நாங்கள் நெடுநேரம் சுவைத்துப் பார்த்துக்கொண்டிருந்தோம். நீர்த்திவலைகள் பூமியை விட்டுச் சற்றுதூரம் கிளம்பிய உடனே இருள் நிறம் மாறி ஒளிநிறம் பெறுகின்றன. மனிதன் மலமாயா பந்தங்களோடுகூட பூமியில் இணைந்துநிற்கும்பொழுது இருள் வடிவினனாகின்றான். அவனை மூலமலம் தன்னகப் படுத்தித் தன்னையும் காட்டாமல் தலைவனையும் காட்டாமல் மறைத்துவிடுகின்றது. அவன் இக் கட்டை நீங்கி இறைவனை அடைகின்றபொழுது ஒளிவடிவினனாகின்றான். இந்த எண்ணத்தை இயற்கை உண்டாக்குகிறது என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களோடு உரையாடி அனுபவித்துக் கொண்டிருந்தோம். இக் காட்சியில் ஈடுபட்ட பிறகுதான் திருக்கோயிலுக்குச் சென்றது. அங்ஙனம் சென்றது எங்கள் விருப்பாலல்ல; 'முன்னின்று அவள் சுரக்கும் இன்னருளே போன்று' மழை பொழிந்தது. 'காலத்தைப் போக்காமே ஞாலந் தந்த கன்னியின் நற்றாள்போற்ற விரைந்து வருக' என்ற ஆணையாக எங்கட்குப் பட்டது. விரைந்து போனோம், விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அந்தாதி பாராயணமும் ஜபமும் நிகழ்ந்தன. போற்றிகள் இறைவியின் பிரசாதங்களை வழங்கினார்கள்.

மலையாளத்து ஆசாரமே தனி. நக்கீரரே அந்நாளில் கண்டு 'புலராக்காழகம் புலரஉடீஇ' என்று போற்றினர். அந்த நிலையில் இன்றும் ஒரே ஈரவேஷ்டியை உடுத்திக் கொண்டிருப்பார்கள். போற்றி ஈரம்புலர்ந்து அர்த்த மண்டபம் தாண்டி வெளியேவந்துவிட்டால் ஆசாரக்

குறைவு. மறுபடியும் நீராடி ஈரத்தோடுதான் உள்ளே போகவேண்டும். அதற்காக அவர்கள் பிரசாதங்களைக் கையில் கொடுப்பது வழக்கமில்லை. வாழையிலையில் வைத்து வாயிற்படிக்கு அப்பால் இருந்து வீசுவார்கள். யாத்ரீகர்கள் கையேற்பார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அப்படி இல்லை. வெளியில் வந்து வெகு மரியாதையுடன் பிரசாதங்களை வழங்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் அவர்களுக்குப் புதிய ஆடைகளும் பொன்னும் தானமாக வழங்கினார்கள். இவ்வாறு தரிசனம் இரவு பத்துமணிக்கு முடிந்தது.

குமரிக் கருமணல் தென்னாட்டுச் செல்வங்களுள் ஒன்று. இதைப்பற்றிய நீண்டதோர் கட்டுரை செந்தமிழ் 2, 3-ம் தொகுதிகளில் வந்திருக்கிறது. இந்த மணல் கண்ணாடித் தொழிற்கு மிக உகந்தது. இதனைக் கொண்டு தென்னாட்டுப் பொருளாதாரத்தைச் சரிபாதி உயர்த்தலாம் என்பது அக்கட்டுரையின் முடிபு. இந்த மணல் காய்ந்தபோது தவிடுபோலக் காற்றில் பறக்கும். தண்ணீரில் நனைந்தால் இறுகிவிடும். கால் சுளுக்குமுதலிய நோய்கள் கண்டவர்கள் மணலில் காலைப்புதைத்து நீரை ஊற்றுவார்கள். உடனே நோய் நீங்கிவிடுமாம்.

மறுநாள் சனிக்கிழமை. காலை 5-மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தீர்த்த ஸ்நானத்திற்கு எழுந்தருளினார்கள். நீராடுமிடத்தில் இடுப்பளவு தண்ணீர்தான் இருந்தது. அதற்கு எதிர்க்கரையிலுள்ள குமரிக் கோட்டில் ஏறினோம். குமரிக்கோட்டில் நிற்கும்போதே

ஒரு தனிமகிழ்ச்சி. சூரியோதயத்திற்கு இன்னும் அரை நாழிகை நேரம் இருக்கும், ஒன்றிரண்டு சூரிய கிரணங்கள் நீலத்திரையைக் கிழித்துக்கொண்டு வெளி வந்தன. அந்தக் காட்சி அனைவர் மனத்தையும் கவர்ந்தது. இருளில் மூழ்கியிருந்த உலகத்தை மிகமெது வாக அம்மை அருட்கரங்கொண்டு துயிலெழுப்புவது போல இருந்தது. சூரியோதயக் காட்சியைக் காண வேண்டுமென்ற விருப்பால் ஸந்தியாவந்தனங்களை முடித் துக்கொண்டு கோயிலை வலம் வந்து கிழச்சந்நிதியை அடைந்தோம். பழுக்கக்காய்ச்சிய தங்கஉருண்டையைப் போல ஒளிவிட்டுக்கொண்டு சூரியன் தோன்றினன். காலமாகிற பொற்கொல்லன் கடலாகிய கரிக்குவியலில் வைத்துருக்கிய பொன்னுருண்டையைக் குளிரவைப்பது போல அலைகள் மேலும் மேலும் எழுந்து மோதின. ஒவ்வொரு அலைகளிலும், திவலைகளிலும் சூரியனுடைய பிரதி பிம்பங்கள் தோன்றலாயின. எல்லாவுயிர்க ளிடத்திலும் அவரவர்களுடைய பரிபக்குவங்களுக்கு ஏற்ப இறைவன் தோன்றுவதுபோலக் காட்சியளித்தது. அதுமட்டுமா? அலையும் திவலையும் அலைந்தாலும், கலங்கினாலும், அழிந்தாலும், சூரிய பிம்பம் மாற்ற மில்லாமல் இருந்தது. இந்தநிலையும் ஆண்டவன் எல்லா உயிர்களிடத்திலும் ஒன்றாயும் உடனாயும் வியாபித் திருந்தாலும் தத்தங் கன்மத்துக்கு ஈடாக உயிர்கள் அடையும் துன்ப இன்பங்களால் இறைவன் விகாரி யாகான் என்பதையும் அனுபவிக்கச் செய்தது.

இந்த அநுபவத்திலிருக்கும்போது நிழற்படம் எடுப் பவர் யாத்திரை கோஷ்டியினரைப் படம் எடுக்க

கன்னியாகுமரிமுனையில்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், யாத்திரா கோஷ்டியினரும்

குமரிக்கோயில் முகப்பு மண்டபத்தில் :



ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் – யாத்திராகோஷ்டியினரும்.

விரும்பினுர். யாத்திரை கோஷ்டியில் தருமையிலிருந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களோடுபோன திருச்சி மௌனமடம் கட்டளைவிசாரணை, வித்துவான், ஸ்ரீமத் மௌன இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், ஷராப் M. சுப்பையா முதலியார், A. கல்யாணசுந்தர தேசிகர், அடியேன் உள்ளிட்ட அனைவரும் இருந்தோம். அவர்களில் கயத்தாறு அப்துல்காதர் அவர்கள் பரம்பரையாகவே தமிழ்வளர்க்கும் குடும்பத்தைச் சார்ந்தவர். கயத்தாறு என்றுலே தமிழ்மக்களுக்கு வீர உணர்ச்சி பிறக்கும். கயத்தாற்றில்தான் சுதந்திர வீரனுகிய கட்டபொம்ம னுடைய மரணம் நேர்ந்தது. அங்கேயுள்ளவர்கள் அனைவருமே தமிழுணர்ச்சியும் வீர உணர்ச்சியும் உடையவர்கள். அதிலும் இவர் இஸ்லாமியராக இருந்தும் தமிழிலும் சைவத்திலும் அபிமானமுடையவர். இவர் தம்பியும் அப்படியே.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருநெல்வேலிக்கு வந்ததுமே வரவேற்பில் அவருடைய பரபரப்பான பங்குகள் மிகவும் மெச்சத்தகுந்தன. அவருடைய உடை நடைகள் மட்டுமன்றி பழகுகின்ற அருமையும் அவரை நம்மவராகவே எண்ணச்செய்தது. இவர் தன்னுடைய இருகார்கள் சகிதம் யாத்திரையில் கூடவேயிருந்தார். இவரேயன்றி கன்னியாகுமரி சுசீந்திரம் இவ்விடங்களில் உடனிருந்து உபசரித்தவர் நாகர்கோயில் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்கள். இவர் அருமையான மனிதர். பயபக்தியோடும் சிரத்தையோடும் நாகர்கோயில், சுசீந்திரம், கன்யாகுமரி முதலிய இடங்களில் நடந்த வரவேற்புகளைக்

கண்காணித்தவர். இவர்கள் அனைவரையும் நிறுத்தி நடு நாயகமாக ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானமவர்கள் இருக்கப் படம் எடுக்கப்பெற்றது. அவ்வாறே கோயில்காட்சி; குமரி முனைக் காட்சி; மண்டபக் காட்சி எல்லாம் இவை களோடு ஆதீனக் கார்களையும் குமரிமுனையில் நிறுத்திப் படம் எடுக்கப்பெற்றது.

பின்னர் கோயில் வழிபாட்டிற்குச் சென்றோம். சூரியோதயநேரம். சூரிய ஒளி கதவு இடுக்குகளின் வழியாக உள்ளே பரவியது. ஓரே செம்மை நிறம். இவ் ஒளி வெளியிலிருந்துவரும் சூரிய ஒளியா? அம்மையிட மிருந்துவரும் அருட்கதிர் ஒளியா? என்பது அறியக் கூடாமலிருந்தது. இதனைக்கண்ட ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதான மவர்கள் வெகுநேரம் அம்மையின் திருமுகச்செவ்வியை யும் செங்கதிரையும் மாறிமாறி நோக்கிவிட்டு நமது அபிராமிபட்டர், இதைத்தானையா அநுபவித்துச் சொல் கிறார்; அந்தப்பாடலைச் சொல்லலாமே என்றார்கள்.

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

இதைச் சொன்னேன். என்ன அநுபவம், இப்படியெல் லாம் அநுபவிப்பவர்களுக்கல்லவா அம்மையின் அருள் கிட்டும். பார்க்கும் திசையெல்லாம் – நோக்கும் பொரு ளெல்லாம் அதுவாகக் காண்பதல்லவா முறுகிய அன்பு என்று உரையாடிக்கொண்டே வழிபாடு முடித்து

குமரிமுனையில் :

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்.

குமரிமண்டபத்தில்



ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

வெளிப்போந்தோம். காலை மணி எட்டாயிற்று. காலை உணவுகளை முடித்துக்கொண்டு ஒன்பதரைமணியளவில் புறப்பட்டோம். சுசீந்திரம் சென்றோம்.

சுசீந்திரம் :

சிற்பத்திற்கும் தெய்வீகத்திற்கும் ஓர் உறைவிடம் சுசீந்திரம் கோயில். சிற்பங்களை அநுபவித்துப் பார்ப்பதற்கு ஒருமாதகாலமாவதுவேண்டும். இது மும்மூர்த்தி ஸ்தலம். சிவன், விஷ்ணு, பிரமன் மூவருக்கும் கோயில் உண்டு. பெருமான் திருநாமம் தாணுமாலயன் என்பது. சிவலிங்கத் திருமேனிமீது சந்திரப்பிரபைபோலக் கிரீடங்கள் அமைந்திருக்கும். இந்த அமைப்பு மலையாள நாட்டுத் தலங்களில்தவிர வேறெங்கும் காணமுடியாது. அன்று விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம்அவர்கள் சகஸ்ரநாம அர்ச்சனை வழிபாட்டை முடித்துக்கொண்டு திருவனந்தபுரத்திற்கு எழுந்தருள வழிக்கொண்டார்கள்.

திருக்கோயிலின் வாயிலுக்கு வந்ததும் வந்திருந்த ஏழைகளுக்கு அன்னம்வழங்கப்பெற்றது. பெற்றமக்கள் முகத்தில் காலையில் அன்னம் கிடைத்த களிப்பைப் பார்க்கவேண்டுமே. இந்நிலையில் இருந்துதான் வள்ளுவர் அநுபவித்திருப்பார்போலும். அவர்,

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

என்று சொன்னார். அந்த மகிழ்ச்சி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்கும். கருணைமழை பொழிந்தது. தேவஸ்தானம் ஆபீஸைத் திருக்கண்சாத்தியருளினார்கள். அங்கே திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் கே. ஆறுமுக நாவலர் அவர்களும் அஷ்டாவதானம் ஆறுமுகம் பிள்ளை அவர்களும். மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சுசீந்திரம் மடபதி ஸ்ரீ நெல்லையப்பத் தம்பிரான் சுவாமிகள் திருமடத்திற்கு எழுந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவ்வாறே பார்வையிட்டதும் நெய்யாற்றங்கரையோடு நாகர்கோயில் முதலியவற்றைத் தாண்டிப் பகல் ஒன்றரைமணியளவில் திருவனந்தபுரம் வந்துசேர்ந்தோம்.

திருவனந்தபுரம் :

திருவனந்தபுரம் மலைநாட்டு வைணவ க்ஷேத்திரங்களுள் முதன்மையானது. திருவாங்கூர் நாட்டிற்கு இதுதான் தலைநகர். அழகானவூர். விசாலமான வீதிகள். சட்டக் கல்லூரி, தொழிற்கல்லூரி, பொறியியற்கல்லூரி, வாட்டர்ஹௌஸ், காட்சிச்சாலைகள் எல்லாம் அமைந்த ஒரு சிறந்தநகரம். கடற்கரை இயற்கை யழகுவாய்ந்தது. இங்கேயுள்ள மக்கள் சுத்தமாகவும் அழகாகவும் நாகரிகமாகவும் இருப்பார்கள். சுருங்கச்சொன்னால் அழகுக்கும் அறிவிற்கும் பேர்போன இடம் இது என்று சொல்லலாம்.

இங்கே கிராமங்கள்தோறும் பள்ளிகள் உண்டு. ஒருமுறை ஸர். ஸி. பி. ராமசாமிஐயர் அவர்கள் பேசிய போது சென்னை ராஜ்யத்திலுள்ள உயர்தரக் கலாசாலையைப்போல இரண்டு மடங்கு திருவனந்தபுரத்தில் அதிகம் என்று சொன்னார். அது உண்மைதான். 6 ஆண்டுக்குமேல் 20 ஆண்டுக்குட்பட்ட ஆண் பெண் அனைவரும் காலை 10 மணியளவில் புத்தகச் சுமைகளைத் தூக்கிக்கொண்டு பள்ளிக்குப்போவது அழகாயிருக்கும். இத்தகைய இராஜதானித் தலைநகரத்தில் விளங்கும் மல்லையஞ்செட்டியார் என்ற பெருந்தனவணிகர் பங்களாவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் தங்க ஏற்பாடாகி இருந்தது.

மல்லையஞ் செட்டியார் பொள்ளாச்சியைச் சேர்ந்தவர். கன்னடிய மரபினர். ஜவுளி, பர்மாஷெல் ஏஜன்ஸி முதலிய பெரிய வாணிகத்துறையில் பெரும்பொருள் ஈட்டியவர். பொருளுக்கேற்ப அடக்கமும் பண்பாடும் மிக்கவர், நிறைகுடம் நீர்தளும்பாது என்பதை அவர்முகத்திலும் செயலிலும் காணலாம். பரபரப்பில்லாத பண்பாடுடையவர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பங்களாவுக்கு வந்ததும் மாலைசூட்டி வரவேற்பளித்தார். மாகேஸ்வரபூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வித்திருந்தார். மகாசந்நிதானம் அவர்களுக்குமட்டும் பரிகலஏற்பாடுகள் வந்தபின் செய்யப்பெற்றன. நைவேத்தியம் ஆனபிறகு 3 மணிவரையில் ஓய்வு. பின்னர் உயிர்க்காட்சி சாலைக்குப் போனோம். இந்தியாவிலேயுள்ள உயிர்க்காட்சி சாலையுள் முதன்மையானது அது. அங்கேயுள்ள இயற்கையமைப்புக்களையும்,

விலங்குபறவை முதலியவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டால் தனிநூலாகும். புலி சிங்கங்கள் வசிப்பதற்குத் தாழ்ந்த பள்ளத்தாக்குகளில் காடுகளை வளர்த்துக் கம்பி வேலியிட்டுள்ளார்கள். குகைகளைப்போலக் கல்லிலும் சிமெண்டிலும் தோண்டியிருப்பது அவற்றின் இயற்கை வாழ்க்கைக்கு ஏற்ற இடமாக இருக்கிறது. காண்டாமிருகம், நீர்யானை முதலியனவும் இயற்கை வாழ்வோடு வாழ்கின்றன. இவையெல்லாம் காணத் தக்க காட்சிகள். வெள்ளைமயில் முதலாகப் பல்வேறு அற்புதப் பறவைகள் இருக்கின்றன. இவைகளைச் சாவதானமாகப் பார்ப்பதென்றால் மூன்றுநாளாவது பிடிக்கும். ஞாபகப்படுத்தப் பலமாதங்களாகும். இவற்றையெல்லாம் இரண்டுமணி நேரத்தில் பார்த்துவிட்டுச் சித்திரசாலை சென்றோம்.

சித்திரசாலை என்பது பலநூற்றாண்டுகளின் ஓவியங்கள் சேர்த்து வைக்கப்பெற்றுள்ள இடம். ஓவியம் என்பது எழுதப்பெற்ற காலத்தின் ஆடை அணி பழக்கங்கள் முதலியவற்றை அறிந்துகொள்ள ஏதுவாயிருப்பது. அதில் சில பழங்காலப் போர் வரலாறுகளும் சித்திரிக்கப்பெற்றுள்ளன. ஓவியங்களைப் பார்க்கின்றபோது விஞ்ஞானமுறையில் பயிற்சியில்லாத அந்தக் காலத்தில் எப்படி இத்தகைய நீடித்து நிறம் மங்காத வர்ணங்களைக் கலந்துவைத்தனர் என்பதும், அவை எழுதப்பெற்ற காலத்து முகபாவங்களையே எங்ஙனம் (இப்பொழுதும்) காட்டி நிற்கின்றன என்பதும் எண்ணி எண்ணி இன்புறத்தக்கன. சித்திரசாலை இருக்கின்ற

சூழலும் ஒரு சித்திரமாகவே இருக்கின்றது. அதன் வாயிலில் பலவேறு வகையான மரங்கள் வைத்துக் கத்தரித்துச் சித்திரிக்கப்பெற்றுள்ளன. அவற்றுள்ஒன்று அசோகமரம். அசோகமரம் என்பது நெட்டிலங்கை என்பார் சிலர். அது தனித்ததொரு மரம் என்பதும், செந்நிறமான பூவையுடையது என்பதும் தெரிந்து கொண்டேன். இலக்கிய உலகில் மகளிரால் மலரக்கூடிய பத்துவகையான மரங்களில் உதைக்க மலரும் மரம் அசோகு என்று பல இடங்களில் கூறப்படுகிறது. இங்ஙனம் புலக்காட்சியாக இருந்த பொருள் பொறிக் காட்சியாயும் ஆயிற்று.

அதனைப் பார்த்துவிட்டுப் புதைபொருள் காட்சிச் சாலையை அடைந்தோம். அங்கே மலைவாழ் மக்களாகிய குறவர், தோதவர், பளியர் இவர்களுடைய வாழ்க்கைச் சிற்பங்கள் கண்ணாடி அலமாரிகளில் வைக்கப்பெற்றுள்ளன. கதகளிபோன்ற நாடகப் பொம்மைகளும் அங்ஙனமே. இவற்றால் பலவேறு சாதி மக்களின் நாகரிகம், கூத்துவிகற்பம் முதலியனவற்றை அறிந்து கொள்ளலாம்.

இவற்றைப்பார்த்துக்கொண்டு உள்ளே நுழைந்தால் பல காட்டுமரங்களுடைய மாதிரித் துண்டுகளையும் கடல் வாழ் விலங்கு நீர்வாழ் விலங்கு இவற்றின் எலும்புகளையும் காணலாம். இவற்றையெல்லாம் பார்த்தபோது பிராணிவர்க்கங்களின் உடலமைப்பு, பண்டைநாளி லிருந்து சிறியதாகிக்கொண்டே வருகின்றன என்பதைத் துணியலாம். இங்கிருந்து திருவனந்தபுரம் கடற்கரைக்குச்

சென்றோம். இது தென்னிந்தியாவின் மேல்கடல். கடல் இயற்கை வளத்தோடு மிகப் பெரியதாக அமைந்திருக் கின்றது. இங்கே யாதொருவிதமான பயமுமில்லாமல் நெடுநேரம் இருந்து யாரும் உப்பங்காற்று அருந்தலாம். அங்கே (அக்வேரியம்) மீன்காட்சிச்சாலே இருக்கின்றது. அதில் எத்தனைவகையான வர்ணஜாலங்களோடுளத்தனை வகையான உடலமைப்போடு மீன்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லமுடியாது. அவைகள் தாம் வாழுங் கண்ணுடிப் பெட்டிக்குள்ளேயே உல்லாசமாக உலாவிக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்ததும் ஆழமாகிய பரந்துபட்டகடலிலே தம் இஷ்டம்போல் கிடைத்த வற்றைத் தின்று உலாவித் திரிந்த அவைகள் இந்தக் கண்ணுடிக் குழாயிலும் களிப்புக் குறையாமல் சுற்று கின்றனவே என்று எண்ணநேர்ந்தது. அடுத்தகணம் இது நமக்கு ஒரு படிப்பினையாகுமென்று தோன்றியது. உண்டானபோது கோடானகோடியாக வாழ்ந்தவர்கள் சுருங்கியகாலத்தும் உள்ளதைக்கொண்டு திருப்தியாக வாழவேண்டும் என்பதே அவை நமக்குக் கற்பிக்கும் பாடம். இப்படிச் சிந்தனைக் கருவூலங்களோடு மாலே ஆறுமணியளவில் மல்லேயஞ்செட்டியாரவர்கள் பங்களா விற்கு வந்துசேர்ந்தோம்.

முன்ஏற்பாட்டின்படி ஏழரைமணியளவில் பத்மநாப சுவாமி கோயிலுக்குச்சென்றோம் அந்த பத்மநாபர் தமது வலதுகையில் ஒரு வில்வதளத்தையேந்தி சிவலிங்கப் பெருமான்மீது அர்ச்சித்துக்கொண்டே ஒருக்கணித்துக் கிடந்த திருக்கோலத்தில் எழுந்தருளி இருக்கின்றார்.

அவருடைய நாபிக்கமலத்தில் பிர்மாயிருக்கின்றூர். சீதேவி பூதேவி இருவரும் திருவடியைவருட அரவணை மேல் தெற்குப்புறமாக சிரசைவைத்து திருமுகமண்டலம் கிழக்குநோக்க யோகநித்திரை செய்கிறூர். இந்தமூர்த்தி இந்திரன் சந்திரன் அகத்தியர் முதலியோருக்கு சேவை சாதித்தருளியவர்கள். நம்மாழ்வார் பெரியாழ்வார் முதலியோருடைய மங்களாசாசனங்கள் உள்ளன. இந்தத் திருக்கோயிலில் ஆறுண்டுக்கொருமுறை லட்சதீப அலங்காரம் நடைபெறுமாம். அப்போது கார்த்தவீரியார்ச்சுனனுல் அனுஷ்டிக்கப்பட்ட முரஜபம் ஐம்பத்தாறு நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இரவு எட்டுமணிக்கு எல்லாம். திருக்காப்பு இடப்படுமாதலின் விரைந்து வழிபாடு முடித்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பங்களாவிற்கு எழுந்தருளினுர்கள். பின்னர் இரவு உணவும் ஓய்வும்.

திருநெல்வேலியில் :

விடியற்காலை நான்குமணிக்கெல்லாம் திருமஞ்சனம் முடித்துக்கொண்டு நெல்லைக்குப் பிரயாணமானுர்கள். மறுநாட்காலை பத்துமணிக்கு சிந்துபூந்துறை வந்துசேர்ந்தார்கள். ஓய்வுக்குப்பிறகு உத்யோகஸ்தர்களும் பிரமுகர்களும் வந்து தரிசித்துச்சென்றூர்கள். அப்போது இந்து காலேஜ் கமிட்டியின் சார்பாக நிர்வாகப் பொறுப்பாளர், திரு. இராமசாமிக் கோனுர் *B. A., B. L.,* அவர்கள் உள்ளிட்ட குழுவினர் இந்துக்கல்லூரியைப் பார்வையிட எழுந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். மூன்றுமணிக்கெல்லாம் வருவதாக ஆணைதந்தவண்ணம்

எழுந்தருளினார்கள். காலேஜ் கமிட்டியின் சார்பாக வரவேற்பளிக்கப்பட்டது. அதற்கு ஆசியுரை வழங்கு முறையால் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்,

"பேரன்பர்களே! தமிழ்கொழிக்கும் தண்பொருநைக் கரையிலே உள்ள இந்நெல்லையம்பதிக்கு—சைவாபிமானச் சீலர்கள் நிறைந்த இந்நெல்லையம்பதிக்கு, எங்களைப் போன்றவர்களை வரவேற்பது இயற்கைதான். நாட்டில் கல்விநிலையங்களே கண்ணைத்திறப்பன. ஒளிபெற்றகண் இருந்தாலும் அறியும்வகை அறிவிக்கும் மனம் முதலிய அகக்கரணங்கள் இல்லையானால்பயனில்லை. கண்ணுக்குக் கண்ணாய் அகக்கண்ணாய் இருந்து அதனை விளக்குவது இந்தநிலையங்கள். இவற்றை வளர்ப்பது எல்லாருக்கும் இன்றியமையாததுதான். வரவேற்புப் பத்திரத்தில் கூறியவை எமக்குப் பெருமகிழ்ச்சியளித்தன. மடாதிபதியாகிய எங்களுக்கும் சில சட்டதிட்டங்களுண்டு. நானும் ஒரு கணக்கன்தான். கணக்கறிந்து வழங்கினால்தான் பிணக்கில்லாது வாழமுடியும். மடத்தின் நிலப்பரப்பு கல்லூரிக்கு நன்கு பயன்படுகிறது என்று வரவேற்புப் பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் கல்லூரி வளர்வதற்கு எல்லோரும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கே நமதன்பர் ஆவுடையப்பப் பிள்ளை அவர்கள் இருக்கிறார்கள். வக்கீல் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இருக்கிறார்கள். அம்பாசமுத்திரம் சிவஞானம் பிள்ளை அவர்கள் இருக்கிறார்கள். இன்னும் பல பிரமுகர்கள் இருக்கின்றார்கள். ஆளுக்குக்கொஞ்சமாக எல்லாரும் பொறுப்பெடுத்துக்கொண்டால் எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றலாம். திருமடம் ஹிமசேதுபர்யந்தம் பல பணிகளை ஆற்றவேண்டியிருக்கிறது. உங்களைப்போன்ற

பெருமக்களுக்குப் பொருளே பொருளை ஆக்குகிறது. திருமடங்கட்கு உழவன் உழைப்பும் பூமிதேவியின் கருணையும் சொக்கலிங்கப்பெருமான் திருவருளும் ஒன்று கூடி உதவுகின்றன. நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டால் முடியாத காரியம் உண்டா? ஆதலால் நீங்கள் இந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்கேற்ற உதவிகளைப்புரிந்து ஆவன செய்வீர்களாக; உங்களுக்கு நல்லன எல்லாம் நல்கும்வண்ணம் சொக்கலிங்கப்பெருமான் திருவருளைப் போற்றுகிறோம்"

என்று ஆசிவழங்கினார்கள். செவிமடுத்த பிரமுகர்கள் அனைவரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமாக இருப்பவர்கள் இப்படி ஆசி அருளுவதுதான் சமயவளர்ச்சிக்கு ஏற்ற வழி என்று பாராட்டினார்கள்.

மாலை ஆறுமணிக்குத் தருமபுர மடத்தில் தருமையருள்பெறு நெல்லை அருணகிரி இசைக் கழகத்தின் சார்பாக ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அங்கு பெருந்திரளான கூட்டம். மேடை அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. அதில் வித்வான், வே. மாணிக்கவாசகம் பிள்ளை, வித்வான், சேதுரகுநாதன், அருளப்பன் M.A., கணபதி முதலியார் M.A., முதலிய பேரறிஞர்கள் பலர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றினார்கள்.

இளங்கோவடிகள் துறவு பற்றிய நாடகம் அழகாக நடித்துக்காட்டப்பட்டது. முக்கூடற்பள்ளு நிழற்படமாக நடிக்கப்பெற்றது. எல்லாவகையிலும் அருணகிரி இசைக் கழகம் நிகழ்ச்சிகளை அளந்து அமைப்பதில் நல்ல

பயிற்சியுற்றிருக்கிறது. கழக அமைப்பாளர்களனைவரும் உறுதியும் ஊக்கமும் பெற்றவர்கள். கழகத் தலைவர் S. சுடலைமுத்துப்பிள்ளை அவர்களும், அமைச்சர் இராம கனகசபாபதிப்பிள்ளை அவர்களும் மிகப் பொருத்தமான வர்கள். அவர்களிடம் கழகத்தை நடத்திக்கொண்டு போவதற்குரிய பொறுமை முழுதும் பொருந்தியிருக் கிறது. ஆதலால் கழகம் நற்பணிசெய்யத் தடை என்ன இருக்கிறது. ஆதலால் குறித்தகாலத்தில் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவேறின. இவற்றையெல்லாம் கண்டுகளித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசிவழங்கும் முறையால்,

சைவப் பேரன்பர்களே ! இன்று நல்லநாள், புனித மான நாள். இத்தனை மெய்யன்பர்களுடைய அன்பு வெள்ளத்திலே நாம் திளைக்கும் புனிதநாள். நம்முடைய அன்பெல்லாம் சிவனிடத்தது. சிவசம்பந்தமுடையது சைவம். சைவமே எல்லாச் சமயத்தினையும் தன்னகத் தடக்கி நிற்பது, அதனாலேயே சைவசமயமே மெய்ச் சமயம் என்று பெரியோர்கள் கூறினார்கள். உலகத்திலே எத்தனையோ சமயங்கள் உள்ளன, அந்தந்த சமய சாத் திரங்களும் அவைகள் கூறும் பொருள்களும் ஒன்றோ டொன்று ஒவ்வாதனவாயிருக்கும். இவற்றுள் உண்மை யான சமயம் எது என்று கண்டுபிடிக்க வேண்டிய முயற்சி மிக எளிதன்று. அது பூர்வபுண்ணியவசத்தால் விளையத்தக்கது என்றுகூடச் சொல்லிவிடலாம். பல வேறு சமயங்கள் சொல்லும் பொருளெல்லாவற்றையும் இது ஆகும் இது ஆகாது என்னும் பிணக்கின்றி எல்லாச் சமயப் பொருள்கள் யாவற்றையும் தன்னகத்துள் அடக்கி நிற்பது எதுவோ அதுதானே மெய்ச்சமயம்

என்று நூல்கள் இயம்புகின்றன. இவ்விலக்கணம் நம்முடைய சமயத்திற்கன்றி வேறு எதற்குண்டு? நமது சமய சாத்திரங்களில் சொல்லப்பட்ட பொருள்கள் மூன்று. அவை பதி, பசு, பாசம் என்பன. இவற்றின் இருவகை இயல்புகளையும் உள்ளபடி உணர்த்துவனவே சைவ சித்தாந்த சாத்திரங்கள், அவை தமிழ் பிறந்த நாளிலேயே உடன் பிறந்து உண்மை ஞானத்தை உலகமெல்லாம் பரப்பிவருவன.

இத்தகைய சைவசித்தாந்த சாத்திரங்களை நாமே உணர்ந்துகொள்ள முடியாது, எத்தனையோ இலக்கணங்களை யெல்லாம் உணர்ந்துகொள்ளலாம். இலக்கியங்களை யெல்லாம் அநுபவித்துப் படிக்கலாம். வானத்தில் பறக்கக்கூடிய சாஸ்திரங்களையும், அணுகுண்டு சாஸ்திரங்களையுங்கூடத் தெரிந்துகொண்டுவிடலாம். இவைகளெல்லாம் பௌதிகப் படிப்புக்களே. இந்த அறிவு பாச ஞானம் என்று அழைக்கப்படும். இவற்றை வைத்துக்கொண்டு சமய நூல்களை ஆராய்ந்துவிட முடியாது. அதற்குக் கடவுள் திருவருள் முன்னிற்க வேண்டும். நாமெல்லாம் பரதந்திரர்களே. இறைவன் ஒருவனே சுதந்திரன், அவன் அருள் இருந்தாலல்லது உண்மை ஞானம் சித்தியாது. அப்பரடிகள் பெரிய அநுபூதிமான், திருவருள் ஞானம் கைவரப்பெற்றவர். அவரே சொல்கிறார் பாருங்கள் 'காண்பார்ஆர் கண்ணுதலாய் காட்டாக்காலே' என்று. 'உணருமா உணரே காணுமா காணுமே' என்ற அநுபவ வாக்குக்களும் இங்கு நினைவுக்குக்கொண்டுவரத்தக்கன. இத்தகைய உண்மை ஞானத்தை நூல் வழியாலும் உணர்தல் மிகமிக இன்றியமையாதது. அதற்கு மொழித்துணை

வேண்டும். தமிழ்மொழி அதற்கேற்ற மொழி. தமிழும் சைவமும் உயிரும் உடலும் போல்வன.

தமிழ் எல்லா இலக்கணத்தோடும் பொருந்தி இசையால் இயங்கி நாடகத்தால் ஆடவைக்கிறது. இசை நடுவில் இருக்கிறது. இசை இசைத்துச்செல்ல, முன்னின்ற இயலும், பின்னின்ற நாடகமும் இயங்குகின்றன என்பதை இந்த அருணகிரி இசைக் கழகம் செய்து காட்டுகிறது. கழகம் இசைக் கழகம்; செய்யும் பணிகள் இயல் இசை நாடகமாகிய மூன்றையும் வளர்ப்பது; இது மிகப் பொருத்தமல்லவா?

மெய்யன்பர்களாகிய உங்கள் ஆதரவாலும், எமது ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருளாலும் கழகம் நீடு வாழ்க.

என்று வாழ்த்துரைத்தார்கள். விரிவுரைப் பொறுப்பாளர் நவநீதகிருஷ்ணன் அவர்கள் அடுக்கிய சொல்லால் மிடுக்காகத் தம்கருத்தை வெளிப்படுப்பவர். அவர் நன்றி கூறினர். இறைவணக்கத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

திருச்செந்தூரில் :

தமிழ்நாட்டிலுள்ள ஆதீனங்களில் மிகச் சிறந்ததும் பெரியதும் திருவாவடுதுறை ஆதீனம், இந்த ஆதீனத்திற்கு இம சேதுபரியந்தம் திருமடங்களில் தான தருமங்கள் நிகழ்கின்றன. இப்பொழுது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகளவர்கள் இவர்களை வரவேற்க எல்லா



செந்திலாண்டவன் சந்நிதியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

செந்திலாண்டவன்கோயில் மேலக்கோபுரம்.

ஏற்பாடுகளும் செய்வித்திருந்தார்கள். எல்லாக் காரியங்களிலும் கூடஇருந்துகவனிக்கும்படி தக்ஷிணம்மேற்பார்வையாளர் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளுக்கு ஆணை தந்திருந்தார்கள். சுவாமிகளும் ஆசாரியன் ஆணையைச் சிரமேற்றாங்கி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் நெல்லைக்கு எழுந்தருளியதுமுதல் கூடவேயிருந்து உபசரித்துவந்ததோடு திருச்செந்தூருக்கும் எழுந்தருளவேண்டும் என வேண்டிக்கொண்டனர்.

30–9–51 இரவு 10 மணிக்குப் புறப்பட்டு விடியல் 4-மணி யளவில் திருச்செந்தூரை வந்தடைந்தோம். அங்குத் தருமபுர ஆதீனத்திற்கு ஒரு மடம் உண்டு. அது உயர்ந்தமுறையில் பெரும்பொருட்செலவில் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளுவதற்கேற்ப பந்தலலங்காரம் தீபாலங்காரங்களும் செய்விக்கப் பெற்றிருந்தன. சற்றுநேரம் ஓய்வுகொண்டதும், ஸ்கந்த புஷ்கரணிக்கு நீராட எழுந்தருளினார்கள், விதிப்படி நீராடி அநுட்டானங்களை முடித்துக்கொண்டு சிந்து தீர்த்தத்திலும் நீராடினார்கள். கோயில் வழிபாடும் அன்று நடைபெற்றது.

திருச்செந்தூர் மிகப் பழமையான திருத்தலம். புறநானூற்றில் 'வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில் நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை' என்றும், அகநானூற்றில் 'திருமணி விளக்கின் அலைவாய்' என்றும், வியந்து பாராட்டப்பெற்ற தலம். முருகன் திருச்செந்தூரில் நீங்காது எழுந்தருளியிருக்கின்றான் என்று திருமுருகாற்றுப்படையும் சிலப்பதிகாரமும் பேசுகின்றன.

கோயில் மிக அழகானது. கடலலைகள் வந்து தூல இலிங்கமாகிய திருக்கோபுரத்தின் திருவடியை வருடிச் செல்கின்றன. கிழக்குவாயில் பூட்டப்பெற்றிருக்கும். தெற்கிலும் மேற்கிலுந்தான் திறந்திருக்கும். தெற்கு வாயிலுக்கு நேரே அழகான மண்டபம் இருக்கின்றது. அதற்கு ஆறுமுக விலாசம் என்றுபெயர். அதற்கு எதிரி லிருப்பது ஆறுமுக நயினார் சந்நிதி. வருகிற அன்பர்கள் ஆறுமுக நயினார் அருள்வெள்ளத்தில் நீந்தித்தான் உள்ளேபோகவேண்டும். இக்கோயிலுக்கு இரண்டு பிராகாரங்கள் உண்டு. பெரியபிராகாரத்தின் மேலண்ட கோடி இரண்டிலும் வள்ளிநாயகியார் தெய்வயானை அம்மையார் சந்நிதிகள் இருக்கின்றன. வடக்குப் பிரா காரத்தில் பெருமாள்கோயில் உண்டு. அப்படியே வலம் வந்தால் தெற்குப் பிராகாரத்தின் கீழ்க்கோடியில் தொடங்கி, ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் சரித்திரம் ஓவிய வடிவில் தீட்டப்பெற்றுள்ளதைக் காணலாம். அதைத் தீட்டச்செய்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள். அவ்வோவியங்கள் அடி யார் உள்ளத்து அன்புநீர் சுரக்கச்செய்யும் கருவிகளாகப் பயன்படுகின்றன. இவற்றையெல்லாம் கண்டு உள்ளே சென்றதும் கிழக்குநோக்கிய திருமுக மண்டலத்துடன் செந்திற்குமரன் காட்சி வழங்குகின்றார்.

இத்தலத்தில் ஸ்கந்தபுஷ்கரணி தீர்த்தத்தோடு கடல், தெய்வயானை தீர்த்தம், வள்ளேயானை தீர்த்தம், வைரவதீர்த்தம், வள்ளிதீர்த்தம், பாவநாசம், சேது, தசகங்கை முதலான பல தீர்த்தங்கள் விளங்குகின்றன.



திருச்செந்தூர் ஷண்முகவிலாசத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் யாத்திரா
கோஷ்டியுடனும் திருவாவடுதுறை ஆதீனப்பிரதிநிதி ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி

திருச்செந்தூரில்



வள்ளிக்குகையும் முன் மண்டபமும்

திருக்கோயிலுக்குத் தெற்கே ஒருபர்லாங் தூரத்தில் நாழிக்கிணறு தீர்த்தம் இருக்கிறது. சற்றேறக்குறைய இருபது அடி ஆழம் உள்ளே இறங்கிச்செல்லவேண்டும். வசதியான படிக்கட்டுகள் உள்ளன. அந்தக் கிணற்றினுடைய உட்புறத்தில் ஈசானியமூலையில் ஒரு அடி சுற்றளவுள்ள ஒரு சிறு கிணறு இருக்கிறது. அதுதான் நாழிக்கிணறு. நல்லதண்ணீர். சொம்பால்தான் மொண்டு ஊற்றிக்கொள்ளமுடியும். எடுக்க எடுக்கக் குறையாமலும் அளவில் மிகாமலும் என்றும் ஒருபடித்தாயிருக்கும் சிறப்பு வாய்ந்தது,

இத்தலத்தைப்பற்றி நாலைந்து கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் இரண்டு கல்வெட்டுக்கள் வரகுணமாறன், வருஷாந்தரச் செலவுக்காகவும், விசேஷ பூசைக்காகவும், வேறு திருப்பணிகளுக்காகவும் பெரும் நிதி தந்தமையைக் குறிப்பிடுகின்றன. ஒருகல்வெட்டு கி. பி. 1282ல் வாழ்ந்த மாறவர்மனது என்று கருதுகிறார்கள். இதில் அவன்செய்த நுந்தாவிளக்குப் பணி குறிப்பிடப் படுகிறது. நான்காவது கல்வெட்டு விக்கிரமபாண்டியன் நக்கீரதேவர் பூசைக்கு நிலம்விட்டதைக் குறிக்கிறது. பதினேழாம் நூற்றாண்டில் வாணிகத்திற்கு வரும் டச்சுக்காரர்கள் ஆறுமுக நயினார் திருவுருவத்தைக் களவாடிச் சென்றார் என்றும், உருக்கமுயற்சித்தபோது பல தீமை நிகழ்ந்தன என்றும், அதனால் கடலில் வீசிச் சென்றார்கள் என்றும், திருநெல்வேலிச் சீமைச் தண்ட நாயகராக இருந்த மகாவித்துவான் வடமலையப்பன் பிள்ளை கனவில் உத்திரவானவண்ணம் கடலிலிருந்து

எடுத்தார் என்றும் வரலாறுகள் சொல்லப்படுகின்றன. இவ்வரலாறு 1785ம் ஆண்டில் ஒரு டச்சு மாலுமியிடம் தான் தெரிந்துகொண்டதாக எம். ரென்னல் என்னும் பிரஞ்சுப் புலவர் கூறுகிறார்.

காசிமடத்தின் சார்பில் வரவேற்பு :

ஸ்ரீவைகுண்டம் குமரகுபரர் திருமடத்தைக் கண்காணித்துவரும் பேரன்பர் ஸ்ரீமாந் குமரகுருபரன் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை ஸ்ரீவைகுண்டத்திற்கு எழுந்தருளவேண்டும் என்று விண்ணப்பித்துக்கொண்டார்கள். பிள்ளையவர்கள் குமரகுருபரர் பரம்பரையில் வந்தவர். சைவ ஆசாரசீலர். நிறைந்த பண்பாடுள்ளவர். குமரகுருபரன் பத்திராதிபர். குமரகுருபரன் பெண்கள் தேவாரபாடசாலை, குமரகுருபரன் அச்சகம், குமரகுருபரன் புத்தகசாலை இவற்றை மேற்பார்த்து வருபவர்கள். இத்தகைய அன்பரது வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் காலை 9 மணிக்கு எழுந்தருளியானார்கள். ஸ்ரீவைகுண்டத்தின் ஆற்றுப்பாலத்தைத் தாண்டியதும் அமோகமான வரவேற்பு; ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தார்கள். எல்லாவகையான வாத்தியங்களும் ஒருசேர ஒலித்தன. வந்திருந்த பிரமுகர்கள் அனைவர்களுடைய முகத்திலும் ஆனந்தமும் அன்பும் பெருக்கெடுத்தோடின, பெருமாள் கோயிலிலிருந்தும் கைலாசநாதர் கோயிலிலிருந்தும் அருளிப்பாடுகள் பார்க்கப்பெற்றன. மிதுவாக ஊர்ந்துசென்றது கார். நல்ல வெய்யில். இருந்தாலும் அன்பருடைய அன்புச்சேது

திருச்செந்தூர்



தருமபுர ஆதீன மடம்

ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் ஹைஸ்கூலில்



ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு

ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் நூல்நிலையம்:



ஸ்ரீ குமரகுருபரன்பிள்ளை அவர்களுக்குப் பொன்னுடை வழங்கியது.

ஸ்ரீவைகுண்டத்தில்:

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் தங்கிய இடம்.

தடுக்கும்போது விரைந்துசெல்வது எப்படி ? சுமார் ஒரு மணி நேரம் ஆயிற்று குமரகுருபரர் திருமடத்தை அடைய. திருமடத்திலுள்ள சுவாமிகள் திருவுருவம் விசேஷ அலங்காரம் செய்விக்கப்பட்டிருந்தது. தீபாராதனை நடந்தது. அடியார்கள் வழிபட்டு உய்ந்தார்கள். திருவாளர் பிள்ளை அவர்கள் குமரகுருபரர் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு அழைத்துச் சென்றார்கள். ஒவ்வொருவகுப்பறையும் காண்பிக்கப்பெற்றது.

பிறகு தேவாரப்பாடசாலை நடக்குமிடத்திற்கு எழுந்தருளினார்கள். மாணவிகள் எல்லோரும் மிக அருமையாகப் பாடினார்கள். தூய்மையின் பண்பும், இசையின் இனிமையும், தேவாரத்தின் தெய்விகமும் சேர்ந்து ஒலித்தன. தொண்டர் அஞ்சுகளிறும் அடக்கி வழிபாடு செய்யும் இடமாகிய கேதாரச்சிறப்பு சிந்தையில் நிறைவிக்கப்பெற்றது. எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு பள்ளிப் பொதுமன்றத்தை யடைந்தோம். ஒருபக்கம் பிரமுகர்களின் பெருங்கூட்டம், ஒருபுறம் மாணவிகள். முன்புறம் ஒரு நாடகமேடை. ஸ்ரீ குமர குருபரன் பிள்ளை அவர்கள் வரவேற்புப்பத்திரம் வாசித்தளித்தார்கள். பலவேறு நடனங்கள் இனிமையும் இசையும் தோன்ற நடித்துக்காட்டப்பெற்றன. பரிசுகள் வழங்கப்பெற்றன.

தலைமையாசிரியர் நிர்வாகத்திறனும், இசையாசிரியையின் போதனைத்திறமும் ஏனையாசிரியைகளின் ஒத்துழைப்பும், பள்ளிக்கூட மாணவிகளின் ஒவ்வொரு முன்னேற்றப் பகுதியிலும் உருக்கொண்டு விளங்கின,

இதனைக் கண்டுமகிழ்ந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்,

"இன்று நவராத்திரியின் முதனாள். நவராத்திரி கலைத் தெய்வத்தை—பொருள் தெய்வத்தை—வெற்றித் தெய்வத்தை வழிபடும் நாளாகும். இந்த மூன்றுமா யிருப்பவள் பராசக்தியே. பராசக்தி,

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்கும் குமை முலையும் முலைமேல் முத்துமாலையும்.

கொண்டு எங்கும் காட்சிவழங்குகிறாள். சக்திநிபாத மில்லாமல் ஞானிக்கு மோக்ஷமில்லை. லௌகிகனுக்கும் பொருள் புகழ் முதலிய வளர்ச்சியில்லை. ஆதலால் எல்லாம் தருபவள் அவளே.

அத்தகைய நாளில் இந்தப் பள்ளிக்கு வந்தது பெரு மகிழ்வளிக்கிறது. இந்தப் பள்ளிக்கூடம் சிவஞானச் செம்மலாகிய—ஐந்தாண்டில் அருள்நூலை ஆக்கித்தந்த ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுடைய திருவருளை முழுதும் பெற்றது. நமது கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பெரும் பொருள் அளித்து இந்த நகரவாசிகளுக்கு அறிவையும் அருளையும் பரப்ப முன்வந்திருக்கிறார்கள்; இது உலகம் போற்றும் உயர்ந்த செயலாகும். உங்கள் உயர்நிலைப் பள்ளியில் நவராத்திரி விழாவின் முதனாளைய நிகழ்ச்சி களுக்கு மூலதனமாக இந்தத் தொகையை (1000) நமது அன்பர் பிள்ளையவர்களிடம் கொடுக்கிறேன். உங்கள்

கல்வி நிலையங்கள் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திரு வருளால் என்றென்றும் வாழ்க.''

என்று ஆசிகூறினர்கள், பின்னர் தலைமையாசிரியை வந்தனோபசாரம் கூறக் கூட்டம் முடிவடைந்தது. பிறகு ஸ்ரீ குமரகுருபரன் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு எழுந் தருளினர்கள். பள்ளிக்கூடத்தின் சார்பில் வரவேற்பு வாசித்தளிக்கப்பெற்றது. மகாசந்நிதானம் அவர்கள் அதனை அன்போடு ஏற்றுக்கொண்டு ஆசி அருளும் முறையில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் சைவத்திற்கும் தமி ழிற்கும் ஆற்றிய அரும்பெருந் தொண்டுகளைப்பற்றியும், அவர்களின் அருள்வள்ளற் றன்மையைப் பற்றியும், ஸ்ரீ காசிமடத்துத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஹிமசேது பர்யந்தம் ஆற்றிவரும் அறச்செயல்களைப்பற்றியும் எடுத்துரைத் தார்கள். பிறகு ஸ்ரீ குமரகுருபரன் அச்சகம் முதலிய வற்றைத் திருக்கண் நோக்கி ஜாகைக்கு எழுந்தருளினர் கள், மிகவும் உயர்ந்த முறையில் ஸ்ரீ மாந் பிள்ளை அவர்களால் மாகேஸ்வரபூஜை நடத்திவைக்கப்பட்டது. இடைவேளை ஓய்வுக்குப்பின் மாலை ஆறுமணிக்குக் கைலாசபுரம் ஸ்ரீ கைலாசநாதர் வழிபாடும், ஸ்ரீ வை குண்டம் கண்ணபிரான் தரிசனமும் இனிது நிறை வேறின. சுமார் இரவு ஒன்பதுமணிக்குத் திருச்செந் தூருக்கு எழுந்தருளினர்கள்.

மீண்டும் திருச்செந்தூர் :

2—10—51 காலை திருச்செந்தூர் நகரெங்கும் ஓரே குதூகலம். எங்கு பார்த்தாலும் ஓரே கூட்டம்.

தருமபுர ஆதீன மகாசந்நிதானமவர்கள் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களால் சண்முகப்பெருமானுக்கு மகாபிஷேகம் செய்விக்கப்போகிறார்கள் என்ற பேச்சு, ஒருபக்கத்தில் பிராமண போஜனமாமே என்பவர் சிலர், ஏழைகளுக்கெல்லாம் சாப்பாடாமே என்பவர்கள் சிலர். இப்படிக் கோயில் வாசலிலேயே விடியல் 4-மணிக்கு விசுவரூபகாலத்திற்கே பெருங்கூட்டம் கூடி விட்டது. மகாசந்நிதானம் அவர்கள் விடியல் 4-மணிக்கே முதனாள் போலவே ஸ்கந்தபுஷ்கரணியில் நீராடித் திருக் கோயிலுக்கு எழுந்தருளினார்கள். மகாபிஷேகம் முடிகிற வரையில் பெருமானைக் கண்ணாரக் காணத் திருவுள்ளங் கொண்டார்கள். அபிஷேகத்தொடக்கம் காலை 8 மணிக்கு. பெருமான் கங்கை, பால், தேன் முதலிய அபிஷேகங்களை ஏற்றுக்கொள்ளும்போது பற்பல நிறங்களில் காட்சி வழங்கியது கண்வழியாகக் கருத்துப் பறிபோயிற்று. சந்தனாபிஷேக காலத்திலும் விபூதி அபிஷேக காலத் திலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாகத் தன்வசமற்று வைத்தகண் வாங்காது இமையா நாட்டம் பெற்று நின்றுகொண்டிருந்தார்கள். சந்நிதியில் இருந்த அனைவருமே உயிரில்லா ஓவியங் களாயினர். தீபாராதனை காலத்தில்தான் அரகர முழக்கம் அவர்களை உயிரோடு கூடியவர்களாக அறியச்செய்தது. பக்திப்பிரவாகம், அன்பு வெள்ளம் என்றெல்லாம் அடியேன் கண்ட இலக்கியக்காட்சிகள் இன்று நேர்முகக் காட்சிகளாயின. அர்ச்சனை வழிபாடு முடிய நண்பகல் 1 மணி ஆகிவிட்டது. திருமடத்திற்கு எழுந்தருளியதும் அங்கங்கே பிராமண போஜனமும், ஏழைகள் சாப்பாடும்

நன்முக நடைபெற்றன என்பதை, காரியஸ்தர்கள் மூலம் தெரிந்து கொண்டும், உண்டுபோகின்றவர்கள் களிப்புடன் செல்வதை நேரில் பார்த்தும் மகிழ்ந்தார்கள். வந்திருந்த அடியார்கள் பிரமுகர்களுடன் மாகேஸ்வர பூஜையும் ஏற்றுக்கொண்டார்கள்.

இத்தலத்திலும் திருவாவடுதுறை யாதீனத்துச் சுவாமிகள் காரியஸ்தர்கள் அனைவரும் உபசாரங்களைக் கவனித்தது மிகப் பாராட்டற்குரியது. பிறகு குலசேகரன் பட்டினத்துச் சைவ அன்பர்கள் அனைவரும் இன்று மாலையாவது தங்கள் ஊருக்கு எழுந்தருளவேண்டும் என்பதை விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

திருச்செந்தூரில் கோயில் நிர்வாகக் குழுவினருள் ஒருவராகவும், பொதுக்காரியங்கள் பலவற்றிற்கும் தலைவராகவும் இருப்பவர்கள் அறம்வளர்த்தநாத பிள்ளை, அவர்கள், திருச்செந்தூர் தெய்வீகத்தின் தலைமை ஸ்தானமாக விளங்குவதுபோல் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் இவைகளிலும் விளங்கவேண்டும் என்பது அவர்கள் நோக்கம். அதற்காக அல்லும் பகலும் தந்நலம் இன்றி உழைக்கும் உத்தமர். பத்திரப் பதிவு இலாக்கா ஓய்வு கொடுத்தாலும் பொதுக்காரியங்கள் இவர்களுக்கு ஓய்வு அளிப்பதில்லை. ‘குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்’ என்ற குறளுக்கு இவர்களே எடுத்துக்காட்டு என்னலாம்.

இத்தகைய சிறந்த திரு பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கூடவே வழிபாடுகளில்

உடனிருந்தார்கள், வேளாளர் சங்கத்திற்கு எழுந்தருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். அங்ஙனமே 3 மணிக்கு மகாசந்நிதானமவர்கள் எழுந்தருளினார்கள். வேளாளர் ஐக்கிய சங்கமும். தேவாரச் சங்கமும் வரவேற்பளித்தன. அவற்றிற்கு ஆசிகூறும் முறையால் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்,

"தேவாரம், வேளாளர்களாகிய நமக்கெல்லாம் கிடைத்த ஒரு புதையல். தேவதேவனுடைய அருளை எளிதில் கிடைக்கச்செய்வது, தேவாரத்தை ஆக்கியவர்கள் பெருமக்கள். அவர்கள் சென்ற மார்க்கத்தை அடியொட்டியே நாம் நமது வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்ளுதல் வேண்டும். இளமை முதுமை எல்லாவற்றிலும் அவர்கள் எப்படி ஈசுவரனை அனுபவித்திருக்கிறார் பாருங்கள். அத்தகைய வேளாளருடைய சங்கமும் தேவாரத்தினுடைய சங்கமும் இணைந்திருப்பது நற்காலத்தின் அறிகுறியாகும். சங்கம் வளர முச்சங்கம் வளர்த்த முதல்வன் அருள்புரிவாராக"

என்று ஆசி அருளினார்கள். அங்கிருந்தும் குலசேகரன் பட்டினத்தை யடைந்தோம்.

குலசேகரன்பட்டினம்:

குலசேகரன்பட்டினம் கடற்கரையோரத்திலுள்ள அழகான கிராமம். அங்கிருப்பவர்கள் பெரும்பாலும் சைவர்களே. அவர்களில் பெரும்பாலோர் கொழும்பு வியாபாரிகள். ஆதலால் அவர்கள் பெருஞ் செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்கள். எவ்வளவுக்கெவ்வளவு

செல்வம் பெருகுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு திருவருளும் நிறைந்திருக்கிறது. அங்கே நமது சமயத்தை விட்டு வேற்றுச்சமயத்துச்செல்லும் ஏழைகளும் மிகுதி. மக்கள் ஞானத்திற்காக வேற்றுச்சமயம் செல்லவில்லை. ஏழ்மையினாலேயே செல்லுகிறார்கள் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அதிலும் அனாதைகளான பெண்களே மதம்மாறி மற்றவரையும் மாற்றக் கருவியாருப்பதைக் கண்டு அவர்களை நல்வழிபடுத்த வள்ளியம்மை பெண்கள் போதனாமுறைப் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஒன்றையும் அதனைச்சார எட்டாம் வகுப்பு வரையிலுள்ள உயர் நிலைத் தொடக்கப்பள்ளி ஒன்றையும், அனாதைப் பெண்கள் விடுதி ஒன்றையும் நடத்தி வருகிறார்கள். சமய உணர்ச்சி குன்றாதிருக்க பெண்கள் தேவாரச் சங்கம் நடைபெறுகின்றது. திருச்செந்தூரில் சிறந்த விழாக்கள் தோறும் தேவாரபாராயணமும் திருப்புகழ் பாராயணமும் செய்து வருகிறார்கள். இத்தகைய கலை நிலையங்களின் சார்பாக, போதனாமுறைப் பள்ளியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப் பட்டது- பொதுமக்கள் சார்பிலும் ஓர் வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது.

அடியேன் சமயத்துறையில் பெண்களின் கடமையைப்பற்றிச் சிறிதுநேரம் பேசினேன். மாணவிகள் தேவார இசையும், கும்மி கோலாட்டங்களும் நடித்துக் காட்டினர். பயிற்சிமுறையும், வாழ்க்கையில் பயன் படும்விதமும் அவர்களிடையே நன்றாகப் பிரதிபலித்தன. இதனைக்கண்டு மகிழ்ந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்,

"அம்மைக்குரிய இந்த சிறந்த நவராத்திரிநாளில் கலைமகள் பகுதியாகிய முதல் 3 நாட்களில் கலைச் செல்வி களாகிய உங்கள் எல்லாரையும் கண்டது பெருமகிழ்ச்சி யளிக்கிறது, இவ்வூர் மெய்யன்பர்களும் கல்வி நிலையங் களும் அளித்த வரவேற்புகளுக்குப் பெரிதும் மகிழ் கின்றோம், பாண்டிநாட்டில் சைவசமயம் அடியார்கள் உள்ளத்திலே மறைந்திருந்த காலத்தில் - வேந்தன் வேற்றுச் சமயத்தைத் தழுவியிருந்த காலத்தில் ஒரு மங்கையர்க்கரசியாரால் ஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத் துணைகொண்டு நம் சமயம் மீட்டும் நாட்டப் பட்டது என்பதை நீங்கள் உணர்வீர்கள். இப்போது இங்கு விளங்கும் மங்கையர்க்கரசியர்களாகிய நீங்களோ பன்னிரு திருமுறைகளையும் பெற்றிருப்பதோடு திருப் புகழ் அநுபூதி இவைகளின் துணையையும் பெற் றுள்ளீர்கள். இவைகள் உங்கள் மனத்தைவிட்டு நீங்காது இருக்கின்றன.

நீங்கள் நம் சமயத்துக்குச் செய்யும் தொண்டுகள் மிகப் பலமாக இருக்கும். சமயவெற்றியே உங்கள் வாழ்வின் வெற்றி. உங்களுக்குப் பாண்டிப்பிராட்டி எல்லா நலன்களையும் நல்குவாளாக."

என்று ஆசியருளினார்கள்.

பின்னர், மகாசந்நிதானம் அவர்களைத் திருக்கோயில் திருமண்டபத்தில் எழுந்தருளுவித்து, சைவப்பெருமக்கள் தனித்தனியே வழிபட்டுத் திருநீற்றுப் பிரசாதம் பெற்று உய்ந்தார்கள். மணி 7-30 ஆகியும் மக்கள் ஆர்வம் அடங்கியபாடில்லை. மேலும் மேலும் வந்து வணங்கிக் கொண்டே யிருந்தார்கள். சைவப் பெருமக்களுடைய

அன்பு வெள்ளம், கரை காணப்படாததாயினும், ஒருவாறு அதனையும் நீந்திக்கொண்டு செந்தில் முருகன் அருள்வெள்ளம் ஈர்க்க எட்டு மணியளவில் திருச்செந்தூருக்கு எழுந்தருளினார்கள். திருமஞ்சன முடித்துக் திருக்கோயிலுக்குச் சென்றார்கள். எல்லா மூர்த்திகளுக்கும் விசேஷ அர்ச்சனை நடைபெற்றது. சண்முக நாயனார்க்குச் சண்முகார்ச்சனை நடைபெற்றது. கூட வந்த அனைவரும் அருச்சனை முடியும்வரையில் கந்தர் கலிவெண்பா பாராயணம் செய்ய ஆராதனை இனிது முடிந்தது.

விடியல் 4 மணி இருக்கும். பெருமான் திருவனந் தலையும், பலர் புகழ் ஞாயிற்றைக் கடலிற் காணும் காட்சியையும் விட்டுப்போக மனமில்லை. விரைந்து திருமஞ்சன முடித்துப் புறப்படலாமே என்று ஆணை தந்தார்கள். அடியேன் இரவே விடைபெற்று வந்ததாக உத்தரவாயிற்றே என்றேன். இருள் நீங்கியதும் விடை தருவதாகத்தான் உத்தரவாயிற்று; அந்த நிலை ஆன்மா கனவுடலில் இயங்கும்போது கண்டது; அவ்வாறே செய்துகொள்வது தகுதி; ஆணையும் ஆம் என்றார்கள். அவ்வாறே 4½ மணியளவில் நாழிக்கிணற்றில் நீராடி ஏகாந்த சேவையாகச் செந்திற்பெருமான் திருவடி வணங்கிப் புறப்பட்டோம்.

விக்கிரமசிங்கபுரம்:

பகல் 11 மணிக்குப் பாபநாசம்போகிற வழியில் அம்பாசமுத்திரம் தாண்டி விக்கிரமசிங்கபுரத்தை

அடைந்தோம். விக்கிரமசிங்கபுரம் என்றவுடனேயே சைவப் பேரன்பர்கள் உள்ளத்தில் மாதவச் சிவஞான சுவாமிகள் திருவடிவம் குடிகொள்ளும். இருமொழிப் புலமையும், திருவருட்பொலிவும் உடைய சிவஞான சுவாமிகள் அவதாரத்தலம் அல்லவா இது என்ற எண்ணம் உண்டாகும்.

சாதாரணமக்களுக்கு இப்படி எண்ணங்கள் உண்டாகுமானால் காஞ்சி புராணத்தையும், சிவஞானபோதச் சிற்றுரை பேருரை முதலியவைகளையும் சுவைத்து அநுபவிக்கின்ற எங்கள் மகாசந்நிதானம் அவர்களுக்குச் சொல்லவாவேண்டும்! காஞ்சிபுராணத்திலுள்ள சைவ சித்தாந்தக் காட்சிகள் பார்க்கும் திசைதொறும் காட்சியளித்தன. இக்காட்சியோடு சுவாமிகளுடைய அவதாரத் திருமடம் எங்கே என்று உசாவிக்கொண்டே ஸ்ரீ சிவஞானசுவாமிகள் திருமடத்தை அடைந்தார்கள். அங்கே சைவப்பெருமக்கள் பலர் குழுமியிருந்தனர். அதில் இருவர் பரபரக்க வந்து வணங்கி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களை வரவேற்றார்கள். அவர்களில் ஒருவரிடத்தே அறிவு, அநுபவம், ஆண்டு எல்லாம் கனிந்திருந்தன. மற்றொருவரிடத்தில் உறுதி, ஊக்கம் எல்லாம் முறுக்கோடு இளமையாயிருந்தன. இவ்விருவரும் யார்? அம்பாசமுத்திரம் சித்தாந்தப் பேரறிஞர் சிவஞானம் பிள்ளை அவர்களும், அவர்களின் மூத்தமருமகனார் மரகத சுப்பிரமணிய பிள்ளை அவர்களுமாவார்கள். இவ்விருவரும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் வரவேற்றுத் திருமடத்தையும், நூல் நிலையத்தையும், சுவாமிகள்

திருவுருவத்தையும் காட்டினுர்கள். அங்கிருந்து கூடவே பாபநாசம் வந்தார்கள்.

பாபநாசத்தில்:

பாபநாசம் தமிழ்தந்த அகத்தியர் என்றும் தவஞ் செய்யும் மலையாகிய பொதியமலைச்சாரலில் இருக்கிறது. தென்றற்காற்றின் பிறப்பிடம் என்றும், தண்பொருநை தோன்றுமிடம் என்றும், அகத்தியர் தவச்சாலை என்றும், ஆனந்தத்தலம் என்றும் போற்றப்படும் சிறப்பினை யுடையது. இத்தலத்தில் வந்தாலே பாபங்கள் நாச மாகும் என்பதைப் பாபநாசத் திருக்கோயில் அமை தியும், தெண்ணீர் ஒழுக்கும், உயர்ந்த மலைகளும், வான ளாவிய மரங்களின் தோற்றமும், தண்பொருநைக்கரை யிலுள்ள மருதமரங்களின் அசைவும் பசுமையும், இன் றும் ஆமோதிக்கின்றன என்னலாம்.

இங்கே திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சிறந்த திருமடம் ஒன்று உண்டு. இதற்கு ஈசான மடம் என்று பெயர். இங்கேதான் இலக்கணக்கொத்து சாமிநாத தேசிகர் இருந்தார்களாம். பொதியக்காற்றும் அகத்தியர் அருளும், இயற்கையெழில்களும் இலக்கணத்தில் ஏன் நுணுக்கங்களை அருளமாட்டா?

இங்கே பழமறை நாயகராகிய முக்களாமூர்த்தி உலகம்மையோடு எழுந்தருளியிருக்கிறுர். தலவிநாயகர் பூதவிநாயகர் எனப்படுவர். கூத்தப்பிரானுக்குப் புனுகு சாத்தப்படுவது வழக்கமாதலின் அவருக்குப் புனுகு

சபாபதி என்று பெயர். இங்கேதான் அகத்திய முனிவருக்குத் திருமணக்கோலக் காட்சி அருளியதாக புராணவரலாறு. இத்தலத்தில் பாணதீர்த்தம், கல்யாண தீர்த்தம், பாபநாச தீர்த்தம், தாமிர்பரணி முதலிய தீர்த்தங்கள் பல உள்ளன.

கோயில் இரண்டு பிராகாரங்களோடு கூடியது, மிகச் சிறியது. இத்தலத்தை வழிபட, பகல் 12 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். மாகேஸ்வர பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகள் திருவாவடுதுறை ஆதீனத்தாரால் செய்யப்பட்டிருந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தங்குவதற்காகப் பண்ணை சிவனுபாண்டியத் தேவர் அவர்களுடைய ஆனந்த விலாஸத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனந்த விலாஸ் ஆனந்தவிலாஸந்தான். அதற்குள் அழகான பூந்தோட்டம். பூக்களையோ தளிரையோ யாரும் தொடக் கூடாது. அங்கிருந்து ஆற்றிலிறங்க மண்டபமும் படித் துறையும் மின்சார வசதியுடன் இருக்கின்றன. தேவர் அவர்கள் அன்பு இரக்கம் முதலிய உயர்ந்த பண்பாடு உடையவர்கள் என்பதைச் செடிகொடிகளையும் கிள்ளக் கூடாது என்று ஜீவகாருண்யத்தோடு பாதுகாப்பதிலிருந்தே நாம் அறியலாம்.

அந்த பங்களாவில் எழுந்தருளியானதும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உள்மண்டபத் துறையிலேயே திருமஞ்சனத்திற்கு எழுந்தருளினார்கள். யாத்திரையால் விளைந்த தேகசிரமம், வேனில்வெப்பம், நண்பகல் 1 மணி,

சூரியன் முழுவலிமையோடு உச்சியில் இருக்கின்றான். அந்த நேரத்தில் மலையுச்சியிலிருந்து பாறைகளின் வழியாகப் பதுங்கி ஓடிவருகின்ற நீர் சமதரையில் வந்ததும் விரைந்து ஓடுகிறது. என்ன விரைந்தாலும் கலக்கமில்லை. எவ்வளவு ஆழமானாலும் அடியிலுள்ள தரை தெளிவாகக் காணப்படுகிறது. அந்தநீரில் மீன்கள் காணப்படுகின்றன. தண்ணீரில் ஒன்றாவது ஒளியவும் இல்லை. மறையவும் இல்லை. எல்லாம்தெளிவு. தெளிவால் விளைவது நன்மையாயினும், தீமையும் இல்லாமல் இல்லை. அந்தத் தீமையாவது ஆழமறியமுடியாத ஒன்றுதான்.

இப்படிப்பட்ட ஆற்றில் இறங்கினோம். வெப்பம் போயிற்று. தண்மை மிகுந்தது. பெருமானின் தண்ணருள் வெள்ளத்தில் தோய்ந்ததும், பிறவிவெப்பம் வினை வெப்பம் மலவெப்பம் எல்லாம் தொலைந்து ஆன்மா தண்ணருள் மயமாய் நிற்பதைப்போன்ற உணர்ச்சி பிறந்தது. மகாசந்நிதானம் அவர்கள் இயற்கைக் காட்சிகளை இறைக்காட்சிகளாகக் கண்டு வழிபட்டுக்கொண்டே நீராடினார்கள்.

மாகேஸ்வரபூசை முடிந்ததும் சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு மலைமேலுள்ள மேலணைக்கட்டு, கீழணைக்கட்டுகளைக்காண எழுந்தருளியானார்கள். திரு. சிவஞானம்பிள்ளை அவர்களும், மரகத சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் கூடவே வந்தார்கள். இரண்டு அணைக்கட்டுகளிலும் உள்ள குடிமக்களுக்குச் சுகாதார அதிகாரியாக இருப்பவர்கள் டாக்டர் பிரமநாயகம்பிள்ளை

அவர்கள், கும்பகோணத்தில் போலீஸ் சூப்பிரண்டாக இருந்த கோமதிநாயகம்பிள்ளையின் இளவல்; வீர பாண்டிய கட்டபொம்மனிடம் வேலைபார்த்த தானாதிகாரி பிள்ளையின் பரம்பரையில் வந்தவர். அவரும் அங்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களைத் தரிசிக்கவந்தார்கள். அவர்கள் வருகை மேலணைக்கட்டில் எல்லாப் பகுதி களையும் பார்வையிட வசதியாயிருந்தது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்களுக்காக ரிஸர்வாயர் திறக்கப்பட்டது. அணைக்கட்டு அதிகாரிகளுடைய அறிவிப்பின்மேல் நாங்கள் 200, 300 அடிகள் தூரத்திற்கு அப்பாலும் 40 அடி உயரத்தின்மேலும் இருந்தோம். தண்ணீர் திறக்கப் பட்டதும் சல்லடைக்கண் வழியாக நீர் வெகுவேகமாகப் புறப்பட்டது. அவ்வளவு தூரத்திலிருந்த எங்களை மழைத் தூவானம்போல வந்து நனைத்துவிட்டது. ரிசர்வாயர் சூரியனைப்போலவும், அதில் உண்டான நீர் எழுச்சிகள் கிரணங்களைப்போலவும் இருந்தன என்று ஒருவாறு உவமைவாயிலாகக் காட்டலாமேயன்றி அதனழகை முழுவதும் எழுதச் சொற்கள் அகப்படவில்லை. இந்த நிலையில் எங்களால் மேலணைக்கட்டைவிட்டுக் கீழணைக் கட்டும் பார்க்கப்பெற்றது. வழியில் வாட்டர் ஒர்க்ஸும் அப்படியே.

அங்கே மூன்று பெரிய குழாய்கள் மலையுச்சியில் இருந்து கீழ்நோக்கிவருகிறது. அவற்றிலுள்ளே மனிதன் தலையிலிடிக்காமல் தாராளமாக நுழைந்துபோகலாம். அதன்வழியாக வருகின்ற நீர் சுத்தப்படுத்தப்பட்டு மேல் தொட்டியில் நிரப்பப்படுகிறது. அதிலிருந்துதான் மலைப் பக்கமுள்ள நகரங்களுக்குத் தண்ணீர் அளிக்கப்படுகிறது.

அங்கிருந்தும் சுமார் ஏழுமணிக்கு மின்சார உற்பத்தி நிலையத்தைக்காண எழுந்தருளினார்கள். அங்கே பல்வேறு மின்சார உற்பத்தி முறைகளும், அவற்றைப் பெருக்கும் முறையும், பகிர்ந்தளிக்கும் முறையும், மின்சார பிரதம இஞ்சினீயரால் விளக்கிக்காட்டப்பட்டன.

இவற்றையெல்லாம் கண்டபோது மனித அறிவு தன் உழைப்பால் இயற்கையை எவ்வளவு பயன்படுத்திக் கொள்கின்றது என்ற எண்ணம் உண்டாகிக்கொண்டு இருந்தது. எங்கெங்கு மனித அறிவின் மாண்பும் இயற்கை எழுச்சியும் காணப்படுகின்றனவோ அங்கங்கு எல்லாம் இறையுணர்ச்சி உண்டாதல் இயல்பு. ஆதலால் வளைந்து வளைந்து அம்புபோலச் செல்லும் மலைப்பாதை யின் வழியாக இருள்நேரத்தில் கார்வெளிச்சத்தின் உதவி யால் இறையுணர்ச்சியோடு ஜாகைக்கு வந்தோம். மகா சந்நிதானமவர்கள் திருமஞ்சனம்முடித்துத் திருக்கோயில் வழிபாட்டிற்கு எழுந்தருளினார்கள். விசேஷ ஆராதனை வழிபாடுகள் நடைபெற்றன. மறுநாள் 4–10–51 வியாழக் கிழமை; அன்று மகாசந்நிதானம் அவர்களுக்கு மௌன உபவாசதினம்; விடியவில் வழிபாடு முடித்துக்கொண்டு குற்றாலத்திற்கு எழுந்தருளியானார்கள். புறப்படுகின்ற போது கோயிலுக்கு எதிரில் உள்ள தாமிரபர்ணிக் கரையில் மீனுக்கு உணவு அளித்து அந்தக்காட்சியையும் கண்டார்கள். இக்காட்சி இத்தலத்திற்கு மிகச் சிறப் பானது.

வருகின்ற யாத்ரீகர்கள் அனைவரும் நெற்பொரி வாங்கி வீசுவார்கள். ஒருமுறை வீசிய பிறகு பதினாயிரக்

கணக்கான மீன்கள் நீர்மட்டத்திற்கு மேல் தலையை நீட்டிக்கொண்டு இடுகின்றவர்களையே எதிர்நோக்கி யிருக்கும் காட்சி இடுகின்றவர்களுக்கு ஒரு எக்களிப்பை உண்டுபண்ணும். பலநிற மீன்கள் பளிங்குபோல் தெளிந்த நீரில் வெயிலொளிபட்டு மின்ன விளங்குவது இறைவனுடைய விசித்திர சிருஷ்டியின் விசேஷங்களைப் புலப்படுத்தும் சான்றாகும். வழியில் ஆழ்வார் குறிச்சி மடத்தையும் சிவ சைலமடத்தையும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கண்காணித்துச் சென்றார்கள். அப்போது அவ்வூர்ச் சைவப் பெருமக்களும் குத்தகை தாரர்களும் வந்து தரிசித்துத் திருநீறு பெற்றுச் சென்றார்கள்.

சிவசைலம் :

சிவசைலம் மிக அழகான மனச்சாந்திக்கு ஏற்ற சிறந்த இடம். ஒருபக்கம் மலையும் ஒருபக்கம் ஆறும் அரண்செய்யத் திருக்கோயில் திகழ்கிறது. திருக்கோயி லுக்குப் பக்கத்திலே ஆதீனத்துக்குச் சொந்தமான ஒரு பெரியமடம். அங்குதான் தருமை யாதீனத்தின் சின்னப் பட்டமாக எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானங்கள் இருப்பது வழக்கம். தருமபுர ஆதீனம் 16-வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் இங்கே பரிபூரணமானதாக ஆதீன வரலாறு கூறுகிறது.

இத்தலத்தில் நந்திக்குத் தனியே சிறப்பாக வழிபாடு நடத்தப்படுகின்றது. சந்தனக்காப்பு அலங்காரமும்

உண்டு. இறைவர் சிவசயிலநாதர். இறைவி கல்யாணி. ஆற்றங்கரையில் உள்ள சித்திரவிஷு மண்டபத்தில் இரண்டு கல்வெட்டுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று மேல் தளத்தில் இருக்கிறது. அதில் குறிப்பிடப்பெற்றுள்ள பொருளாவது 'சிவசயிலநாதர் கல்யாணியம்மன் துணை. தருமபுர ஆதீனம் கந்தப்ப தேசிகர் காலத்தில் இந்த சித்திரவிஷு மண்டபம் கட்டி நிறைவெய்தினது. ஜ்ஞானசம்பந்தர் துணை' என்பது. இரண்டாவது கல்வெட்டு மடத்திலுள்ளது. அதில் "ஸ்ரீ தருமபுரம் ஆதீனத்திற்கு மானியம்......முத்துக் குமாரசுவாமி முதலியார் தொண்ணூற்றூறு மடங்களைக் கட்டித் தானம்பண்ணியதில் இதுவும் ஒரு மடம். மடத்தில்..................சிவஞான தேசிகன் திருவடி வாழ்க' என்று எழுதப்பட்டுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் காலை 10-மணியளவில் இத்தலத்தை அடைந்தார்கள். கோயில்வரையில் கார் போகமுடியாது. ஆதலால் ஆற்றின் இக்கரையிலேயே காரை நிறுத்திவிட்டு இராமநதியில் இறங்கிச் சுமார் 2 பர்லாங்தூரம் நடந்துசென்றூர்கள். சித்திரவிஷு தீர்த்தக்கரை வானளாவ ஓங்கிய மருதமரங்களும் மாமரங்களும் அமைந்த சூழலில் பொருந்தி யிருக்கிறது, அங்கே அடிவைத்ததுமே எல்லாருக்கும் மன அமைதி ஏற்படுகிறது. சிவசயிலநாதர் சந்நிதியை அடைந்ததும் நந்தியெம்பகவானின் தரிசனம் கவர்ச்சிகரமானது. மழை வேண்டிய காலத்து நந்திக்குச் சந்தனகாப்பலங்காரம் செய்து வழிபடுவது வழக்கமாம். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா

சந்நிதானம் அவர்கள் முறையே வழிபாட்டை முடித்துக் கொண்டு திருக்குற்றாலம் எழுந்தருளினார்கள்.

திருக்குற்றாலத்தில்:

குற்றாலம் என்றவுடனேயே எல்லார்க்கும் குளிர்ச்சி பிறக்கும், சம்பந்த சுவாமிகளின் மனத்தைக் கவர்ந்த குரங்குகள் இன்றும் கூத்தாடுகின்றன. எத்தனை தரம் சென்று, எத்தனை நாட்கள் தங்கியிருந்து, இயற்கைக் காட்சிகளைக்கண்டாலும் காணும்போதெல்லாம் புதுமை தருகின்றது குற்றாலம். இதை அநுபவித்துத்தான் 'வம்பார் குன்றம்' என்று ஞானசம்பந்த சுவாமிகள் அன்று சொல்லிவைத்தார்கள். குற்றாலக்காட்சியைத் தேவாரமும், குறவஞ்சியும் காட்டுகின்ற அளவு எம்மால் எழுத்தோவியத்தில் காட்ட இயலாது. அனுபூதிமானாகிய மணிவாசகப்பெருந்தகை குற்றாலத்திலே ஈடுபட்டார். சுகம் சிவபோகமாகப் பெருகிற்று. எனக்கு ஒன்றும் வேண்டாம் என்று அவர் உரைக்கின்றார் பாருங்கள். அந்தப் பாடலை அநுபவியுங்கள்.

உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா உன்குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

இப்படி இயற்கைவளம் செறிந்த இடத்திலே திருவாவடுதுறை ஆதீனத்திற்கு ஒரு பெரிய திருமடம் இருக்கின்றது. அங்கேதான் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்றுபசரிக்க திருவாவடுதுறை ஆதீனம்

சண்பகாடவியில்:

ஸ்ரீ.லஸ்ரீ மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமும் யாத்திராகோஷ்டியினரும்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் ஆணைப்படி எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. போனதும் குற்றால நாதன் அருள்வெள்ளம்போல ஆகாயத்திலிருந்துகுதித்து முழுக்காட்டும் அருவி இவர்களையும் வரவேற்றது. நீண்டநேரம் நீராடினார்கள். அன்று உபவாச மௌனம் ஆகையால் ஓய்வுகொண்டார்கள். நண்பகல் உணவும், சிற்றுண்டி முதலியனவும் கூடவந்த அடியார் பெருமக்களுக்கும் ஏனையோருக்கும் மிக உயர்ந்தமுறையில் அளிக்கப்பெற்றன. மாலை ஐந்துமணியளவில் மீண்டும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அருவிக்கு எழுந்தருளினார்கள். திருமஞ்சனம் முடித்துத் திருக்கோயில் வழிபாட்டிற்கு எழுந்தருளினார்கள்.

குற்றாலத்திற்குத் திரிகூடாசலம் முதலிய 21 திருநாமங்கள் உள்ளன. நாம் சென்றதும் நீராடும் அருவி வடஅருவி. அதற்குமேல் இருப்பது பொங்குமாகடல். அதற்குமேல் சுமார் இரண்டுகல் தூரத்துச் சண்பகாடவி என்ற ஒரு அருவி இருக்கின்றது. சண்பகமரம் காடா இருந்தமையாலும், அங்கு சண்பகாதேவி என்ற காளி திருக்கோயில்கொண்டமையாலும் அப்பெயர் பெற்றது. அதற்குமேலுள்ளது தேனருவி. அதற்குச் செல்லும் பாதை மிகக் குறுகலானது; செங்குத்தானது. போகிற வழிகளில் கமுகு, மா, பலா, ஏலம், இலவங்கம், கிராம்பு முதலிய மரங்கள் பூத்துக் காய்த்துக் கனிந்து வருவிருந்து பார்த்திருக்கும் வள்ளல்களைப்போல நிற்கின்றன.

இத்தலப்பெயரைக் கேட்டாலே பாபங்களெல்லாம் தொலையும் என்பது கண்டகசேதகன், புஷ்பகந்தன் என்

பவர் வரலாறுகளால் அறியப்படுகின்றது. அகத்தியர் திருமால் திருமேனியைக் குழைவித்துச் சிவலிங்கத் திருமேனியாக மாற்றி அமைத்ததாக வரலாறு உண்டு. இக்கோயிலுக்குள் குறும்பலாஈசர் சந்நிதியும், இதற்கு வலதுபக்கத்தில் குழல்வாய்மொழியம்மை சந்நிதியும், இடதுபக்கத்தில் மேருவடிவான ஸ்ரீ வித்யேசுவரியின் சந்நிதியும் இருக்கின்றன. கோயில் முன்மண்டபம் மிக விசாலமானது. பெருமானுக்கு வெறும் எண்ணெய் சாத்தப்படுவது வழக்கமில்லையாம். கருங்காலி விறகைக் கொண்டு விளக்களவாகத் தொண்ணூறுநாள் எரித்துத் தயாரிக்கப்பட்ட மகாசந்தனாதித்தைலமே சாத்தப்படுகின்றது. தலவிருக்ஷம் குறும்பலா. இன்று குறும்பலா சிறிய கன்றாக வைத்து வளர்த்துவரப்படுகிறது. இந்தக் கோயில் நிர்வாக அதிகாரியாக இருக்கும் திரு. சங்கர நாராயணப்பிள்ளை அவர்கள் கோயில் மரியாதைகளுடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்றார். ஸ்ரீமாந் பிள்ளை அவர்கள் கள்ளங்கபடமற்ற மனத்தினர். மனிதருக்கு அமையவேண்டிய கலைகளில் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் பேசுவது என்பது ஒரு தனிக்கலை. அது எல்லோருக்கும் அமைவது இல்லை. பிள்ளையவர்கட்கு இல்லாதநேரமே இல்லை. நிர்வாகத்திலும், பாம்பும் நோகாமல் பாம்படித்த கோலும் நோகாமல் காரியத்தை நடத்திச்செல்லும் ஆற்றல் வாய்ந்தவர்,

இவர் தன் பரிவாரங்களுடன் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களைத் தரிசித்து ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். திருக்கோயிலமைப்பையும், சந்நிதி

களின் சிறப்பையும் தெரிவித்துக்கொண்டே தெரிசனம் செய்வித்தார். வடக்குப் பிராகாரத்தில் செல்லும்போது சுவற்றிலெழுதப்பட்டிருந்த தலபுராணப்பாடல் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மனத்தைக் கவர்ந்து அப்படியே சிறிதுநேரம் நிற்கச்செய்துவிட்டது. அருவி போன்ற அழகான சொற்பதிவு; தெளிவு; தண்மை எல்லாந்தான் அந்தப் பாடலில். ஆனாலும் பொங்குமா கடலாழத்தைப்போல மிகமிக அநுபவிக்கச்செய்வது.

'தாயறியாக் கருவிலிருந்து அமுதூட்டும் தனித்துணையே

என்பது. அப்போதே அடியேன் 'உருத்தெரியாக் காலத்து என் உள்புகுந்து உளம் மன்னி, கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட, திருத் திருத்தி மேயானை' என்று விண்ணப்பித்துக் கொண்டேன். அப்போது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் புன்முறுவலால் வியந்து ஏற்றுக்கொண்டு வழிபாடு முடித்துத் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை நவராத்திரியின் 5-ம் நாள். விடியற்காலை மணி 4-30க்கெல்லாம் ஐந்தருவிக்குப் புறப்பட்டார்கள். ஐந்தருவி என்பது திருக்கோவிலி லிருந்து சுமார் ஒன்றரைமைல் தூரத்தில் தென்மேற்கில் இருக்கிறது. அடர்ந்த காடும் மாந்தோப்புகளும் எப்பொழுதும் விளையும் விளைபுலங்களும் அந்தப் பாதையை அழகு செய்கின்றன. அந்தப்பாதை மேடுபள்ளமாக இருப்பதால் கார்களில் செல்வோர் ஏறியும் இறங்கியும் செல்ல நேர்கிறது. மக்கள் வாழ்விலே வாழ்வும் தாழ்வும்

துன்பமும் இன்பமும் மாறிமாறி வருவதுபோல, நடைபாதையில் செல்வதால் நல்லறிவு தானே வெளிப்படுகிறது. ஐந்தருவிக்கரை ஒரு மலை முடுக்கு, ஐந்து அருவிகள் தனித்தனியாக விழுகின்றன. தனித்தனியே சுமார் பத்துகெஜ தூரத்திலிருந்து விழுகின்றன. வேகமாக விழுவன சில, குழந்தைகளும் குளிக்க ஏற்றநிலையில் விழுவன சில, ஜனசந்தடி இல்லாத அந்த அமைதியான இடத்தில் ஒரு ஐயனுர் எழுந்தருளியிருக்கின்றுர். ஐயனுருக்குமுன் கல்லானை ஒன்று நிற்கிறது. அதற்கு எதிரிலே சுமார் இருபது அடி உயரமுள்ள பாறை. அந்தப் பாறையின்மேல் ஒரு ஆலமரம்.

காலை 6 மணி அருவியில் நீராட இறங்கினேம். திருவருள் வீழ்ச்சியில் சலிப்பு ஏற்படாதவாறுபோல அருவி வீழ்ச்சியிலும் அயர்ச்சி ஏற்படுவது இல்லை. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சந்தியவந்தனதிகளை முடித்துக் கொண்டு முன்குறித்த பாறையில் நின்றுகொண்டிருந்தார்கள். உடன்வந்தவர்களில் நீராடியோர் சிலர் இருமருங்கும் கைகட்டிக்கொண்டு நின்றுர்கள். காலமோ இளங்காலை; நீராடிப் பூசைமுடித்த நேரம்; திருமேனியில் துதைந்த வெண்ணீறு. பழுத்துச் சிவந்த கண்டிகை; கையில்ஜபமாலை; இந்நிலையில் ஏதோபாராயணம் செய்துகொண்டு இருந்தார்கள். கூட நின்றவர்கள் ஏதோ அண்ணுந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்தநிலை எத்தகைய எண்ணத்தை உண்டுபண்ணியிருக்கும்? சொல்லுங்கள் பார்க்கலாம். இறைவன் கல்லாலின்கீழ் இருந்து நால்வர்க்கு அருளுபதேசம் செய்த அக்காட்சியை

அல்லவா வெளிப்படுத்தியது! இயற்கையும் இறையுணர்ச்சியுமாகக் கலந்து எங்களை 9 மணிவரையில் தாமதப்படுத்திவிட்டது. அதற்குமேல் குற்ருல நாதர் வழிபாடு நடந்தது. பாரணையும் இனிது நிறைவேறிற்று.

ஐந்து சபைகளுள் ஒன்ருகிய சித்திரசபையையும் சித்திர சபாபதியையும் தரிசிக்க வேண்டுமென்று நிர்வாக அதிகாரி விண்ணப்பித்துக் கொண்டார். அவ்வாறே குற்ருலநாதர் கோயிலுக்கு வடபக்கத்தில் உள்ள சித்திரசபையை அடைந்தார்கள். சித்திரசபை மரத்திற்கும் சிற்பிகளுடைய சிந்தனைக்கும் மன்னர்களுடைய மனத்திற்கும் பணத்திற்கும் குறைவில்லாத காலத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கத்தகுந்த சான்றுகள் உள்ளன. சித்திரம் சிறுவர்கள் கண்ணுக்கு விருந்தாய் சிந்தனை சக்தியை வளர்க்கும் என்று பெரியோர்கள் சொல்லுகின்ருர்கள். முதியவர்கள் சென்ருலும் அந்தச் சித்திரங்கள் அவர்களை அடுத்த அடி எடுத்துவைக்க விடுகில்லை என்ருல் அதன் அழகைப்பற்றி என்னசொல்வது? சித்திர சபாபதியும் சுபச்சித்திரமாகவே தீட்டப்பட்டிருக்கிருர். அம்மையோ நாணிக்கோணி அவரையே பார்த்துக்கொண்டிருக்கிருர், அழுவாரும் ஆவலிப்பாரும் அரற்றுவாருமாக அடியார் பெருமக்கள்சூழ நிற்கின்ருர்கள். வான மண்டலமெங்கும் தேவர்கள் கூட்டம் பூமழை பொழிகின்ருர்கள். இந்த நிலையில் சித்திரம் சிந்தனையைக் கவர்கிறது. அதைச் சுற்றிலும் பல புராண வரலாறுகள் இறைவனுடைய கருணைக்கு எடுத்துக்காட்டுகளாக எழுதப்பெற்றுள்ளன.

சுற்றுப்பிராகாரத்து வடகிழக்குக்கோடியில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி ஆடுகிறார், அவருடைய வலது பாதம் அவரது திருமுடியின்மீது தோய்ந்திருக்கின்றது. இடது திருக்கரமொன்று அவரது வலதுகாற் பெருவிரலைப் பற்றியிருக்கிறது. அப்போதும் அபயஹஸ்தம் நீங்கவில்லை. தமருகமும் எரியகலும் தகும் தகும் எனத் தயங்குகின்றன. அவருடைய ஆட்டத்தின் வெற்றி முகத்தில் இளநகையாய்க் கொப்புளிக்கிறது. கண்களிரண்டும் நெடுந்தூரத்திலே உள்ள ஆடும்பொருள் வேறொன்றை நோக்குகின்றன. திருமுக மண்டலத்தினழகிலே தோய்ந்தவர்கள் அவர்கள் நோக்கும் பொருள் யாது என்று அறிந்துகொள்ள ஆசைப்படாமலிருக்க மாட்டார்கள். தும்புரு, நாரதர், விட்டுணு, நந்தி முதலியோர் தன்னை மறந்து வாத்தியங்களை முழக்கிக்கொண்டு ஆநந்த நடனத்தை அநுபவித்து நிற்கின்றார்கள். இவர்களாலே அது முழுதும் அனுபவிக்கத்தக்கதா? அதனை முழுதுமனுபவிப்பவள் காளியாகிய பராசக்தி ஒருத்தியே. அவள் பதினாறு கரங்களை வீசிநின்று வீரநடம் புரிகின்றாள். ஆனாலும் அவள் கண்கள் கீழ்நோக்கி இருக்கின்றன. முகத்திலே ஒவ்வொரு பகுதியிலும் நாணம் தலைக்காட்டுகிறது. வீரத்துக்கு நாணம் விஷமல்லவா? ஆயினும் என்னசெய்யட்டும். பெண்மை பெண்மை தானே. இவ்வளவு முகபாவங்களை அந்தச் சித்திரங்கள் தெரிவித்து நிற்கின்றன. கண்டு வரும்போது உதிர்ந்த பகுதிகளைத் திருத்தவேண்டும் என்ன செய்யலாமென்று நானும் எனக்குமுன் இருந்த பல நிர்வாகிகளும் யோசித்துக்கொண்டிருந்தோம். ஒன்றும் புரியவில்லை என்றார்

நிர்வாகி. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அப்படி என்ன விசேஷம்? என்றார்கள்.

நிர்வாகி: இதில் பயன்படுத்தப்பட்ட சாய வகைகளைப்போலத் தயாரிப்பதற்குத் தக்க பல அறிஞர்களைக் கொண்டு எத்தனையோமுறை முயன்று பார்த்தோம். ஒன்றும் சரிக்கட்டிவரவில்லை என்று அலுத்துக்கொண்டு சொன்னார்.

ஒருவர்: ஜர்மன் சாயங்கள் மிக உறுதியும் நீடித்து இருக்கக் கூடியதுமாயிற்றே என்றார்.

நிர்வாகி: சிரித்துக்கொண்டு எல்லாம் பார்த்த கதைதான். இந்தச் சித்திரங்கள் எழுதப்பட்டு எவ்வளவு காலமிருக்கும் சொல்லுங்கள் பார்க்கலாம் என்றார்.

எல்லாருடைய மனங்களும் கால ஏணியில் விரைந்தேறிச் சென்றன. ஆனாலும் முடியவில்லை. நிர்வாகி பராக்கிரமபாண்டியன் காலத்துக்கு முந்தியது இன்னும் தன்னுடைய வண்ணம்குன்றாமல் இருக்கிறது பாருங்கள் இவைகள் ரசாயனமுறையால் தயாரித்த சாயங்களல்ல. பச்சிலை மூலிகைகளால் தயாரித்தவை. அப்படித் தயாரிக்கும் சிற்பிகள் நமக்குக் கிடைத்தால்தான் இதில் நாம் கைவைப்பதாக உத்தேசம் என்றார். எல்லோரும் பண்டைத் தமிழ்மக்களுடைய கலவைத்திறம் கைத்திறம் கற்பனைத்திறம் எல்லாவற்றையும் பாராட்டிக் கொண்டே திருமடம் சேர்ந்தோம். பின்னர் ஓய்வும்

சிற்றுண்டியும் முடிந்தபிறகு 3-மணி அளவில் செண்பகா தேவி வழிபாட்டிற்குச் சென்றோம்.

செண்பகாதேவிக்குப் போகும்வழி நமது ரசிகமணி டி. கே. சி. அவர்கள் வீட்டைத் தாண்டித்தான் இருக்கிறது. அங்கே போனதும் டி. கே. சி. யினுடைய பேரன்கள் இருவரும் கூடவே வந்தார்கள். சரிவான பாதையில் சுமார் இருநூறடி சென்றிருக்கலாம். சலசல என ஒரு அருவி விழுந்து கொண்டிருக்கிறது. மலையின்மேல் அடர்ந்த பொழிலினூடே அது வருவதால் எப்போதும் குளிர்ச்சியாகவே இருக்கும். அதனைக் கண்டு களித்தபிறகு மலையின்மேலேறிச் சென்றோம். இருமருங்கும் ஏதோ ஒருவகையான மரங்கள் அடர்ந்திருந்தன, பழங்களும் நிறைந்திருந்தன. குரங்குகள் தின்றுதின்று சிதறியவண்ணம் இருந்தன, அதில் ஒன்றை எடுத்து முகர்ந்தேன். பக்கத்திலிருந்த நண்பர் ஒருவர் பரபரப்புடன் உன்னம் பழத்தைத் தின்றுவிடாதீர்கள் ஜுரம் வந்துவிடும் என்றார். அவர் சொன்ன பரபரப்பைக் காட்டிலும் என் மனம் பரபரப்போடு சங்க இலக்கியச் சோலைகளிலும் புறப்பொருள் வெண்பாமாலையிலும் புகுந்தோடி 'உன்னமரத்தைத் துன்னருங்காலை' உன்னநிலை, உன்னமே முன்னங்குழை என்ற சொற்றொடர்களைக் கண்முன்னே நிறுத்தியது, ஒருவகை இலவமரம் என்ற குறிப்பையும் நினைவூட்டியது. நேர்முகக் காட்சி, அது தவறு என்பதைத் தெளிவித்தது. அதுபோலவே சற்று மேலேறியதும் பசந்த இருமரங்களைப்பற்றிய பேர்களைத் தெரிந்து

கொள்ள மனம் அவாவியது, அது என்னமரம் என்று யான் வினவினேன். ஒரு அன்பர் நறுவளி என்றூர். நறுவளி என்ருல் என்ன ஐயா? விளங்கவில்லை என்றேன். அவர் சித்திரை வைகாசி மாதங்களில்தான் இது தளிர்த்துப் பூக்கும், அர்த்தசாமத்தில் பூக்கும். அதிகமணம் இருப்பதால் தேவர்கள் இந்த மரத்தடியில் வசிப்பார்களாம்; இந்தமரத்தடியில் யாரும் வரக் கூடாதாம் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார், என் சிந்தனை கதையையும் பெயரையும் பற்றிய ஆராய்ச்சியில் தான் ஈடுபட்டிருந்தது. அப்போது அர்த்தயாமத்தில் பூக்கும் என்றதற்கும் மரப்பெயர்க்கும் இயைபிருப்ப தாகத் தோன்றியது. அர்த்தயாமத்திற்கு நள்ளிருள் என்பதுதானே தனித்தமிழ்ப் பெயர், அந்நேரத்தில் பூக்கும்பூ நள்ளிருள் நாறி. அந்தப்பெயர் மரூஉவாகி நறுவளியாக மாறியதோ என்ற சிந்தனை நினைவுக்கு வந்தபோது இலக்கியச் சொற்ருெடர்களும் படிப்படியாக நினைவுக்குவந்து அக்கருத்தை வலியுறுத்தின. இங்ஙனம் குற்ருலமலைக்காட்சி எத்தனையோ மரம் செடி கொடிப்பெயர்களையும் அவற்றின் இயல்புகளையும் அறிந்துகொள்ளும் படிப்பினையாக ஆயிற்று. இவற்றைப் பார்த்துக்கொண்டே செண்பகாதேவியை யடைந்தோம்.

சுமார் 50 அடி உயரத்திலிருந்து சண்பகாடவி அருவி விழுகிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு குகை இருக் கிறது. அதில் யாராவது துறவிகள் தங்கிச் சிலநாள் இருந்துசெல்வது வழக்கமாம். அதற்குச் சிறிதுதூரத்தில் தான் அம்மன்கோயில். அம்மை இருந்த திருக்கோலம்,

கோயில் மகாமண்டபத்திற்கு இரும்புவசி யடைத்துப் பாதுகாப்பு அளிந்திருக்கிறுர்கள். இரவில் நிர்ப்பயமாய் அதற்குள் யாரும் தங்கலாம். அம்மை காளியாயிருந்தாலும் கருணைபொழியும் சாந்த சொரூபியாகக் காட்சியளிக்கிறுள். கோரசொரூபம் காணப்படவில்லை. அம்மைக்குப் பூசை செய்பவர் ஒரு சைவ ஓதுவார் மரபினர். அருவி 50 அடி உயரத்திலிருந்து செங்குத்தாக விழுவதாலும், விழுமிடத்தில் சமதரை அதிகமாக இல்லாததாலும் பிடித்துக்கொண்டு முழுவதற்கு இருப்பு வசிகள் சிதறிப்போய் இருப்பதாலும் யாரும் அதில் பெரும்பாலும் நீராடுவதில்லை. அதனடியில் ஆழங்காண முடியாத ஒரு பெரிய நீர்த்தேக்கம் இருக்கிறது. அதில் தான் நீராடுகிறுர்கள், அதன் பங்கங்களிலுள்ள மலைச் சரிவுகளில் மா முதலிய பழமரங்கள் செறிந்துள்ளன. அவற்றில் மந்திகள் பேரன்பேத்திகளோடு குடும்பம் நடத்துகின்றன. சிறிய தலையையை யுடைய குரங்குக் குழந்தைகள் பாறைகளில் பிடித்து ஏறுவதும் மிகவுயரமான ஏறமுடியாத இடங்களில் பெரிய குரங்குகள் வாலைத் தொங்கவிட அவற்றைப் பிடித்துக்கொண்டு சரமாக ஏறிவிடுவதும் ஒற்றுமை யிருந்தால் செய்ய முடியாத காரியத்தையும் செய்து முடித்துவிடலாம் என்ற உண்மையை அறிவிக்கும் முறையில் காணப்படுகின்றன. தெய்வக்கருணையிருந்தால் எந்தப் பொருளையும் எந்நேரத்திலும் எய்தலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அந்த மலையுச்சியில் அல்வாவும் மலைப்பழமும் வழங்கச் செய்தார்கள். பொதியத் தென்றல் மெல்லெனத் தவழ்ந்தது.

சண்பகாடவியின் அருவியைப் பின்புறக் காட்சியாக வைத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பாறையின் மேல் நின்றுகொண்டிருக்க நிழற்படம் எடுக்கப்பட்டது. இக்காட்சி பழநிமலையுச்சியில் கைக்கோலில்லாமல் கந்தப் பெருமான் துறவுக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் எண்ணத்தை அனைவருக்கும் உண்டாக்கியது. செண்பகா தேவியம்மன் திரு முன்பு யாத்திரை கோஷ்டி அனை வரையும் நிறுத்திப் படம் எடுக்கப்பெற்றது. படத்தைப் பார்க்கும்போதெல்லாம் இடமும் எண்ணங்களும் தோன்றிக்கொண்டேயிருக்கும்.

சண்பகாதேவி மாலை $5\frac{1}{2}$ மணிக்கு இரவு 7 மணியின் இயற்கைத் தோற்றத்தை—இருட்படலத்தை உண்டாக்கி எங்களை மலையிலிருந்து இறங்க ஆணை தந்தாள். அதனால் 6 மணிக்கே திருமடத்திற்கு எழுந்தருளினார்கள், பின்னர் இலஞ்சி முருகனையும் தென்காசி விசுவேசரையும் வழிபடும் திருவுள்ளக் குறிப்பு எழுந்தது. இதற்கு இடையில் ராஜபாளையத்திற்கும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளவேண்டும் என்று வேண்டிக்கொள்ள அன்பர் ராமசாமி ராஜா அவர்களும், அம்பைய ராஜா அவர்களும் மற்றும் சில அன்பர்களும் முறைப்படி சகல மரியாதையுடன் வந்து தரிசித்து விண்ணப்பித்து வேண்டிக்கொண்டார்கள். அநுமதிபெற்று ஊருக்குச் சென்றார்கள். பின்னர் இலஞ்சிக்கும் தென்காசிக்கும் சென்று முருகனையும் விசுவேசரையும் வழிபட்டு வந்ததோடு அங்குள்ள சிற்பத்திறங்களையும் கண்டு மனம் உவந்தார்கள்.

அன்று நவராத்திரி வெள்ளிக்கிழமை யானதால் மேருவுக்கு மகாபிஷேகமும் ஒன்பது பெண் குழந்தைகளுக்குஆடை, கண்ணுடி, சீப்பு முதலிய தானவகைகளும் ஏற்பாடு செய்வதற்கு ஆணை தந்தார்கள். சுமார் 9 மணிக்கெல்லாம் மகாபிஷேகம் தொடங்கப்பெற்றது. தென்காசி திருவாவடுதுறை ஆதீனத்துத் தேவாரப் பாடசாலை மாணவிகளும் ஆசிரியர்களும் வந்திருந்தார்கள். கும்மி கோலாட்டம் முதலியவைகளைத் தேவார திருவாசகங்களைக்கொண்டே செய்து காட்டினுர்கள். மகாபிஷேகம் நடைபெற்றது. அந்தவூர்ச் சம்பிரதாயப்படி மஞ்சள் குங்குமத்தைப் பன்னீரில் கரைத்து அபிஷேகம் செய்வித்தார்கள். விசேஷ அலங்காரங்கள் நிகழ்ந்தன. பட்டாடை சாத்தினுர்கள். நவசத்தி அர்ச்சனை தொடங்கப்பெற்றது. ஆதீன ஓதுவாமூர்த்திகளால் அபிராமியந்தாதி பாராயணம் செய்யப்பெற்றது. பின்னர் தீபாராதனைக்கு முன்பு குழந்தைகளுக்குச் சிற்றுடை, சீப்பு, கண்ணுடி முதலியன வழங்கப்பட்டன. தீபாராதனை முடிந்ததும் திருமடத்திற்கு எழுந்தருளியானுர்கள்.

மகாசந்நிதானமும்—ரஸிகமணியும்.

சற்றேறக்குறைய மணி 11-30 இருக்கும். ரசிகமணி டி. கே. சி. அவர்கள் சந்நிதானமவர்களைத் தரிசிக்க வருவதாகச் சொல்லியனுப்பியிருந்தார்கள். நமது டி. கே. சி. அவர்களே தமிழ்நாட்டில் சிறந்த பண்பாடுமிக்கவர்கள். மனிதத்தன்மையோடு பழகும் பெருங்குணம் அவர்களுக்கே உண்டு எனலாம். அவர்களின் மெலிந்த உடல் உணவால் தளரவில்லை; தமிழ் அமுதத்தைச்

சுவைத்துச் சுவைத்துப் பருகுவதாலேயே வளர் கின்றது என்று ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடிக்கடி சொல்லி மகிழ்வதுண்டு. அவர்களுக்குச் சில நாட்களாகச் சுரம்; நடக்கவும்கூடத் தேகத்தில் தெம்பு இல்லை. அப்படியிருந்தும் மகாசந்நிதானம் அவர்களோடு சிறிதுநேரமாவது அளவளாவவேண்டும் என்ற ஆசை. அதற்காக மகாசந்நிதானம் திருக்குற்றாலம் வந்துசேர்ந்த இரண்டு நாட்களாக டி. கே. சி. அவர்கள் எழுந்து எழுந்து உலாவி நடைபழகிக் கொண்டார்கள். வீட்டி லிருந்து திருமடத்திற்குக் காரில் வந்ததும் சிறிது தூர மாவது நடந்து செல்லவேண்டுமே விழுந்து கும்பிட்டால் எழுந்து நிற்கவேண்டுமே என்பதற்காக அவர்கள் பழகிக் கொண்ட பழக்கங்கள் மிகப்பல. இப்படியாகத் தன் உடல் முடியாத காலத்தும் சைவத்திலும் தமிழிலும் வைத்த ஆசை இருந்து ஊக்க வந்து சேர்ந்தார்கள். தென்காசி ஜில்லா முன்சீப் ஸ்ரீமான் மகராஜபிள்ளை அவர்கள் நல்ல ரசிகர். ரசிகமணி அவர்கள் கொடுக்கும் தமிழமுதத்தை வாங்கிப் பருகிப் பருகி, சுவைத்துச் சுவை கண்டவர்கள். அவர்களும் உடன் வந்திருந் தார்கள். ரஸிகமணியினுடைய அருமை திருமதி அண்ணி அவர்களின் தமிழார்வமும் பெரியோர் பலரைக் காணவேண்டுமென்ற ஆர்வமும் அளவு கடந்தன. திருமதி அண்ணி அவர்கள் தம் பேத்தி ஸ்ரீமதி தீபதங்கம்மாளுடனும் பேரர்களுடனும் வந்திருந் தார்கள். காணிக்கை முதலியன சமர்ப்பித்து விதி முறைப்படி வணங்கினுர்கள். ரஸிகமணி அவர்கள் காலை மடக்கிக்கொண்டு உட்கார முடியாமையால்

குறிச்சியிலேயே அமர்ந்திருந்தார்கள். அவர்களுடைய பண்பட்ட உள்ளம்-சைவத்தினுடைய தொன்மையிலும் இளமையிலும் தெய்வீகத்திலும் தோய்ந்த உள்ளம் இப்படி குறிச்சியில் இருக்கவேண்டியிருக்கிறதே என்று எண்ணி வருந்திற்று. பின்னர் ரஸிகமணி தமிழமுதத்தைப் படைக்க ஆரம்பித்தார்கள். அதற்கு வாயிலாக ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் என்ன ஐயா! தென்காசிக் கோபுரம் இடிந்துவிட்டதே முழு அழகோடு இருந்தால் எப்படி இருக்கும்? என்று தொடங்கினார்கள். டி, கே. சி. அவர்கள் அதுவா சந்நிதானமவர்கள் அதிகமாகச் சுவைத்த பாடலாயிற்றே; அந்தக் கோபுரத்தைக் கட்டுவதற்கு அடிகோலிய பாண்டியன் பராக்கிரமன் எவ்வளவு ஆழமாக அஸ்திவாரமிட்டிருப்பான்? அவன் போட்ட அஸ்திவாரம் எவ்வளவு அருமையாக இருந்திருக்கும். அவன் அதைக் கட்ட பட்டகஷ்டங்களைக் காட்டிலும் அவன் அதனைக்காப்பாற்ற இட்ட திட்டங்கள் எல்லவா பெரிதாயிருந்திருக்கும். அதனாலேயே அவன் வருந்தி இந்தப் பாடலைப் பாடியிருக்கிறான், ஒரு முடி மன்னனுடைய பக்தி எவ்வளவு எளிமையில் பிரவகிக்கிறது பாருங்கள். அவன்,

ஆராயினும் இந்தத் தென்காசி மேவும்பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தாலப்போது அங்குவந்ததனை
நேராகவே திருத்திப் புரப்பார்களை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே

என்கின்றான். வாராததோர் குற்றம் வந்தால் என்றானே; அந்தக்குற்றம் இப்படிவரும் என்று கருதியிருப்பான்

போலும். பணிவதிலும் பாரார் அறியப் பணிவானும். எல்லாராலும் வணங்கப்படுகின்ற முடிமன்னன் எல்லாரு மறிய வணங்கினுன் என்ருல் அங்கேதான் ரசமிருக்கிறது. இப்படி வருந்திய முடிமன்னன் இறந்தான். அதனைக் கண்டு கூறுகின்ருர் ஒரு அறிஞர். இவ்வளவு பெரிய திருப்பணியைச் செய்த பராக்கிரம பாண்டியன் அறு பத்துமூவரோடு அறுபத்துநாலாமவராகத்தான் சென் றிருக்கவேண்டும் என்று பல இடங்களை நினைவுற்றுப் பாடுகின்ருர் பாருங்கள்.

கோதற்றபத்தி அறுபத்து மூவர்தம் கூட்டத்திலோ
தீதற்றவெள்ளிச் சிலம்பகத்தோ செம்பொன் அம்பலத்தோ
வேதத்திலோ சிவ லோகத்திலோ விசுவநாதன் இரு
பாதத்திலோ சென்றுபுக்கான் பராக்ரம பாண்டியனே,

பராக்கிரம பாண்டியன் எங்கெங்கெல்லாமிருப்பான் என்று அவனிருக்குமிடங்களைக் குறித்துக் கூறுகிருர். இப்படித் தமிழமுதத்தைச் சுவைத்துக்கொண்டே வந்து இராமாயணத்தை அணுகினேம், தசரதன் இராம பிரானுக்கு முடிசூட்டுவதாக ஆலோசித்து முடிவு கட்டி, கணிகளோடுகூட மண்டபத்திற்குப் போகிருன். இந்த நிலையைப் பெண்கள் அறிந்தார்கள். ராமனுக்கு மகுடம் என்றவுடனே காதல் கரைகடந்தது. கொங்கைகள் பூரிப்பாகிப் பூட்டவிழ்ந்தன. முடியிட்ட கூந்தல் அவிழ்ந்து கீழேபுரண்டது. ஆடை அவிழ்ந்தன; ஓடுகின்ருர்கள். கரைகடந்த ஆசை ஆட்டம் பாட்டம் எல்லாவற்றையும் உண்டாக்கின, இதைக் கம்பர்,

"ஆடுகின்றனர் பண்ணடை இன்றியே
பாடுகின்றனர் பார்த்தவர்க்கே கரம்
சூடுகின்றனர் சொல்லுவ தோர்கிலர்
மாடுசென்றனர் மங்கையர் நால்வரே"

என்கிறார். அப்படிவந்த பெண்களைக் கோசலை விரும்பிப் பார்க்கிறாள். ஏதோ சந்தோஷ சமாசாரம் இருக்கிறது சொல்லுங்கள் என்று கேட்கிறாள்.

"கண்ட மாதரைக் காதலின் நோக்கினாள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை
உண்டு பேருவகைப் பொருளென்னது
தொண்டை வாயினீர் சொல்லுமின் ஈண்டென்றாள்"

மாதர்கள் உன் பிள்ளையாகிய இராமபிரானுக்குப் பரம்பரையாகவந்த முடியைச் சூட்டுகிறார் என்றார்கள். இதைக்கேட்டவுடனே கோசலைக்கு உவகைவெள்ளம் கங்குகரையின்றிக் கடல்போலப் பெருகுகிறது. அடுத்த கணத்திலே தசரதன் துறப்பான் என்னும் நடுக்கமானது அக்கடலை வடவைத்தீப்போல வற்றச்செய்துவிட்டது.

"சிறக்கும் செல்வ மகற்கெனச் சிந்தையில்
பிறக்கும் பேருவகைக் கடல் பெட்பற
வறக்குமா வடவைக் கனல் ஆனதால்
துறக்கும் மன்னவன் என்னும் துணுக்கமே"

அப்படி மகிழ்ச்சிக்கடல் வற்றிப்போனாலும் உலக நடைக்கொத்து மாராயம் சொன்ன மகளிர்க்கு மாலைகள் கொடுத்தாள். மணி கொடுத்தாள். பொன் கொடுத்தாள். பொருள் கொடுத்தாள். சுமத்திரை

யோடுகூட வேகமாகத் தசரதன் இருப்பிடத்தை அடைந்தாள். வணங்கினாள். என் பிள்ளைக்கு இனி அருள் செய்யவேண்டியது உன்னைப் பொருத்தது என்று கூறினாள். அப்படிக் கூறுகின்றவளைக் கம்பர் பாராட்டுகிறார் "உலகு யாவையும் மன்வயிற்றிலடக்கிய மாயனைத் தன்வயிற்றில் அடக்கும் தவத்தினாள்" என்று. எவ்வளவு சுவையான பகுதி. இப்படியாகத் தமிழ் விருந்து சுமார் இரண்டு மணி நேரம் நடந்தது.

மணி சற்றேறக்குறைய இரண்டு இருக்கும். அதற்கு மேல் பிரியா விடைபெற்று ரஸிகமணி அவர்கள் சென்றார்கள். சிறிதுநேரம் ஓய்வுகொண்டதும் மகாசந்நிதானம் அவர்கள் காலை 5-மணிக்கே எழுந்து அருவியில் நீராடிச் சங்கரன்கோயிலுக்கு எழுந்தருளினார்கள்.

சங்கரநயினார்கோயில்:

இது தாலுக்காவின் தலைநகரம். பாண்டியநாட்டிலுள்ள பஞ்சபூதத்தலங்களுள் பிருதுவித்தலம். பூமிதேவி வழிபாடு செய்ததாக வரலாறு. மூர்த்தியின் பெயர் சங்கரலிங்கர். அம்மை கோமதி. ஒரேதிருமேனியில் சங்கரநாராயணராக எழுந்தருளியிருப்பதால் சங்கரநாராயணர் கோயில் எனவும் இத்தலம் வழங்கப்படும். இப்பெருமானுக்கு வன்மீக நாதர் என்ற திருநாமம் உண்டு. புற்றிடங்கொண்டதாகப் புராண வரலாறு சொல்லும். கோமதி அம்மையாருக்குத் தமிழில் ஆவுடையம்மை என்று பெயர் வழங்குகிறது. சங்கன் பதுமன் என்ற நாக அசுரர்களால் தோண்டப்பட்ட

நாகசுனை ஒன்று கோமதியம்மையின் திருமுன்பு இருக்கிறது. தலவிருக்ஷம் புன்னை.

இத்தலத்தை வழிபட்டுக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ராசபாளையத்திற்கு எழுந்தருளியானுர்கள்.

ராஜபாளையத்தில் :

ராஜபாளையம் எல்லையை யடையும்போது பகல் 10-மணி இருக்கும். கடும் வெய்யில். இருந்தும் பிரமுகர்கள் அனைவரும் வரவேற்க வந்து கூடியிருந்தார்கள். ஊரெல்லையில் ஆங்காங்கும் தோரணங்களும் வளைவுத் தட்டிகளும் கட்டப் பட்டிருந்தன. ஸ்ரீமான்கள் இராமசாமி ராஜா அவர்களும், D. நாராயணசாமி ராஜா அவர்களும், ராஜபாளையம் பண்ணையார் அவர்களும் வரவேற்ருர்கள். ராமசாமி ராஜா அவர்களின் பங்களா ஜாகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு டிப்டி சூபரின்டெண்டு கோமதிநாயகம் பிள்ளை அவர்களும், தாசில்தார் டிப்டி மாஜிஸ்ட்ரேட் உள்ளிட்ட அரசியல் அதிகாரிகளும் பெருமக்களும் வந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு மாலையணிந்து வழிபட்டு விபூதி பிரசாதம் பெற்றுய்ந்தார்கள். மாகேஸ்வர பூஜைக்குவேண்டிய ஏற்பாடுகள் யாவற்றையும் இராமசாமி ராஜா அவர்கள் மிகக் கவனமாகச் சிறப்புடன் நிறைவேற்றியிருந்தார்கள். மாகேஸ்வர பூஜை நடந்தேறியது. பின்னர் 3½-மணியளவில் ராஜபாளையம்

தென்காசியில்



சிற்பச்சிறப்பு



ராஜபாளையம் மில்வாசலில் ஸ்ரீராமசாமிராஜா அவர்கள்
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்கிறார்.

மில்லையும், P. H. சின்னையராஜா மிமோரியல் ஹைஸ் கூலையும் பார்வையிட எழுந்தருளினார்கள். ராமசாமி ராஜா அவர்கள் மில் வாசலில் பெரியதோர் மாலை சூட்டி வரவேற்று மில்லின் ஒவ்வொரு பகுதியையும் காண்பித்தார்கள். ஸர்ஜிகல் காட்டன் மில்லில் தயாரிக்கப்படும் பஞ்சைக் கல்கத்தா முதலிய ஏனைய இடங்களிலிருந்து வரும் பஞ்சோடு ஒப்பித்துச் சோதனை செய்து இதன் தரம் உயர்ந்ததாக இருப்பதை நிரூபிக்க இஞ்சினீயர் அவர்கள் எல்லாப் பஞ்சுகளையும் தண்ணீரிலிட்டும், நெருப்பில் கொளுத்தியும் காட்டினார்கள். தண்ணீரில் போட்டவுடனேயே நீரை உறிஞ்சி அமிழும் சத்தியும் வெண்மையும் மென்மையும் தூய்மையும் இந்த மில்லின் பஞ்சுக்கே இருப்பது விளக்கப்பெற்றது.

பின்னர் மில் கூலிகளுடைய கல்வி முன்னேற்றத்திற்காவே அமைக்கப்பட்ட முன்குறித்த ஹைஸ்கூலிலும் வரவேற்றுப் புதிதாகக் கட்டும் கட்டிடங்களையும் ஸ்ரீமாந் ராஜா அவர்கள் காட்டினார்கள். பிறகு 4½ மணியளவில் சேத்தூர் சேவுகப் பாண்டியத்தேவர் டிஸ்டிரிக்ட் போர்டு ஹைஸ்கூலில் பொது வரவேற்புக்கு ஏற்பாடாகியிருந்தது. அங்கே இராமசாமிராஜா அவர்களால் வரவேற்பு அளிக்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். பக்தியின் அவசியத்தைப்பற்றிச் சுவாமி அபேதாநந்தா அவர்கள் பேசினார்கள். இனியன் யார் என்பதுபற்றி அடியேனும் பேசினேன். மகா சந்நிதானம் அவர்கள் ஆசிகூறு முகத்தான்,

"எந்த உயிர்களும் உலகத்தில் கடவுளருளில்லாமல் கடைத்தேறமுடியாது. அருளை அடைய ஒரே வழிதான் உண்டு. அதுதான் இந்தக் காலத்திற்கு மிக எளிமையானது. அது பக்தி ஒன்றே. பக்தி அவரவர்களுடைய பரிபக்குவ நிலைக்கு ஏற்றவாறு பயன்கொடுக்கும். சேயனாய கடவுளை அணியனாக்குவது பக்தி ஒன்றே. நாம் அன்பு செய்வோர்களுக்கு இன்பத்தையே செய்வோம். அவர்கள் மகிழக்கூடிய காரியங்களைச் செய்தலே நாம் அன்பை வளர்த்தற்குரிய வழி. அதுபோல ஆண்டவன் மீது அன்புசெலுத்த வேண்டுமானால் அவருக்கு விருப்பமான காரியங்களையே செய்தல்வேண்டும். ஆண்டவனுக்கு விருப்பு வெறுப்பு ஏது? வேண்டுதல் வேண்டாமை இலான்தானே கடவுள். அப்படி இருக்க அவனுக்கு விருப்பமானகாரியம் என்று ஒன்று உண்டா? என்று கேட்கலாம். விருப்பு நல்லனவற்றிலும் வெறுப்பு தீயனவற்றிலும் நிகழ்தல் எல்லார்க்கும் இயல்பு. உலகத்து உயிர்கள் எல்லாம் ஆண்டவன் திருமேனி, எல்லாரிடத்தும் செய்யும் அன்பு இறைவனுக்குச் செய்யும் அன்புபோன்றது. ஆதலால் நடமாடுங் கோயில்களாகிய ஆன்மாக்களுக்குச் செய்யும் அன்பே சிறந்த அன்பு.

ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்

என்பது ஞான சாத்திரம்.

மணிவாசகப் பெருந்தகை "அன்பில் அடியேன் ஆனந்தமாய்க் கசிந்துருக" என்று பாராட்டுகின்றார். காரைக்காலம்மையார் "இறவாத இன்ப அன்பு

வேண்டிப் பின் வேண்டுகின்ருர்". ஆதலால் அன்பினுல் இன்பம் கொள்ளவேண்டிய நாம் வன்பினுல் துன்பம் கொள்ளலாகாது. இத்தகைய அன்பை இறைவனிடம் செலுத்திய கண்ணப்பர் இறைவன் கண்களில் குருதி சோரக் கண்டார். ஓடோடியும் வந்தார். இரத்தம் வடிந்துகொண்டே இருக்கிறது. மயங்கினுர். கையில் இருந்த பொருள்களெல்லாம் நழுவின. பூமியில் பதை பதைத்து வீழ்ந்தார். அருகேபோய் துடைத்துத் துடைத் துப் பார்க்கிருர்; நிற்கவில்லை. கண்களில் குருதி சோர் வதன் காரணத்தைத் தேடி அலைகிருர். பரிகாரம்தேட முற்படுகிருர். ஊனுக்கு ஊன் இடுவதாகக் கண்ணையே பெயர்த்து அப்புகிருர். இப்படி அன்பின் நிலை அணு அணுவாக வளர்ந்து மலைபோலாகிறது. அதனுலேதான் யாருமடையாத பேறு அவர்க்குக் கிடைத்தது. பெரிய அனுபூதிமான்கள்கூட அத்தகைய நிலை தனக்கு வர வில்லையே என்று எண்ணி ஏமாறுகிருர்கள். இவற்றை யெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்ருல் அவர் கள் நடந்தமாதிரி நாம் நடக்கவேண்டுமென்பதற்காக. அவர்கள் வழிகாட்டிகள். நாம் வழிப்போக்கர்கள். வழி காட்டியை நம்பிப்போகும் மனிதன்தான் குறித்த இடத் திற்கு விரைவாகப் போய்ச்சேர முடியும். நமக்கு அளித்த வரவேற்பைப் பெரிதும் பாராட்டுகின்ருேம், சமயத்துறையில் இருக்கும் எங்களுக்கு இவ்வளவு பெரிய வரவேற்பளித்ததை எண்ணும்போது உங்க ளுடைய உண்மையான சமயப்பற்று புலனுகின்றது. உங்களனைவருக்கும் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பூர்ண அனுக்கிரகம் செய்வாராக. யாத்திரைக்காக வந்த நமக்கு உங்களை எல்லாம் சந்தித்துப் பேசும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய ஸ்ரீமான் ராமசாமி ராஜா

அவர்களுடைய முயற்சியும் பக்தியும் மிகமிகப் பாராட்டற்பாலன”

என்று பேசிமுடித்தார்கள்.

இரவு 7 மணி ஆனதும் திருமஞ்சனமேற்றுக் கொண்டு இராஜபாளையம் சொக்கநாதர் கோயில் வழிபாட்டுக்கு எழுந்தருளியானுர்கள். இவ்வாலயம் ஸ்ரீ ராமசாமி ராஜா அவர்களுடைய குடும்பத்தாரால் கட்டப்பெற்றது. இப்போதும் ராமசாமிராஜா அவர்கள் இந்த ஆலயத்தைப் புதுப்பித்தும், பல கோயில்களைக் கட்டியும் வருகிருர். ராஜா அவர்களைப் பணக்காரர்கள் என்பதால் மட்டும் உலகம் விரும்பவில்லை. பரமபத்திமான். கீதை திருவாசகம் போன்றவைகளைப் பாராயணம் செய்யும் அன்பர். சமய தத்துவசாத்திரங்களைப் படிக்கவேண்டும் என்ற ஆர்வமுடையவர். இப்படிப்பட்ட இவர் இந்தக் கோயிலை நேர்முகமாகக் கண்காணித்து வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை-

7—10—51 காலை திருமஞ்சன முதலியன முடித்த பிறகு ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் திரு. உத்தண்டராமபிள்ளை முதலிய சைவப்பேரன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தனர். சுமார் 4 மணி அளவில் ஸ்ரீவில்லிபுத்தூர் எழுந்தருளினுர்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் :

ஒரு பெரியார் “ஸ்ரீவில்விபுத்தூர் என்றொருக்கால் சொன்னுர் கழற்கமலம் சூடினேம்” என்ருர். ஸ்ரீ வில்லி

இராஜபாளையம்:

திரு. P. A. C. ராமசாமிராஜா அவர்கள் பங்களாவில்

சுசிந்திரம்கோயிலில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்.

புத்தூர் சொன்னாலும் நாமணக்கும் கேட்டாலும் செவி மணக்கும் திருத்தலம். ஸ்ரீ ஆண்டாளுடைய அவதாரத் தலம். வடபத்ரசயனத்தில் அரங்கமன்னர் எழுந்தருளி யிருக்கிறார். இத்தலத்தில் வைத்யநாத சுவாமி கோயில் என்ற சிவாலயமுண்டு. இந்த இடம்தான் தருமபுர ஆதீன ஆதிகுருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகள் அவதரித்த தலம். இந்த மகாபுருஷ ஸ்ரேஷ்டராகிய சிவாநுபூதிச் செல்வர் அவதரித்த தலத்தைத் தீண்டுவதும் ஒரு சாமநேரம் தங்குவதும் பெரும் புண்ணியம் அல்லவா? அந்த இடத்தில் வாழ் கின்ற மக்கள் அனைவரும் பெரும் புண்ணிய சாலிகள். இன்றைக்கு அவர்கள் வழிவந்த இருபத்து ஐந்தாவது குருமூர்த்திகளை வரவேற்கும் பாக்கியம் பெற்றவர்கள்.

காலை 11 மணிக்கெல்லாம் நகர எல்லையிலேயே வந்து வரவேற்றார்கள். நகரமெங்கும் வளைவுத் தட்டிகளும் தோரணங்களும்கூட வரவேற்றன. ஸ்ரீ ஆண்டாள் கோயில் அருளிப்பாடும் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோயில் அருளிப்பாடும் பார்க்கப்பெற்றன. பிறகு நேரே இந்து ஹைஸ்கூலுக்கு அழைத்துச் சென்றார்கள். இந்து ஹைஸ்கூல் பல ஆண்டுகளாகப் பல பெரியவர்களைப் பயிற்றுவித்த இடம். நமது முதல் மந்திரியாயிருந்த ஸ்ரீமான் குமாரசாமி ராஜாகூட அங்கே படித்தவர்கள் என்பதனை அவர்களுடைய எழுத்துக்களே எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய பள்ளி, குருஞானசம்பந்தர் பள்ளிக்கூடம் என வழங்கப்பெறுமாயின் எவ்வளவு பொருத்தமாகும் என்பதை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

அவர்கள் எண்ணினுர்கள். குருஞானசம்பந்தரோ பெரிய ஞானனுபூதிச் செல்வர். ஞானம் கல்வியறிவும் மெய்யறிவும் என இருவகைப்படும். கல்வியறிவு எல்லாம் மெய்ஞ்ஞான வாயிலாக அமையவேண்டுமாஞல் மெய்ஞ்ஞானிகளின் பெயரை—அவர்கள் வாழ்க்கை வரலாறுகளை—அவர்களுடைய அநுபவங்களைக் கல்வியறிவு பெறும் மாணவர்களும் மாணவியர்களும் அறிந்திருக்கவேண்டிய தவசியம் என்பதைத் திருவுளத்தெண்ணியே ஐம்பத்தையாயிரம் ரூபாய் அளிக்கத் திருவுளங்கொண்டார்கள். அந்த ஹைஸ்கூலுக்குக் குருஞானசம்பந்தர் ஹிந்து ஹைஸ்கூல் என்ற பெயர் சூட்டுவிழாவிற்குத் தலைமை ஏற்றருளவேண்டும் என்று ஹைஸ்கூல் நிர்வாகி ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களும், உறுப்பினர்களாகிய ராஜபாளையம் பண்ணையார் முதலிய பிரமுகர்களும் வேண்டிக்கொண்டார்கள். திரளானகூட்டம். பள்ளிக்கூடத்தின் பிரசங்கமேடை நன்கு அலங்கரிக்கப்பெற்றிருந்தது. எதிரிலே நன்கொடையளிக்கின்ற வள்ளற்பெருமானுகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பெற்றுச் சிவப்புத் திரையிட்டு மூடியிருந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மேடைமேல் அமர்ந்ததும் கடவுள் வாழ்த்து ஆதீன ஓதுவாமூர்த்திகள் சாமிநாத முதலியாரால் பாடப்பட்டது, பின்னர், ஹெட்மாஸ்டர் ஐயங்கார் அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்தனர். நகராண்மைக்கழகச் சார்பாகவும் வரவேற்பளிக்கப்பெற்றது. பின்னர் மகாசந்நிதானம் அவர்கள் பெயர் சூட்டுவிழாவைப் பற்றியதாக:—

"மெய்யன்பர்களே! இந்தப்பூமி ஒரு ஞானபூமி, வைணவப் பெரியார் ஆண்டாள், திருமாலேயே தன் கணவனாக வரித்துக் கொள்ளக்கூடிய சன்மார்க்க நெறியிலே நடந்துக்காட்டி நம்மையெல்லாம் பகவதநுக்கிரகத்திலே ஆழங்காற்படுத்திய அவர்கள் அவதரித்த ஞானஸ்தலம் இது. மேலும் எங்கள் ஆதீன குருநாதர் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் அவதரித்த திவ்ய ஞானஸ்தலம். குருஞான சம்பந்தர் உலகமெல்லாம் சைவ சித்தாந்தச் செந்நெறி மேலோங்கவேண்டும் என்ற திருவருளே காரணமாக அவதரித்தவர்கள். அவர்கள் அவதரித்த புண்யக் கிரஹம் இதோ அடுத்த தெருவில் இருக்கிறது. ஆண்டுகள் சில ஆனதும் தாய் தந்தையரோடு மதுரைக்கு வழிபாடாற்றச் சென்றார்கள். சென்ற அவர்களை ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் அப்படியே ஆட்கொண்டு அநுபூதிமானாக்கித் தமிழ்நாடுய்யப் பணி கொண்டார். அவர்களே நமது ஞானாசாரியர் ஆவார்கள். அவர்கள் அவதாரஞ்செய்த இத்தலத்திலே ஒவ்வொருவரும் அவர்களுடைய நாம பஞ்சாக்கரத்தைச் சொல்லி உய்தல்வேண்டும். சிறுவர்களும் சிறுமியர்களும் அவர்களைப்பற்றி அறிந்து அவர்களைப்போலவே ஞானச் செல்வர்களாக விளங்கவேண்டும் என்பது ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானின் திருவருள் போலும்.

குருவருளே திருவருள். குருவே நமக்குக் கண்கண்ட தெய்வம். குருவுக்குச் செய்யும் பணிவிடையே சிவத்துக்குச் செய்யும் பணிவிடை. ஆதலால் குருவருளே துணையாகக்கொண்டு இருக்கின்ற நாம் குருவினுடைய அவதார ஸ்தலமாகிய இங்கே எல்லாச் சிறுவர்கள் உள்ளத்தும் குருவின் திருப்பெயர் எப்பொழுதும் பதிந்

திருக்க இந்தப் பள்ளிக்குக் 'குருஞான சம்பந்தர் இந்து உயர்நிலைப்பள்ளி' என்று பெயர் சூட்டு விழாவைத் திருவருள் துணைகொண்டு தொடங்கி வைக்கின்றோம். எல்லாம்வல்ல சித்தரான சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் இப்பள்ளி நெடிதுவாழ்க. இவ்வூர்ப் பிரமுகர்கள் எல்லாச் செல்வமும்பெற்று நீடுவாழ்வார்களாக''

என்று ஆசிவழங்கினார்கள். பின்னர் ஸ்ரீமான் உத்தண்டராமப் பிள்ளை அவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானம் அவர்களின் படத்தைத் திறந்துவைக்கும் பேருரையாக,

''தருமபுர ஆதீனத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானம் அவர்கட்கு நமஸ்காரம். பெரியோர்களே! இன்று நாம் ஒரு பெருவிழாவிலே கலந்துகொண்டிருக்கின்றோம். இன்று முதல் இப்பள்ளிக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது என்று சொல்லவேண்டும். இந்த ஊரிலே அவதரித்த சிவாநுபூதிமானே தருமபுர ஆதீன ஆதி குருமூர்த்திகளாக விளங்கினார்கள். இந்த ஊர் மக்கள் அந்தப் பெருமையை இதுவரையில் அறிந்தும் அறியாமலும் இருந்திருக்கக்கூடும். இன்று இந்த மகாசந்நிதானமவர்களுடைய தாராள வள்ளன்மையால் தினம் பலமுறை ஜெபிக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுவிட்டது. தருமபுர ஆதீனம் சமயத்துக்கும் தமிழுக்குமாகச் செய்துவரும் பணிகள் அளவில்லாதன. இப்பொழுது குன்றக்குடியில் இளவரசுப் பட்டமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிக சுவாமிகள் கூட இந்த ஆதீனத்து இளவடியாராக இருந்து பயின்று வந்தவர்களே. இவ்வளவு பெருஞ்செயல்களை யெல்லாம்

ஆக்கி அளிக்கும் பெருமை இந்த மகாசந்நிதானம் அவர்களுக்கே உரியது. ஆதீனத்தில் தமிழ் வடமொழிக் கல்லூரிகள் இவர்களாலேயே ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வளவு பெரிய காரியங்கள் இயற்றிவரும் இவர்கள் திருஉருவப்படம், இவர்கள் அருட்கொடைக்கு இலக்காகிய இந்தக் கலைக்கோயிலில் விளங்கவேண்டியது அவசியம் ஆதலால் அதனை நான் திறந்துவைக்கிறேன்'

என்று பாராட்டிப் பேசினார்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்கும் ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயிலுக்கும் சென்று வழிபாடாற்றினார்கள். பின்னர் பண்ணையார் வேண்டுகோளுக்கிணங்கி பெனிங்டன் நூல் நிலையத்தையும் பார்வையிட்டார்கள். பின்னர் கலாசாலைக் கமிட்டியார் வந்திருந்த பிரமுகர்களனைவருக்கும் ஒரு உயர்தர விருந்து அளித்தார்கள். மாலை மூன்றுமணிக்குச் சுவாமிகள் பிறந்த அவதார ஸ்தலத்தைச் சென்று தரிசித்துவிட்டு 3-30 மணிக்கெல்லாம் தருமைக் கெழுந்தருளத் திருவுளங்கொண்டு 5 மணி யளவில் மதுரைக்கு வந்தடைந்தார்கள்.

மதுரையில் :

திருவாவடுதுறை ஆதீனத் திருமடத்தில் வரவேற்புகள் ஏற்பாடாகி இருந்தன, அங்கு திருமஞ்சனமேற்றுக்கொண்டு சொக்கலிங்கப்பெருமான் ஆலயத்துக்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீமான் சுந்தரேச பட்டர் அவர்கள் அருச்சனை முதலியன செய்வித்துத் தரிசனம் செய்வித்தார்கள். மகாசந்நிதானம் அவர்கள் ஆன்ம

நாயகப் பெருமானையும் அம்மை மீனுக்ஷியையும் வழி பாடாற்றி வலம்வந்து தருமைக்கு வழிக்கொண்டார்கள். மதுரை வரையில் ஸ்ரீமான்கள் பி. ஏ. ஸி. இராமசாமிராஜா அவர்களும், எஸ். எஸ். அம்பைய ராஜா அவர்களும் வந்து வழியனுப்பி வணங்கி வழிபட்டுய்ந்தார்கள். இவர்களுடைய பேரன்பு மிக மிகப் பாராட்டற்குரியது. மதுரையிலிருந்து மாலை 6-30 மணிக்குப் புறப்பட்டு இரவு 11-30 மணிக்கெல்லாம் தெய்வத் திருவருள் துணைகொண்டு தருமை வந்தடைந்தார்கள்.

தருமையில் :

22—9—51-ல் பிரியாமற் பிரிந்த பெருமானை 7—10—51-ல் மதுரையில் கண்டு அவர் உடன்வர தருமைக்கு எழுந்தருளியது சிந்தித்து இன்புறக்கூடிய நிகழ்ச்சியாகும்.

8—10—51 காலை வழக்கம்போலவே சொக்கலிங்க பூசைமுடிந்ததும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்திற்கும் பல சிவஸ்தலங்களின் விபூதிப் பிரசாதங்களும் இராமேசுவர தீர்த்த விபூதிப் பிரசாதங்களும் அனுப்பப்பெற்றன. சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் இராமேசுவர யாத்திரை இனிது நிறைவேறிற்று.

வான்முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம் இயற்றிவரும் பணிகள்.

1. தேவாரப்பாடசாலைநிறுவித் தெய்வத்தமிழ்வளர்ப்பது.

2. சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.

3. சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.

4. சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.

6, அறிஞரைக் கொண்டு ஆலயம் தோறும் அறவுரை வழங்குவது.

7. பிரசார வாகனத்தின் மூலம் தமிழ்நாடெங்கும் சமயம் வளர்ப்பது.

8. ஆங்கிலக்கலாசாலையில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

9. ஆதீனக் கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.

10 தமிழ்க்கல்லூரிநிறுவி வித்துவான் தேற்விற்கனுப்புவது

11 வடமொழிக்கல்லூரி நிறுவிச் சிரோமணித் தேற்விற்கு அனுப்புவது.

12 ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது.

13 நூல்ஆராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.

14 விஞ்ஞான மெஞ்ஞான நூல்களை வெளியிட்டு வழங்குவது.

15 சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.

16. "ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகை வாயிலாகச் சமய உண்மைகளை அறிவுறுத்துவது.

17. சமயக்கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

18. தமிழ்ப்பணி சைவப்பணி செய்பவர்க்குதவுவது.

19. தமிழ்நாட்டுத் தல வரலாறுகளை எழுதுவித்து வழங்குவது.

20 புத்தக சாலை அமைத்துப் பழந்தமிழ் நூல்களை பாதுகாப்பது.

21. நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது.

22 பொருளும் புத்தகமும்அளித்து ஏழைமாணவர்களுக்கு உதவுவது.

23. மாயூரத்தில் பிரசவ ஆஸ்பத்திரி கட்டியது.

24. குடிமக்கட்கு அடிக்கடி எண்ணெய் முழுக்கும் அன்னமும் அளித்து வருவது.

25. காந்தி நிதி, ஹரிஜனபண்டு, அகதிகள் நிவாரணநிதி, காசநோய் ஆஸ்பத்திரி உதவிநிதி முதலிய பற்பல பொதுஸ்தாபனங்கட்குப் பெருந்தொகையளிப்பது முதலியன.